# ஸ்ரீராஜலக்ஷ்மி

டிசம்பர் - 1937

மலர் - 1 இதழ் - 12

உ

JL
2211,N37
N37.1.12
159546

1093

REGD. No. M-3660 கிரஹலக்ஷ்மி 1st DECEMBER 1937

37.



VOL. 1 **GRIHALAKSHMI** No. 12

KING OF TONICS




அமிர்தா


# கிரஹலக்ஷ்மி

## ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை




பிரசுரிப்பவர்

டாக்டர் எஸ். சேஷகிரி ராவ்.

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ., (ஆனர்ஸ்)

மலர் 1] டிசம்பர் 1937 [இதழ் 12

PRINTED AT THE LODHRA PRESS, ROYAPETTAH MADRAS.




159946

# கிரஹலக்ஷ்மி

## சந்தா விவரம்

வருடசந்தா ரூ. 3, ஆறு மாதம் 1-8-0. 6 மாதத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 4-8-0. தனிப்பிரதி விலை அணா 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாரராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணா போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. வீண் அதிகச் செலவுதான்.

## விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு $12\frac{1}{2}$% கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## ஏஜண்டுகள்

பிறிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினால் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனுவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

## பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெறாத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

## சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோருகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

## குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே. என். கேசரி, 15, வெஸ்ட்காட் ரோட், ராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும்.







# ஜ்வரங்களுக்கு

ரோகங்களில் முதன்மையானது ஜ்வரம். பலவித ஜ்வரங்களினால் நாம் தாக்கப்படுகிறோம். வாதஜ்வரம், பித்த ஜ்வரம், கப ஜ்வரம் முதலிய எல்லாவித ஜ்வரங்களையும் ஆச்சர்யப்படும்படி நிவர்த்தி செய்வதில் முதன்மையானது

# அர்க்கா

இந்த அர்க்காவை கடந்த இருபத்தைந்து வருஷங்களாய் ரோகிகளும், வைத்தியர்களும் உபயோகித்து இதன் குணநிச்சயத்தை நன்கு உணர்ந்து புகழ்ந்திருக்கின்றார்கள். இளங் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். இன்புளூவென்ஸாவை கண்டிப்பதில் கீர்த்தி பெற்றது.

ஜ்வரம் கண்டவர்களுக்கு இதை எந்த ஸ்திதியிலும் கொடுக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| இதன் விலை | 6 | அவுன்ஸ் புட்டி | ரூ. 2 8 0 |
| ,, | 3 | ,, | ,, 1 8 0 |
| ,, | 1 | ,, | ,, 0 8 0 |

**கேஸரி குடீரம் - ராயப்பேட்டை - மதராஸ்**

# பொருளடக்கம்


1. கிரிஜா பரிணயம் .... .... .... 809
2. மாதர்களின் எழுச்சி .... .... .... 812
3. குழந்தையின் கனவு — ஸ்ரீமதி அம்புஜ .... .... 816
4. அகில இந்திய ஸ்திரீகள் மஹாநாடு — ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி .... 817
5. விதவையின் முடிவு — திரு. ஆ. வெ. சுப்பிரமணியம் .... 820
6. மாதரும் மாதவிடாயும் — "கோகிலம்" .... .... 822
7. திருவிளக்கேற்றித் தெய்வந் தொழுமின் — "பர்வதகுமாரி" .... 825
8. தவளாதேவியின் தேசாபிமானம் — "சமுனி" .... .... 828
9. தட்டுவது யார்? .... .... 834
10. நங்கையர் அழகு — திரு. டி. கே. கோவிந்தய்யர் .... .... 836
11. கனகம்தைத்த 'க்ராஸ்ஸ்டிச்' படம் — ஸ்ரீமதி. எஸ். ஆர். ஜயலக்ஷ்மி .... 838
12. மனமற்ற விவாகம் — ஸ்ரீமதி கோமளம் .... .... 843
13. பெண்களுக்கு தேகப்பயிற்சி — ஸ்ரீமதி சந்திராதேவி .... 846
14. கும்பகோணம் — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் .... 847
15. மங்கோலியா — ஸ்ரீமதி ஜி. கிரிஜா .... .... 851
16. ஜவ்வரிசி இட்டிலியும், அவல் ஹல்வாவும் — "ஸரோஜா" .... 856
17. தேகாரோக்கிய விதிகள் — ஸ்ரீமதி. எஸ். கமலா .... .... 858
18. ஸ்ரீமதி சரஸ்வதிபாய் — "கண்ணன்" .... .... 861
19. மாலதி—மாதவன் — ஸ்ரீமதி. எம். வி. சிங்காரம்மாள் .... 864
20. செய்தித்திரட்டு .... .... .... 870
21. விசித்திரம் ஆனால் வாஸ்தவம்.... .... .... 872
22. கதம்பம் .... .... .... 874
23. சினிமா செய்திகள் .... .... .... 876
24. ஆசிரியர் குறிப்புகள் .... .... .... 877
25. பஞ்சாங்கம் .... ... .... 879
26. பிரசவ அட்டவணை .... ... ....
.... 880


மூவர்ணப்படங்கள்


1. கிரிஜா பரிணயம்
2. ஸ்ரீமதி சரஸ்வதிபாய்




8-DEC1937

# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

பெங்களூர்: மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மெண்ட்.

கோலார் கோல்ட் பீல்ட்ஸ்: திரு. எம். ஏ. தாஸ், கண்ணபிரான் தெரு, ராபர்ட்ஸன் பேட்டை, கோலார் கோல்ட் பீல்ட்ஸ்.

திருப்பதி: மெஸர்ஸ் ஒய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்செண்ட்.

சேலம்: எம். எஸ். ராஜகோபால், கோபால்ஸ் நியூஸ் மார்ட், சின்னக்கடைத் [தெரு.

மதனபள்ளி: என். ராதாகிருஷ்ணய்ய செட்டி, நியூஸ் ஏஜண்ட்.

திண்டிவனம்: திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.

சித்தூர்: திரு. வி. வெங்கடரமணய்ய செட்டி, 163, பஜார் ரோட், சித்தூர்.

வேலூர்: திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.

ஆரணி: திரு. என். நாராயணசுவாமி நாயகர், கெமிகல் ஷாப்.

மதுரை: திரு. ஜி. வெங்கட நாராயண அய்யர், ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர், 248, மேலமாசி வீதி.

திருநெல்வேலி டவுன்: திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழரத வீதி.

தூத்துக்குடி: மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட்.

பீமாவரம்: திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார் பார்மஸி.

நிடதவோல்: திரு. கே. ஸி. சென்ன கேசவய்யர், வியாபாரி.

ஹனுமகொண்டா: திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.

சென்னை: மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.

கொழும்பு: திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, நார்ரிஸ் ரோட்.

யாழ்பாணம்: திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.

ரங்கூன்: திரு. வி. பகவதி சாஸ்திரி, 244, பேர் தெரு.

கோலாலம்பூர்: திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் F.M.S.

ஹிஜ்ஜின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**கிரஹலக்ஷ்மி காரியாலயம்,**
**ராயப்பேட்டை, :: சென்னை.**



# காதல் வெள்ளம்

வானிழிந்த

கங்கைச் சுழியனைய உந்தியாள் — தங்கிய
அங்கை கமலம், அடிகமலம், மான்நோக்கிய
கொங்கை கமலம், முகம் கமலம், பொங்கெழிலாள்,
மலைமங்கை பார்வதியாள்,

தெள்ளியநீர்


தாழுஞ் சடையான் சடாமகுடந் தோன்றுதலும்
வாழ் அவன்மேல் மம்மர் மனத்தளாய்

சூழொளியான்

தார்நோக்கும், தன் தாரும் நோக்கும், அவனுடைய
ஏர்நோக்கும், தன்னெழில் நோக்கும், பேரருளான்
தோள்நோக்கும், தன்தோளும் நோக்கும்,

அவன்மார்பில்

நீள்நோக்கம் வைத்து நெடிதுயிர்த்து நாண் நோக்காது
உள்ளம் உருக ஒழியாத வேட்கையாம்
வெள்ளத்திடை யழுந்தி வெய்துயிர்த்தாள்.



8-DEC1937
MADRAS

# கிரிஜா பரிணயம்

கடவுள் இன்ப உருவினன். அவன் படைத்த உலகம் இன்பமயம். அவ்வுலகில் பிறந்தார் யாவரும் இன்பம் நுகரவே பிறக்கின்றார்கள். அவர்கள் இன்பம் அடைவதே இறைவனுக்கின்பம். அவன் படைத்த ஒவ்வொரு வர்க்கத்திலும் இந்த இறைவனின் எண்ணம் தெரியக் கிடக்கின்றது. ஒரு உதாரணம்; படைக்கப்பட்ட உலகம் ஆண், பெண் என்ற இரு கூறுகளாய் அமைந்திருப்பதைப் பாருங்கள்! இன்பம் கூடுவதற்கு இப்பாகுபாடு இல்லாவிட்டால் இவ்வுலகமே பாலைவனமாய்த் தானிருக்கும். அதாவது சஞ்சாரம் இன்றி அழியும். இப்பாகுபாட்டை இன்னும் ஊன்றி நோக்கினால் ஒவ்வொரு தனி பிறவியும் ஆணும் பெண்ணுமாய் இலங்குவதுடன் இவ்விரு சாராரும் தத்தமக்குள்ளே சரீர அமைப்பிலும் வேறுபாடுடையவர்கள். மனநிலையிலும் அவ்வாறே. ஆண் உடம்புக்கும், பெண் உடம்புக்கும் வித்தியாசம் உள்ளதுபோல் "ஆண்" குணத்துக்கும் "பெண்" குணத்துக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! இவ்விடத்தில் இன்னும் சற்று ஆழ்ந்து நோக்குங்கள். இவ்விருபாலரின் ஒற்றுமைக்கும், இன்பத்துக்கும் காரணம் இந்த வேறுபட்ட சரீரமும் குணநிசயங்களுமே யல்லவா? ஆகவே படைப்பில் ஆண் பெண் எனவகுத்த அந்திவண்ணன் அனைத்துலகும், முக்கியமாய் மனித உலகம் இன்பம் இனிதடைய வேண்டியே இயற்றிய இயற்கை அற்புதம் தெளிவாகின்றதல்லவா?

பார்வதி பரிணயம் என்ற தலைப்பின் கீழ் எதனையோ பிதற்றுகின்றேன் என்று எண்ணுகிறீர்களா? இல்லை, இல்லை. நான் மேல் கூறிய மனோதத்துவ உண்மையை உலகத்தாருக்கு விளக்கவே சர்வலோக நாயகனாகிய பரமேஸ்வரன்

வையம் முழுதும் ஈன்றெடுத்தும் வயது முதிராமடப்பாவையாம் நம் அன்னைபராசக்தியை "வையம், புணர்வறு போகம் மூழ்க புருடனும் பெண்ணுமாகி மணவினை முடித்தான்" என்பதே பார்வதி கல்யாணத்தின் உண்மை. சுவாமி விவேகானந்தர் சொன்னதுபோல் யோகிகளுக்கெல்லாம் யோகியாகிய சிவபெருமான் மோன நிலையைக்கொண்டார். பர்வத ராஜகுமாரியாகிய பார்வதியம்மையார் தான் சுயமாய் "இப்பேயாண்டியை" வரித்துத் தவங்கிடக்கின்றாள். எம்பெருமான் மோன நிலையடைந்ததும் உலகம் தொழில் செய்யாது ஸ்தம்பிக்கின்றது. தேவர்கள் பார்த்தார்கள். வேதம் ஓதும் நான்முகனையும், தேவநாதன் இந்திரனையும், நீதி பயக்கும் திருமாலையும், சோதி தேடும் முனிவர்களையும் மற்றயாவரையும் தன் கணையால் வாட்டவல்லவன் மன்மதன் என்பதை அறிந்து, அவர்கள் இந்த மால்மைந்தனைக் கண்ணுதல் கடவுளிடம் மலர்க்கணை ஏவ விடுத்தார்கள். அன்னானும் அவ்வாறே செய்து அரன் விழியால் அழிந்து பிறகு உயிர்ப் பிச்சை பெற்றான். எனினும் தேவர்கள் சூழ்ச்சி பலித்தது.

சிவபரம்பொருள் திருவிழி திறக்கும் செவ்வி, தவமெலாம் உயிர்த்தாலன்ன சைலச் செல்வி அவள் நூபுரம் ஒலி செய இளநலம் பொலிந்து இளநடனம் செய்து இன்னிசை உயிர்த்தாள். அதைக் கண்ணுற்றதும் எம்பெருமான், லோக நாயகியை வதுவை செய்து மகிழ்ந்தான்.

இதில் விசேஷம் என்னவென்றால் யோகியருக்கும் ஆண் பெண் விருப்பத்தை அறவே ஒழிக்க இயலாது என்பதுதான்.

தேவியார் எண்ணமும் கைகூடியது என்பதே புராணத்தின் சங்கிரகம். இதில் நாம் அறியக்கிடக்கும் அறிவுப் புதையல்கள் அளவில, சிலவருமாறு. படத்தைப் பாருங்கள். அம்மை அப்பன் முகத்தைப் பார்த்து காதலால் மயங்குகிறாள். எம் தேவனும் நம்மாதாவின் முகங்கண்டு "அழகு ஒழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிர் ஓவியம்" இதுதான் என்று நிச்சயிக்கிறான். இந்நிலையில் திருமணம் நடக்கிறது. இம்மட்டும் எற்றுக்கு? அவன் வழிவந்த பல மதங்கொண்ட நாம் எல்லோரும் அவர்களைப்போல் காதல் மணத்தைக் கடைப்பிடித்தற் பொருட்டன்றோ? எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள் அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான். ஆகையால் இந்த நுண்மையை, கடவுள் இன்பமே நமக்குக் கொடுக்க எக்காலத்தும் ஆசைப்படுகிறார் என்ற திண்மையை, காதல் இல்வழி சாதல் நல்வழி என்ற உண்மையை, அறிந்த சுந்தரமூர்த்தி நாயனார் தன் காதலையும், தன் காதலிக்கும் தனக்கும் மெய் உறவாகிய கடவுளையும் எண்ணும் போது "பண்வயத்த மொழிப்பாவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றுயர் பெருமானே" என்று பரவுகிறார். முதலில் சொல்லியபடி கடவுள் உடல் கூறு, உள்ளத்து அமைதி இரண்டின் வேறுபாடுகளாலே உலகில் ஆண் பெண் இன்பமும் அதனாலேயே பேரின்பம் பெறும் விதமும் அமைத்திருக்கிறார் என்பதும் இதில் தெளிவாகிறது. இம்மட்டோ! மதுரை மீனாக்ஷியம்மை எப்படித் தன் நாயகனை வரித்து தன் அரசும் கொடுத்து தானே முதல் பொருளாய் உலகாள்கிறாள் என்ப





தையும் உன்னுங்கள். முக்கியமாய் சிவபெருமான் அர்த்தநாரியாய் இருக்கும் அர்த்தம் தான் என்ன? கம்பை நதியில் காமாக்ஷியம்மையார் வெள்ளத்திருந்து காப்பாற்றத் தன் இஷ்டலிங்கத்தைத் திரட்ட, அன்பினால் தன் முலைத்தடம் படவும் லிங்கம் குழைந்து காட்டியதின் தத்துவம்தான் என்ன? எந்தக் கதையை எடுத்தாலும் காதல் மணத்தின் பெருமை தானே பறை சாற்றப்படுகிறது. துரௌபதை சொன்னதென்ன? அர்ச்சுனன் வராதொழிந்தால் "மீண்டு எரிபுகுவன்," பிறந்த அக்னிக்கே இரையாவேன் என்றாளே; தமயந்தியின் திடத்தைப் பாருங்கள்! "அன்னம் சொன்ன அண்ணலுக்கே என் மாலை உரித்தாகட்டும்" என்று தேவர்களையும் மதியாது சொல்லவில்லையா? இப்பேர்ப்பட்ட காதல் தத்துவத்தில், தெய்வ நிகழ்ச்சியில், உடம்பும் உயிரும் ஒன்றி அன்றில் என்ன அறிவு கடந்து அன்பு ததும்பும் அற்புதத் தவநிலையில், மணம் என்னும் இந்த மகா உன்னதமான ஏற்பாட்டில், வழக்கம், வம்பு, ஜாதி, உயர்வு, தாழ்வு, அது, இது என்று பல திறப்பட்ட பேயாட்டங்கள் எதற்கு? கடவுள் கட்டளையை மீறுவது நாஸ்திகம் என்றால் அவன் ஏற்பாட்டை புறக்கணிப்பதும் நாஸ்திகம்தானே! "காதல் இருவர் கருத்தொத்து ஆதரவு பட்டதே இன்பம்" என்று ஒளவையார் சொன்னதும் இந்த கொள்கையை வற்புறுத்தத்தானே! ஏன் நான் இதை எழுதுகிறேன் என்றால் நான் பட்ட இன்பம் உலகம் படட்டும் என்றுதான். "நான் என் காதலனையே கல்யாணம் செய்து கொண்டேன்" என்றால் அது எவ்வளவு பெருமையுள்ள பெருவாழ்வு. காதலித்து மணம் செய்யாவிட்டாலும், மணம் செய்து காதல் செய்யாவிட்டாலும் இரண்டும் சகிக்காத சழக்கு அன்றோ. ஆகையால் ஆஸ்திகம் பேசி நாஸ்திக மணம் நடத்தாமல், மணத்திலும் ஆஸ்திகம் தழைக்க அடிகோலுங்கள். ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதைக் கடைப் பிடித்தால் சாஸ்திரம் என் செய்யும், சம்பிரதாயம் என் செய்யும்; கோத்திரம் என் செய்யும், குலம்தான் என் செய்யும். சற்புத்திரப் பேறுதான் மணத்தின் நோக்கம் என்றால், இளமையும், எழிலும், அறிவும் ஆற்றலும், தோற்றமும் படைத்த முருகனை அளித்தது பார்வதியின் காதல் மணமன்றோ? விரிவு வேண்டின் காளிதாசனுடைய குமார சம்பவத்தையும், கச்சியப்ப சிவாசாரியாரின் கந்த புராணத்தையும் பாருங்கள். அறிவு வெளிச்சத்தில் அவற்றை ஆராயுங்கள்.

"எங்கணும் நிறைந்த எங்குருநாதா
கருவலி தொலைக்கும் பெருமலை மருந்தே
கருணை சூல் கொண்ட பெரிய வானமுகிலே
சிற்றிடைக் கருங்கட் பொற்றொடிக்காரத்தாள்
ஆகமார் வனமுலை யணையும்
போகமார் இதழிப் பூங்கண்ணியனே."

# : : மாதர்களின் எழுச்சி : :

நவம்பர் மாதம் முதலிரண்டு வாரங்களிலும் தேசத்தின் பல பாகங்களிலும் மாதர்களின் மஹாநாடு கூடின. பல திறப்பட்ட விஷயங்களைப்பற்றியும் பிரசங்கங்களும், விவாதங்களும் செய்யப்பட்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. பொதுவாக ஸ்திரீகளிடை ஒருவித புத்துணர்ச்சியும், எழுச்சியும் உண்டாயிருக்கிறது என்பதை இக்கூட்டங்களும், வைபவங்களும் நன்கு புலப்படுத்துகின்றன. கூட்டங்களின் நடவடிக்கைகளில் ஏராளமான ஸ்திரீகள் கலந்து கொண்டார்கள் என்ற செய்தியைக் கண்டு உள்ளம் பூரித்தோம். அதுமட்டுமல்ல. ஸ்திரீகள் தங்கள் சமூக விஷயங்களில் மட்டுமின்றி இதர தேசிய விஷயங்களிலும் அக்கறை காட்டிவருகிறார்களென்ற விஷயம் சில தீர்மானங்களினின்றும் தெளிவாகிறது. குறிப்பாக அநேக மகாநாடுகளில் ஹிந்தி கட்டாய பாடமாக ஏற்படுத்துவது ஆதரிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் சர்க்கார் எல்லா விடங்களிலும் மதுவிலக்கு சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று எல்லா வருஷாந்திர விழாக்கூட்டங்களிலும் ஒரு மனதாக கோரப்பட்டிருக்கிறது. நாம் முன்பு ஒரு சமயம் குறிப்பிட்டிருப்பதுபோல் மதுவிலக்கினால் பெரிதும் நன்மையடைபவர்கள் ஸ்திரீகளே. அதை சகோதரிகள் நன்கு உணர்ந்து சர்க்கார் மதுவிலக்கை சகல விடங்களிலும் அமுலுக்குக்கொண்டுவர வேண்டுமென்று கேட்டிருப்பதை நாம் பாராட்டுகிறோம்.

கல்வி சம்பந்தமாகவும் மாதர்கள் மிகவும் கவலை கொண்டிருப்பது ஓர் நற்சகுனமே. "பெண்கல்வி, பெண்கல்வி" என்று கதறியும் இன்று இருக்கும் நிலைமை என்ன? ஸ்திரீகளில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டுபேருக்கு மேலில்லை என்று நினைக்க எந்த சகோதரியின் மனம்தான் கொதிக்காது? எனவே அவர்கள் யாவரும் ஏகமனதாக மகாத்மா காந்தியடிகள் வகுத்த வார்தா கல்வித் திட்டத்தில் கூறிய ஏழு வருஷ கட்டாய இலவச ஆரம்பக் கல்வி திட்டத்தை ஆதரித்துள்ளார்கள். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றும், கல்வி அறிவுடையவரே கண்ணுடையவர்கள், மற்றவர்கள் வெறும் புண்களே உடையவர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பேர்பட்ட கல்வியே இதர சகல விஷயங்களுக்கும் அடிப்படையாகும். ஆகையால் சர்க்கார் வார்தா திட்டத்தை தயங்காமல் அமுலுக்குக் கொண்டுவர வேண்டியதற்கு மாதர் ஆதரவு இருக்கிறது.

மேலும் சமூக முன்னேற்ற சம்பந்தமாயும் சில தீர்மானங்கள் நிறைவேறியுள்ளன. சாரதா சட்டம் ரொம்பவும் எளியது என்றும் அது இன்னும் தீவிரமான முறையில் திருத்தப்பட வேண்டுமென்றும் பொதுவாக எல்லா ஸ்திரீகளும் விரும்புகிறார்கள். சாரதா சட்ட திருத்த மசோதா இந்திய சட்டசபையில் விசாரணையிலிருந்து வருகிறது. அதை சகல



மாதர் மஹாநாடுகளும் ஒரே மனதாக ஆதரித்துள்ளன. சொத்துரிமைகள் சம்பந்தமாகவும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள தாரதம்மியங்களும், அநீதியான வித்தியாசங்களும் ஒழிக்கப்பட்டு சமபாத்தியதைகளும், உரிமைகளும் வழங்கவேண்டும் என்றும் மாதர்கள் கேட்கிறார்கள். இது வெகு நாளையக் கிளர்ச்சி. இதில் அவர்கள் கட்சி நியாயமானதே. இந்த அநீதியும் ஒழிய வேண்டும். விவாஹ விதிகளிலும், முறைகளிலும் சட்டரீதியான மாறுதல்கள் கோரப்பட்டிருக்கின்றன. ஒரு சில யோசனைகள் குறிப்பிடத்தக்கன. ஸ்ரீமதி கஸின்ஸ் பதினெட்டு வயதுக்குட்பட்ட மங்கையை ஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஆடவருக்கு மணம் செய்வது சட்ட விரோதமாக்கப்பட வேண்டுமென்று கொண்டுவந்து நிறைவேற்றி வைத்த தீர்மானம் மிகவும் போற்றத்தக்கது. பணத்துக்காகவும் இதர காரணங்களுக்காகவும் கிளி போன்ற கன்னிகைகளை கிழடுகளுக்குக் கொடுத்துப் பலவித கஷ்டங்களை அவர்கள் அடையும்படி செய்யும் வழக்கம் தடைப்பட வேண்டும். கிளியை வளர்த்து பூனைக்கு பலியிடுவதை சமூகம் வாளா பார்த்துக்கொண்டிருக்கலாமா? இருதார பலதார மணங்களைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இது போன்ற பிரச்சினைகள் நன்கு ஆராயப்பட்டு தீர்க்கப்பட வேண்டும்.

ஸ்திரீகள் தீண்டாமையைக் கண்டித்திருக்கிறார்கள். தீண்டாமையை நாட்டைவிட்டுத் துறத்த வேண்டியது அவசியம் என்பது யாவரும் உணர்ந்ததே. இதற்கு ஸ்திரீகளே ஆதரவு கொடுத்திருக்கும் போது இந்த அநீதி வெகு சீக்கிரம் மறையும் என்று எதிர் பார்க்கிறோம். கிராமப் புனருத்தாரணம் முதலிய விஷயங்களிலும் மங்கையர் பங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது. இது பற்றியும் நாம் முன் ஒரு சமயம் குறிப்பிட்டிருக்கிறோம்.

பொதுவாகத் தீர்மானங்கள் எல்லாம் நன்றாகவே இருக்கின்றன. ஆனால் நம் சகோதரிகள் தங்கள் மஹாநாட்டின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர உருவான வேலைகள் செய்யவேண்டும். வருஷத்திற்கொரு முறை ஏதோ ஒரு நகரத்தில் கூடி அழகான பந்தலிலே பல பாஷைகளில் பேசிவிட்டு மறு வருஷம் நவம்பர் மாதம் வரும்வரை தூங்கிக் கொண்டிருந்து இதே தீர்மானங்களை நிறைவேற்றுவதால் யாது பயன்? குறிப்பாக சுதேசியை ஆதரித்தும், ஜப்பானிய சாமான்களை பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றி விட்டு 'மலிவு, மலிவு' என்று பகட்டான விதேசிப் பொருள்களையும், ஜப்பானியப் பொருள்களையும் மாதர்கள் ஏதேஷ்டமாக வாங்குவதை படித்த சகோதரிகள் பார்த்துக் கொண்டு இருப்பதால் என்ன பயன்?

படித்த மங்கையர்கள்கூட ஆடம்பரமான வஸ்துக்களின் மீது மோஹங் கொண்டு திரிவதைக்காண நம் மனம் துடிக்கிறது. தவிரவும் மாதர் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சகோதரிகள் தங்கள் வேலையை நகரங்களில் மட்டும் செய்வதால் ஒருவித பலனும் ஏற்படாது. கிராமாந்திரங்களில் சென்று விஷய ஞானத்தை பரப்பவேண்டும். அங்கங்கே

மாதர்களின் சங்கங்கள் நிறுவி தொடர்ச்சியான பிரசாரமும், நிர்மாண வேலையும் நடந்துவரவேண்டும். அப்பொழுதுதான் இந்த தீர்மானங்கள் வெறும் ஏட்டுச் சுரக்காயாகமல் வனித குலத்துக்கு கிரியாம்சையில் நன்மை பயக்கும். ஸ்திரீ தலைவர்கள் ஊர் ஊராகப் பிரயாணம் செய்து புத்துணர்ச்சியையும், நவயுகத்தின் பிறப்பையும் அதன் செய்தியையும் சகல ஸ்திரீகளும் நன்கு உணரும்படி செய்ய வேண்டும்.


ஸ்திரீகளின் பிரதிநிதிகளாக இன்று ஆங்காங்கு சட்டசபைகளில் வீற்றிருக்கும் நம் சகோதரிகளுக்கு ஒரு சில வார்த்தைகள் இச்சந்தர்ப்பத்தில் நாம் சொல்ல வேண்டியதிருக்கிறது. அவர்களில் பெரும் பான்மையோர் காங்கிரஸ் கட்சியின் சார்பாகவே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அக்கட்சியே மெஜாரிட்டி கட்சி. அக்கட்சியார் தீவிர சமூக சீர்திருத்தங்களை எதிர்க்கமாட்டார்கள் என்பதே பொது ஜனங்களின் நம்பிக்கை. அதிலும் காங்கிரஸின் ஜயக்கொடியை நாட்ட பலவித தியாகங்களையும் செய்த ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்கான திட்டங்களை எந்த காங்கிரஸ் சர்க்காரும் எதிர்க்கத் துணியமாட்டார்கள். சந்தர்ப்பம் வெகு அனுகூலமாகவே இருக்கிறது. இப்படி இருக்க நம்மாதர் பிரதிநிதிகள் பிரசவ வசதிகள், குழந்தை பராமரிப்பு, ஸ்திரீ தொழிலாளர் நன்மைக்கான வசதிகள், கர்ப சமயவிடுமுறை, ஸ்திரீகள் கல்வி, விபசார ஒழிப்பு, விதவையர் கஷ்டங்கள், பொட்டுக்கட்டி விடுதல், தேவதாசி முறை முதலியவை சம்பந்தமாக சட்டசபைகளில் மசோதாக்கள் கொண்டுவராமல் வெறும் தலையாட்டிகளாக இருப்பது என்ன பிரயோசனம்? "சுயராஜ்யம் வந்தால் எல்லாம் சரியாய்ப் போய் விடும்" என்ற வேதாந்தம் பேசிக் கொண்டு தங்கள் குலத்துக்கான நன்மையைச் செய்யக்கூடிய திட்டங்களையும் சட்டங்களையும் இச்சமயம் ஸ்திரீ பிரதிநிதிகள் கொண்டு வந்து நிறைவேற்றி வைக்காவிட்டால் தங்கள் குலத்துக்கே துரோகம் செய்தவர்களாவார்கள் என்பதை நாம் வெகு மரியாதையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். புதிய சீர்திருத்தத்தை "உடைத் தெறிபவர்கள்" தங்கள் தங்களுக்கான நன்மைகளை அதன் மூலம் அடையப் பார்க்காமலில்லை. காங்கிரஸ் கட்சியார் விவசாயிகட்கும், கடன் பட்டார்க்கும் நன்மை பயக்கக்கூடிய மசோதாக்களை நிறைவேற்றிக் கொண்டு தானிருக்கிறார்கள். அந்தந்த வகுப்பினர் "சுயராஜ்யம் வரும் வரை தூங்கவில்லை." தொழிலாளிகள் தங்களுக்கான நன்மைகளை அடைய இதுவே சமயமென்று முனைந்து நிற்கிறார்கள். "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுதலே" புத்திசாலித்தனமாகும். எல்லோரும் இச்சீர்திருத்தத்தினால் எவ்வளவு நன்மையடையலாமோ அவ்வளவு அடையத்தான் பார்க்கிறார்களென்பது நம்மாதர்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது. நம் சென்னை சட்டசபையில் 9 அங்கத்தினர்கள் வீற்றிருக்கிறார்கள். இருந்தபோதிலும் அவர்கள் எல்லோரும் "சுயராஜ்யக் கனவிலேயே" மூழ்கியிருக்கிறார்களென்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. சுயராஜயம் வேண்டுமென்பதில் நாம் மற்றெவருக்கும் சற்றும்





சளைத்தவர்கள் அல்லவென்று பஹிரங்கமாகச் சொல்லிக் கொள்ளுகிறோம். அவர்களது ஒப்பற்ற தேசபக்தியையும் தன்னலமற்ற தூய தாய்நாட்டு பற்றையும் போற்றுகின்றோம். ஆனால் சமயசந்தர்ப்பங்களை யுக்தேசித்து ஸ்திரீகள் மஹாநாடுகளின் கோரிக்கைகளை சட்ட பூர்வமாக நிறைவேற்றி வைக்க இந்த பிரதிநிதிகள் உடனே தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். ஸ்திரீகளின் சமூக, பொருளாதார, கல்வி, அரசியல் ஒழுக்க முன்னேற்றத்துக்கான மசோதாக்களை அறிவாளிகளுடன் கலந்து தயார் செய்து இச்சந்தர்ப்பத்திலே சட்ட சபைகளிலே பிரேரித்து நிறை வேற்றி வைக்க வேண்டும். "வெறும் பகற்கனவு" கண்டு கொண்டு இருந்தால் "தூங்கினவன் கண் கிடாக்கண்" என்ற பழமொழிக்கு இலக்காகி நிற்கவேண்டிவரும்.

இது விஷயத்தில் ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டியவர்கள் சட்டசபையிலிருந்த பொழுது செய்து வந்த உருவான வேலைகளையே நாம் உதாரணமாகச் சொல்லுவோம். அச்சமயம் பிற்போக்காளர்களின் உதவி கொண்டே எவ்வளவோ நல்ல வேலை செய்வது ஸ்ரீமதி முத்துலக்ஷ்மிக்கு சாத்தியமானால் காங்கிரஸ் மந்திரி சபை ஆதிக்கத்திலிருக்கும்போது அரும் பெரும் சீர்திருத்தங்களை நிறைவேற்றி தங்கள் குலமான மாதர் உலகம் முன்னேற்றமடையச் செய்வது நம் சட்டசபையை அலங்கரிக்கும் நவரத்தினங்களுக்கு ஒரு பெரிய பிரமாதமா? இல்லையென்றே நாம் சொல்வோம். "அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும்" என்ற உண்மை எந்த சர்க்காரிலும் வாஸ்தவமானதே. ஆகையால் நம் பிரதிநிதிகள் சற்று விழித்தெழுந்து வேண்டியன செய்ய முன் வரவேண்டும் என்று நாம் அவர்களை மாதர்களின் சார்பாகவேண்டிக் கொள்கிறோம். அவர்களை இந்த மாதிரியான ஆக்கவேலையில் துரிதமாக இறங்கும்படி பற்பல மாதர் சங்கங்களும், தனிப்பட்ட ஸ்திரீகளும், சமூகசேவகிகளும் தூண்டவேண்டும் என்றும் நாம் கேட்டுக் கொள்ளுகிறோம். வாய்ச் சொற்களும், காகிதத் தீர்மானங்களும் உப்புக்குதவாது.



# • குழந்தையின் கனவு •

(கும்மி)

ஸ்ரீமதி அம்புலு.

பச்சைப் பசும்புல் தரையினிலே—பகல்
சுற்றியலைந்த களைப்பினிலே
சற்றே மயங்கிப் படுத்திருந்தேனொரு
அத்திமரத்தின் நிழலினிலே.

செக்கச் சிவந்த குதிரையொன்று—அதன்
பக்கத்தில் ஜேணமும் சாட்டையுமாய்
எட்டியிரண்டடி தூரத்திலே வந்து
நின்றதம்மா, மனஞ் சென்றதம்மா!

அன்பு கனிந்த குரலினிலே—அதன்
ஆண்மை நிறைந்த வடிவினிலே
முற்று மிழந்த மனத்தினனாய்—ஓடி
முதுகினிலேறி யமர்ந்தேனம்மா!

வானமுழுதும் ஒரு கொடியிற்—செவ்
வான மடைந்திடச் செய்ததம்மா
காடு மலைவனம் ஓல மிடுங்கடல்
தாவியே காற்றிற் பறந்ததம்மா!

புத்தம் புதியதோர் மாளிகையாம்—அதன்
சுற்றுப் புறங்கள் அகழிகளாம்
சித்திரமிட்ட மதிற்சுவராம்—அங்கு
செம்புரவி சென்று நின்றதம்மா!

வச்சிர மிழைத்த மணிக்கதவில்—நல்ல
முத்துச் சரங்கள் அசைந்திடவே
பச்சை பதித்த கிரீடந் தரித்தொரு
பார்த்திபன் வந்து வணங்கி நின்றான்.

வெற்றிச் சமர்புரி தோள்தனிலே—என்னை
ஏற்றிச் சென்றான் கணப் போழ்தினிலே.
அற்புத மாளிகை அழகை யுரைத்திட
ஆயிரம் ஆண்டுகளாகுமம்மா!

முத்துக்கள் சிப்பியுந் தங்கப் பொற்பாளமும்
தங்கிடுங் கூறைத் தகடுகளாம்
வச்சிரமுதல் நவரத்ன மிழைத்த—நன்
மாடங்களாம் மணிக் கூடங்களாம்

பொங்கதிர் வீசிப் புனிதமுண்டாக்கும்—அப்
புண்ணியச் சூரியன் செல்வமெல்லாம்
போற்றி வளர்த்திடும் பொக்கிஷமோ! வெனப்
பொன்னொளி வீசுந் திசைகளெல்லாம்!

மல்லிகைமாலை விரும்பி யணிந்திடும்
மன்னவன் எந்தன் முகந் துடைத்தே
மின்னற் கதவைத் திறந்தொரு—மண்டபத்து
"உள்ளேபார்" என்று மொழிந்து நின்றான்.

பந்துகளும் பல பொம்மைகளும்—நல்ல
தித்திக்கும் தின்பண்ட ராசிகளும்
மக்கள் விளையாடும் மற்றும் பல பொருள்
கொட்டிக் கிடந்தன மூலை எங்கும்!


புன்னகை பூத்த முகத்தினனாய்—என்னைச்
சேர்த்தணைத்து முத்த மிட்டவனாய்
"சித்தப் பிரமை கொள்வதேனோ தம்பீ!
உனக்கிஷ்டமான பொருள்கேளு" மென்றான்

"பாலர்கள் வாழ்ந்திடும் பட்டணங்காண்!
இதன் பார்த்திபன்நான்" எனக் கூறிடுவான்
பண்டங்களுக்குக் குறைச்சலில்லை, வெறும்
சண்டைகளொன்றும், இங்கில்லை காண்!

பூமியில் உங்கள் இனத்தை யழித்திடும்,
நோய்களணுகாமல் காத்திடுவோம்
பாவியவன் பிரம்பாலடி வைத்திடும்
வாத்திமாரை வெட்டி வீழ்த்திடுவோம்!

சித்தமகிழ்ந்து சிறுவர்களோடிங்கு [அவன்
சேர்ந்திரு" வென்று மொழிந்து சென்றான்—
சித்தடி போற்றித் திரும்புமுன்னே—ஒரு
சிறுவர் கூட்டம் வரக் கண்டேனம்மா!


கோலமுடன் விளையாடிவரும்—பல
குழந்தைகளோடு கலந்தேனம்மா!
மன்னவனும் அவன் மாளிகையும்—அந்த
மாயப்புரவியும் மறைந்ததம்மா!



"எனக்கு நிகர்யார்?"



ஸ்ரீமதி
அன்னபூர்ணி அம்மாள்
குண்டூர் ஜில்லாபோர்டு, ஜில்லா
கல்விச்சபை அங்கத்தினர். சமூக
அரசியல் சேவையில் "கோஷா
வை" உதறிட்டு இறங்கி
யிருக்கும் முதல் க்ஷத்திரியஸ்திரீ.



கண்ணன் பூஜை

# அகில இந்திய ஸ்திரீகள் மகாநாடு

## (ALL INDIA WOMEN'S CONFERENCE)

ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி

"அகில இந்திய மாதர் மகாநாடு (ஸ்தாபனம்) இந்திய ஸ்திரீ சமூகத்துக்கும், தேசத்துக்கும் என்ன செய்திருக்கிறது" என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. ஒவ்வொருவரும் எந்த விஷயத்தைப்பற்றியும் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுமுன் அது பற்றிய பூரா விவரங்களையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இந்த சபை என்ன சாதித்து விட்டதென்று கேட்பவர்கள் திறந்த உள்ளத்துடன் அம்மகா சபையின் அறிக்கையையும், அதன் முப்பத்தைந்து பிரிவுகளும் (Constituencies) 114 சிறு கிளைச்சபைகளும் (Sub-Constituencies) செய்திருக்கும் வேலையை ஆராய்வார்களேயானால் இந்த தேசத்துக்கு அத்தகைய சபையின் அத்தியாவசிகத்தை நன்கு உணர்வார்கள்.

அது தேசத்தில் தேசீய ஒற்றுமையை வளர்ச்சி செய்திருக்கிறது. அதில் ஜாதி மத கட்சி பேதமின்றி சகல ஸ்திரீகளும் அங்கத்தினராய் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தாங்கள் யாவரும் பாரதத்தாயின் மக்கள் என்ற தூய உணர்ச்சியே அவர்கள் பால் குடிகொண்டிருக்கிறது. அவர்கள் எல்லோரையும் ஒரே மேடையில் ஒரே சபையில் சேர்த்து வைத்ததுமின்றி ஒரே விதமான லட்சியங்களுக்காக சேவை செய்யும்படியும் அவர்களைத் தூண்டியிருக்கிறது. இமயபர்வதத்தின் பல பாகங்களிலிருந்தும், கீழ் கடைசியில் அஸ்ஸாம் மாகாணத்திலிருந்தும், இன்னும் பல இடங்களிலிருந்தும் பலவிதமாக ஆடையாபரணங்கள் அணிந்து கொண்டிருக்கும் மாதர்கள், ஒரு மகாநாட்டில் கூடியிருப்பதை யாவரும் காணலாம். ஆனால் அவர்கள் யாவரும் மகாநாட்டின் லட்சியங்களால் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தவிர வீட்டுக்குள்ளேயே அடைபட்டிருக்கும் ஸ்திரீகள், மகாநாட்டின் சார்பாக தேசத்தின் பல பாகங்களுக்கும் சென்று ஆங்காங்கு உள்ள நிலைமைகளை நேரே அறிந்துகொள்ள சந்தர்ப்ப மேற்படுகிறது. இதுவே ஓர் கல்வியாகும். மேலும் ஸ்திரீகள் தங்களை ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்படுத்திக்கொண்டு மகாநாட்டின் லட்சியங்களுக்கு உழைக்கும் உண்மைத் தொண்டர்களாகச் செய்கிறது மகாசபை.

இந்தச் சபையின் அங்கத்தினரின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கானது. அங்கத்தினர்களில் பெரும்பாலோர் பலவித சமூக சீர்திருத்த வேலைகளில் ஈடுபட்டு வேலை செய்து வருகின்றனர். பல கிளைகள் பள்ளிக்கூடம் இல்லாத இடங்களில் குழந்தைகட்கு பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்துகின்றன; சிறுமிகளுக்கு ஹாஸ்டல்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. இதன் அங்கத்தினர்கள் கிராம முன்னேற்றத்திலும், புனருத்தாரணத்திலும் தங்கள் காலத்தையும் சக்தியையும் செலவு செய்கிறார்கள். மருத்துவப் பயிற்சி, சிசு பராமரிப்பு, நர்ஸ் பயிற்சி முதலியன அளிக்கும் ஸ்தா

பனங்கள் இச்சபையின் ஆதரவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஸ்திரீ தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றி விசாரணை செய்து அவர்களின் தேவைகளை அடையச் செய்ய வேண்டிய முயற்சிகள் செய்து வருகிறார்கள். தீண்டாமை ஒழிப்பதிலும், ஹரிஜனங்களின் கல்வி முன்னேற்றத்திலும் தங்களாலான சேவையைச் செய்து வருகிறார்கள்.

ஸ்திரீகளுக்கு சட்டப்படியும், சமுதாய சம்பிரதாயங்களை ஒட்டியும் இருந்து வரும் குறைபாடுகளை சட்டப்படியே நீக்குதற்காக நடந்த, நடத்தப்படும் எல்லாக் கிளர்ச்சிகளுக்கும் மகாநாடு ஆதரவு அளித்து வருகிறது. பால்ய விவாஹத் தடைச் சட்டம், விபசாரத் தடைச்சட்டம், விபசாரத்துக்காக பெண்கள் வியாபாரம் நடப்பதை தடுத்தல், குற்றம் செய்த குழந்தைகளை விசாரணை செய்ய தனி கோர்ட்டுகள் முதலியன ஏற்படுத்தப்பட்டதற்குக் காரணம் மஹாநாட்டின் கிளர்ச்சியே. இவைகளெல்லாம் தனிப்பட்டவர்களின் முயற்சியாலும், எல்லோருடைய கிளர்ச்சியாலும் சாதிக்கப்பட்டன.

சுயராஜ்யம் அடைவதற்கு அடிப்படையான சமூகங்களுக்குள் இருக்கவேண்டிய அந்நியோன்யமான பரஸ்பர நம்பிக்கையையும் நிலவச்செய்ய அகில இந்திய ஸ்திரீகள் மகாநாடு மெச்சத்தக்க வேலை செய்திருக்கிறது. வகுப்புவாதம் ஒழிய அச்சபை செய்திருக்கும் வேலையை தேசீய தலைவர்கள் யாவரும் ஒப்புக்கொண்டு புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். ஸ்திரீகளின் அரசியல் ஸ்தானம் எவ்வாறு புதிய சீர்திருத்த அரசாங்கத்தில் இருக்க வேண்டுமென்பதை விளக்கும் பொருட்டு அகில இந்திய ஸ்திரீகள் மஹாநாடு லோதியன் கமிட்டி முன்னரும், ஜாயின்ட் பார்லிமெண்டரி கமிட்டி முன்னரும் சமர்ப்பித்த யாதாஸ்து, ஸ்திரீகளின் உயர்ந்த அரசியல் தத்துவத்தையும் ஞானத்தையும், அவர்களின் தன்னலமற்ற தேசபக்தியையும் வெளிப்படுத்தும் ஒரு உத்தம உதாரணமாகும். அந்த யாதாஸ்தும், அதை யொட்டி மகாநாட்டின் பிரதிநிதிகளால் கொடுக்கப்பட்ட சாட்சியங்களும் பிரிட்டிஷ் பத்திரிகைகளால்கூட போற்றிப் புகழப்பட்டன. வட்டமேஜை மகாநாட்டில் பல வகுப்புகளின் பிரதிநிதிகளும் புதிய அரசியலில் தங்கள் தங்கள் வகுப்பின் நன்மைகளை மட்டும் கோரி சலுகைகள் கேட்டுக்கொண்டும், சட்டசபைகளில் அதிகமான ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கும்படியும் சச்சரவிட்டுக் கொண்டிருக்கும்போது, இந்து, கிறிஸ்தவ, மகமதிய ஸ்திரீகளின் பிரதிநிதிகள் தைரியமாக வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும், தனித்தொகுதி முறையையும் ஏகமனதாகக் கண்டித்தனர். அதுமட்டுமா? ஸ்திரீகளுக்கென்றுகூட ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்க வேண்டியதில்லையென்றும், தாங்கள் ஆடவர்களுடன் நேர்முகமாகப் போட்டியிட்டு தேர்தலில் வெற்றி யடைய முடியும் என்றும் கர்ஜித்தார்கள். இவ்விதமாக இந்த மகாநாடு தேசத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு பலத்தையும் ஆதரவையும் அளித்து தேசீய கோரிக்கையை பலப்படுத்தியிருக்கிறது.

கல்வித் துறையிலும் இம்மகா நாட்டின் சேவை பாராட்டத் தக்கதே. ஸ்திரீகளுக்கு உகந்த கல்வியை போதிக்க தனி





யாக தகுந்த பயிற்சிபெற்ற உபாத்தியாயினிகளை உண்டாக்கும் லேடி இர்வின் கலாசாலை ஒரு உதாரணமாகும். எல்லா மாகாணங்களிலும் வயது வந்த யாவர்க்கும் ஓட்டுரிமை அளிக்கப்படவேண்டும் என்றும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டாம் என்றும் வற்புறுத்தியதை லோதியன் யாதாஸ்து குறிப்பிட்டிருக்கிறது. இச்சபையின் உதவியால் லட்சக்கணக்கான பெண்கள் ஓட்டுரிமை பெற்றார்கள். பலர் சட்டசபை அங்கத்தினர்களாக வீற்றிருக்கிறார்கள். அகில இந்தியமாதர் மகாநாடு ஸ்திரீகளின் கௌரவத்தையும் அதிகரித்திருக்கிறது. அத்துடன் தேசத்தின் கௌரவத்தையும் வளர்த்து வந்திருக்கிறது.

இச்சபை நிர்மாணிக்கப்பட்டு 11 வருஷங்களே யாகின்றன. "இவ்வளவு சொற்ப காலத்தில் மேலே எடுத்துக்காட்டியபடி தேச, சமூக முன்னேற்றத்துக்கு அவ்வளவு அரியவேலை செய்த வேறு ஏதாவது ஸ்தாபனம் இருக்கிறதா?" என்று கேட்கும்படி தோன்றுகிறது.

தற்சமயம் அகில இந்திய மாதர் மஹாநாடு அரசியலிலும் கலந்து கொள்ள வேண்டுமென்று ஒரு சிலர் விரும்புகிறார்கள். ஆனால் இந்த ஸ்தாபனம் முக்கியமாக ஸ்திரீகளின் கல்வி, சமூக முன்னேற்றத்துக்காக ஆதியில் ஏற்படுத்தப்பட்டது. இதில் உபாத்தியாயினிகள், ஆசிரியைகள், பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்கள் முதலியோர் அங்கத்தினர்களாக அதிகமாக இருக்கின்றனர். அவர்கள் உத்தியோகங்களின் நிமித்தமாக யாதொரு அரசியல் திட்டங்களிலும் கலந்து கொள்ள முடியாமலிருக்கிறது. வேறு பல அங்கத்தினர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் மனைவிகளாக இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் ஹரிஜன முன்னேற்றத்திலும், இதர சமூகசேவைகளிலும் நல்ல வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் கணவன்மாரின் உத்தியோகஸ்தானங்களை உத்தேசித்தும், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஒழுக்க விதிகளை உத்தேசித்தும் யாதொரு அரசியல் வேலைகளிலும் சம்பந்தம் வைத்துக் கொள்ள முடியாமலிருக்கிறது. இந்த நிலையில் அரசியலையும் இம்மகாநாட்டின் திட்டங்களில் புகுத்துவது அவ்வளவு உசிதமாகாது.

ஆனால் புதிதாக மாகாணங்களில் ஏற்பட்டிருக்கும் சர்க்கார், உத்தியோகஸ்தர்களின் ஒழுக்க விதிகளை மாற்றி அமைத்து சகல உத்தியோகஸ்தர்களும், அவர்களது உறவினர்களும் தங்களுக்கு இஷ்டமான அரசியல் கட்சிகளில் சேர்ந்து கொள்ள உரிமை கொடுக்கலாம். இன்னும் மற்ற ஸ்திரீகள் வேறு எந்த அரசியல் கட்சிகளில் ஈடுபட்டிருந்த போதிலும் இம்மகாநாட்டின் அங்கத்தினராகவும் இருக்க உரிமையிருக்கிறது. அகில இந்திய ஸ்திரீகள் மஹாநாட்டின் அங்கத்தினர்கள் பலர் ஆடம்பரமற்ற உருவான தேசீய முன்னேற்ற வேலைகளைச் செய்து சுயராஜ்யத்துக்கு அஸ்திவாரம் போட்டு வருகிறார்களென்ற விஷயத்தை யாவரும் அறிய வேண்டியது அவசியம். மேடைப் பிரசங்கங்களைவிட கிரியாம்சையில் பல காரியங்களைச் செய்து வரும் அனேக தொண்டர்கள் மகாநாட்டின் அங்கத்தினர்களாய் இருந்து வருகிறார்கள்.

# விதவையின் முடிவு

திரு. ஆ. வெ. சுப்பரமணியம்

●

[வாசகர்களே! சென்ற மாதம் ஒரு விதவைச் சகோதரியின் கடிதம் கிடைத்தது. அதைப் பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன். இப்பொழுது என் கண் முன்னிலையிலே ஒரு உண்மைச் சம்பவம் நடந்து விட்டது. அதையும் எனது துக்கத்தின் இடையே சற்றுமன ஆறுதல் அடையும் பொருட்டு உங்களுக்கு எழுதி அனுப்பியிருக்கிறேன். பெரியோர்களே! வாலிபர்களே! துர்ப்பாக்கியனாகிய என்னைப்போல் நீங்களும் வாளா இராமல் சமயம் வாய்க்கும் பொழுது நம் விதவை சகோதரிகளின் கஷ்டங்களைப் போக்க முன் வாருங்கள். கடவுள் உங்களுக்கு எல்லா நன்மைகளையும் அருளுவார்.]

என் தகப்பனாருக்கு நெருங்கிய சிநேகிதர் ஒருவர் இருக்கிறார். (அவர் பெயரை குறிப்பிடாமைக்கு மன்னிக்கவும்). அவர் மகளுக்கு வயது 16 தான் இருக்கும். அவள் ஒரு விதவை. மூன்று மாதத்திற்கு முன்புதான் கண்டியிலிருந்து கொழும்புக்கு வந்து சேர்ந்தார்கள். எங்கள் வீட்டிற்கு சமீபத்திலேயே தங்கியிருக்கிறார்கள். அடிக்கடி என் தகப்பனாருடன் அவ்வீட்டிற்கு செல்வேன். அப்பொழுது அப்பெண்ணைப் பார்ப்பேன். பெண்ணைப் பார்க்கும்பொழுது என் மனதில் பல எண்ணங்கள் தோன்றும். தோன்றி என்ன செய்யலாம். நானோ வயதில் சிறியவன். தாய் தந்தையர்களுக்கு அடங்கி நடக்க கூடியவன். சில சமயம் நான் அவ்வீட்டிற்கு போகும் பொழுது அப்பெண் தனியாக இருப்பாள். அவளோடு துணைக்கு ஒரு கிழவியும் (கண் பார்வை குறைவு) கூடவிருப்பாள். அப்பொழுதெல்லாம் அப்பெண் என்னைக் கண்டவுடன் எழுந்து மரியாதையாக வரவேற்பாள். வெற்றிலைத் தட்டைக்கொண்டு வந்து கொடுத்து போட்டுக் கொள்ளும்படி உபசரிப்பாள். ஒரு தடவை என் இரண்டு தடவை பாலும் சாப்பிட்டு இருக்கிறேன். அப்பொழுதெல்லாம் என்னையும் அறியாமல் ஏதோ ஒரு உணர்ச்சி உண்டாகும். அது முதல் அப்பெண்ணின் மேல் எனக்கு அளவற்ற அன்பு ஏற்பட்டு விட்டது. வீட்டிலன்றி அவர்கள் வீட்டுக்கு பின்புறம் உள்ள தோட்டத்திலும் சந்தித்துப் பேசுவோம். இது என் தகப்பனாருக்கு தெரிந்து என்னைக் கண்டித்து அவர்கள் வீட்டிற்கு போகவேண்டாம் என்று நிறுத்திவிட்டார்கள். அத்துடன் என் தகப்பனாருக்கும் அப்பெண்ணின் தகப்பனாருக்கும் இது விஷயமாக மனவருத்தம் ஏற்பட்டு அவர்களும் பேசிக் கொள்வதில்லை. எனக்கு ஒவ்வொரு நாளும் அப்பெண்ணை பார்க்கவேண்டுமென்று ஆவல். என்ன செய்வேன். அப்பெண் வெளியில் வரமாட்டாள். நானும் அவர்கள் வீட்டிற்கு போகக் கூடாதென்று என் பெற்றோர்கள் தடுத்து விட்டார்கள்.

மூன்று மாதங்கள் சென்றன. அப்பெண்ணுக்கு வியாதி கண்டிருப்பதாக அறிந்தேன். உடனே என் தாயாரிடம் போய் அவளைப் பார்க்கப்போக விடை கேட்டேன். தாயார் போக வேண்டாம் என்று கண்டிப்பாய் சொல்லி விட்டார்கள். அபாக்கியனாகிய எனக்கும் அவர்கள் சொல்லை மீறி நடக்கத் துணிவு உண்டாகாமல் போகாமலே இருந்து விட்டேன். ஐயோ! வாலிபர்களே! பெரியோர்களே!! பின் என்ன நடந்ததென்று கேட்கிறீர்கள்? அதையும் சொல்லுகிறேன். இரண்டு நாள் சென்று ஒரு சிறு பையன் ஓடி வந்து!! "அண்ணே! அண்ணே!! உங்களை கண்டியார் வீட்டு அக்கா கூப்பிடச் சொல்லுச்சு. சுறுக்கா வாங்க" என்றான். என் தாயாரையும் கேளாமல் அங்குபோய்ச் சேர்ந்தேன். ஆ! என்னென்று எழுதுவேன் அங்கு நான் கண்ட காட்சியை! அப்பெண் கட்டிலின் மீது துவண்டு கிடந்தாள். தலை மாட்டில் இரண்டு புத்தகங்கள் விரிந்து கிடந்தன. உயிர் தொண்டைக்கும் நெஞ்சுக்கும் ஊசலாடிக் கொண்டிருந்தது. இக்காட்சியைக் கண்ட என் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். உடனே கட்டிலின் மீது உட்கார்ந்து என்னையும் அறியாமல் அப்பெண்ணின் பெயரைச் சொல்லி அழைத்தேன். (இப்பொழுது அப்பெண்ணின் தந்தையும் ஊரிலில்லை.) உடனே அவள் என் பக்கம் திரும்பி பரிதாபமாக என்னைப் பார்த்தாள்; ஆனால் பேச முடியவில்லை. பிறகு சிரமப்பட்டு தலையணையின் அடியில் இருந்து ஒரு கடிதத்தை எடுத்து என் கையில் கொடுத்து இரண்டு கைகளினாலும் என்னைக் கும்பிட்டாள். போகும்படி கையால் சாடை காட்டினாள். அதற்குமேல் என்னால் அங்கு நிற்க முடியவில்லை. நேரே என் வீட்டிற்கு வந்தேன். புஸ்தக அறைக்குச் சென்று அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"என் உடலையும் உயிரையும் கொள்ளை கொண்ட காதலருக்கு, அனேககோடி நமஸ்காரங்கள். காதலா! நான் விதவையாகி வருஷம் நான்கு கடந்து விட்டதாயினும் இது வரையில் ஒருவரை நிமிர்ந்து பார்த்தறியேன். இங்கு வந்த நாள் முதல் என்—தங்களைக் கண்ட நாள் முதல் என்னையும் அறியாமல் ஒரு உணர்ச்சி ஏற்பட்டு விட்டது. அதன்பின் நடந்தவைகள்தான் தங்களுக்குத் தெரியுமே? இப்பொழுது எங்கும் கலப்பு மணங்களும் விதவை மணங்களும் நடப்பதை பார்த்த நான் நமக்கும் அப்படி ஒரு காலம் வராதா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். ஆனால் தங்கள் குடும்பத்தினுடைய நிலைமையும் என் பெற்றோர்களுடைய நோக்கத்தையும் பார்க்கும்பொழுது நம் எண்ணம் நிறைவேறாதென்று திட்டமாகத் தெரிகின்றது. இனி நான் இருந்து என்ன பயன். தங்களுக்குக் கடவுள் நீண்ட ஆயுளையும் நல்ல மனைவியையும் சகல சம்பத்தையும் அருள்வராக—கொடுத்து வைத்தால் மறு பிறப்பில் தங்களை அடைவேன்.

இப்படிக்கு,
தங்கள் அபலை.

..............................

மேற்படி கடிதத்தில் இருந்த தேதியிலிருந்து ஒரு வாரத்துக்கு முன் எழுதிய கடிதமென்பதை தெரிந்து கொண்டேன். கடிதத்தைப் படித்து முடித்ததும் கண்ணீர் சிந்தினேன் என்று சொல்லவும் வேண்டுமா? வெளியே வந்தேன். அப்பெண் இறந்துவிட்டதாக எல்லோரும் போய்க் கொண்டிருந்தார்கள். இப்பழிக்கு காரணனாகிய என் மனது என்ன நிலையில் இருந்திருக்குமென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்!

# மாதரும் — மாதவிடாயும்

## "கோகிலம்"

**மா**தர்களுக்கு மாதாந்திர கிரமமாக கர்ப்பப்பையிலிருந்து சுரக்கிற சிவப்பு திராவகத்திற்குச் சூதகம் என்று பெயர். இது பார்வைக்குச் சுத்தமான ரத்தமாகக்காணப்பட்டாலும் சரீரத்தில் உள்ள கெட்டரத்தமே யாகும். பெண்களுக்கு ருதுவாகும் வயதானது தேச சீதோஷ்ணத்திற் கேற்றவாறு வித்தியாசப்படும். அதிக உஷ்ணமாகிய நம் இந்தியாவில் பெண்கள் பனிரண்டு முதல் பதினாறு வயதிற்குள் புஷ்பவதியாவது சகஜம். ஆனால் இன்னும் அதிக உஷ்ண தேசமாகிய ஆப்ரிக்காவில் பெண்கள் ஒன்பது முதல் பனிரண்டு வயதிற்குள்ளும், ஐரோப்பா முதலிய சீனதேசங்களில் பதினைந்து வயது முதல் பதினெட்டுவயதிற்குள்ளும், இன்னும் அதிசீதளமாகிய கிரீன்லாண்டு ருஷியாதேசங்களில் இருபது முதல் இருபத்திரண்டுவயது வரையில் புஷ்பதியாவார்கள். கருப்பைப் பையிலிருந்து சூதகம் முதல்தடவை வெளியானால் பெண்களுக்கு (பருவமடைந்தவர்கள்) புஷ்பவதியானவர்கள் என்ற அடையாளம். சூதகமானது இருபத்தெட்டு நாளைக்கு ஓர் தடவை வெளிப்படும். ஆனால் சரீர சுபாவத்தின்படி சிலருக்கு சில நாள் முந்தியும் அல்லது சில நாள் பிந்தியும் வெளிப்படலாம். சூதக திரவியம் சிவப்பாயும் அல்லது மஞ்சணித்தும் அல்லது மண் வர்ணமாயும் இருக்கும். இந்த விதமுள்ள ருது தூரம் வெளிப்பட்டால் சரீர சௌக்கியம் என்று அறிந்து கொள்ளவும். அப்படி யல்லாமல் வெண்மையாய் இருந்தால் வியாதி என்று அறிந்து கொள்ளலாம்.

மாதர்களுக்கு சூதகம் வெளிப்பட்டதிலிருந்து சூதகம் நிற்கும் காலம் வரையில் பிள்ளை பெறுகிற தன்மையுண்டாகிறது. அப்படியே சூதகம் முற்றிலும் எப்போது நின்று போய் விடுகிறதோ அப்போதே கர்ப்பந்தரிக்கும் தன்மையும் அற்றுப்போய் விடுகிறது. மாதர்களுக்கு சூதகம் நாற்பத்தைந்து அல்லது ஐம்பது வயதில் நின்று விடுகிறது. மாதவிடாயானது மாதர்களின் சரீர சௌக்கியத்திற்காக அவர்கள் சரீரத்திலுள்ள கெட்ட ரெத்தத்தை வெளிப்படுத்துகிறது. சூதக திரவத்தின் பிரமாணம் சரீரத்திற்குத் தக்கபடி இருக்கும். சரீர சௌக்கியமுள்ள மாதர்களுக்கு ஏற்படும் சூதகமானது சுமார் நான்கு பலம் எடையுள்ளதாய் நான்கு தினம் வெளிப்படுகிறது. மாதாந்த ருதுவானது கருப்பப் பையை மாதந்தோறும் சுத்தி செய்து சிசு உற்பத்திக்கு ஆயத்தம் செய்கிறது. சூதகமானது கர்ப்பாசயத்திலுள்ள அதி உஷ்ணத்தை நீக்கி தேக சுகத்தை உண்டாக்குகிறது. சூதகமானது தேகத்திலுள்ள கெட்ட நீரையும் சரீரக்கழிவாகிய கெட்ட ரத்தத்தையும் மாதாந்திரக் கிரமமாக வெளிப்படுத்துகிறது.

### மாதவிடாயான மாதர்கள் கவனிக்க வேண்டிய விஷயம்

மாதவிடாயான ஒரு ஸ்திரீ ஒதுங்கியிருக்கும் காலத்தில் கணவனுடன் கலந்து கொள்ளக் கூடாது என்பதற்காக நான்கு நாளைக்கு அவர்களைத் தனியாய் வைத்திருக்கிறது. இதை யறியாத ஜனங்கள் நம்மவர்களில் அநேகர் அவர்களை வீட்டில் இருக்கக் கூடாதென்று நினைத்து வீட்டிற்கு வெளியில் மாட்டுக்கொட்டத்திலும், மரத்தடியிலும் கொண்டுபோய் உட்கார வைத்து விடுவார்கள். அது அவசியமில்லை. மேலும், அவர்கள் பகலில் நித்திரை செய்யக்கூடாது. நம்மவர்களில் தூரமான பெண்களைப் பார்த்தால்கூட ஸ்நானம் செய்யவேண்டு மென்கிறார்கள். அது பிசகு. ஜலத்தில் அமிழ்ந்து ஸ்நானம் செய்யக்கூடாது. அதிகமாக நகைப்புக் கொள்ளக்கூடாது. ஓடவும் அதிர்ச்சியுடன் பேசவும் பயங்கரமான சப்தங்களையும் கேட்கக்கூடாது. பூமியை கால் விரலால் கிளரக்கூடாது. கடினமான வேலையும் செய்யலாகாது. குளிர்காற்றில் இருப்பதும் ஆகாது என்று விதித்திருக்கிறது. சீக்கிரம் ஜீரணமாகாத உணவை உண்ணக் கூடாது. இதை யறியாத நம்மவர்கள் தூரமான ஸ்திரீகளுக்கு போட்ட சாப்பாடு உள்ளே மிச்சமிருந்தால் 'சேஷம்' என்று சொல்லி விட்டு, தீட்டுக்கு நாள் வரும்போதே ஒரு சட்டி பழஞ்சாதம் தயார் செய்து விடுகிறார்கள். என்ன அறியாமை? நீராஞ்சோறு தின்று நிழலில் கிடந்தால் மலடிக்கும் மசக்கை செய்யும் என்றபடி அவர்களுக்கு புளித்த பழஞ்சாதம் போடுகிறார்கள். சாதாரண ஸ்திரீகளுக்கே சுடுசாதம் ஜீரணமாவதுபோல் பழஞ்சாதம் ஜீரணமாகாது. அதுவும் வயிற்று வலிக்காரர்களாகிய தூரமான ஸ்திரீகளுக்கு பழஞ்சாதம் போட்டால் கேட்க வேண்டாம். மாதத்தீட்டு சுரக்கும்போது கர்ப்பம் தரிக்கிறதென்று யாவரும் அறிந்த விஷயம். மேலே செய்யக் கூடாதென விதித்திருக்கும் விஷயத்தில் ஒரு விஷயமாவது அல்லது எல்லாவற்றையுமாகிலும் மாதவிடாய் காலத்தில் செய்த ஸ்திரீயுடன் அவள் தீட்டு நின்றவுடன் ஒருவன் மானிட வாழ்க்கையில் ஈடுபடுவானாகில் உடன் பிறக்கும் குழந்தையிடத்தில் முன் அவள் தூரமாயிருக்கும்போது செய்திருந்த பிழைகளைக் காணலாம்.

### அவையாவன

அவள் மாதவிடாய் காலத்தில் பகலில் நித்திரை செய்திருந்தால் குழந்தை குருடாய்ப் பிறக்கும். அழுதிருந்தால் குழந்தையின் பார்வை மங்கும். ஸ்நானம் செய்திருந்தால் குழந்தையின் முகத்தில் சிடுசிடுப்பு உண்டாகும். அதிகமான பேச்சு குழந்தைகளை வாயாடிகளாக்கும். அதுபோல் அதிகச் சிறிப்பு உதடு, பல், நாக்கு முதலியவைகளை வழவழப்பாகவாவது செய்கின்றது. பயங்கர சப்தங்களைக் கேட்டால் குழந்தை செவிடாய்ப் பிறக்கும். காலால் பூமியைக் கிண்டியிருந்தால் குழந்தை வழுக்கத்தலையுடன் பிறக்கும். காற்றுவாடையில் நின்றிருந்தால் பயித்தியமாய் கஷ்டப்படும். கடின வேலைகள் செய்திருந்தால் குழந்தை குரூபியாய் இருக்கும். தவிர மாதவிடாயான மாதர்கள் உட்காருமிடம் உறங்குமிடம் முதலியவை சுத்தமாய் இருக்க வேண்டும். வேகமாக நடக்கக்கூடாது. மாதவிடாயான மூன்று நாள் மட்டும் ஜாக்கிரதையாய் இருந்துவிட்டு நான்காம் நாள் காலையில் ஸ்நானம் செய்து கடவுளை வணங்கி கிரஹத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது.

### ருதுவாகாத இருசிகள்

பெண்கள் பதினாலு வயதிற்குள் புஷ்பவதியாவார்கள். சில பெண்கள் புஷ்பவதியாகாமலே இருப்பதுண்டு. இவர்களுக்கு இருசி என்று பெயர். இப்படிப்பட்ட ஸ்திரீகள் வியாதியினால் ருது ஆகாமல் இருப்பதுண்டு. இவர்களுக்கு தேகத்தில் அழகு இராது. ஆயாசம், பசியில்லாமை, கஷ்ட சுவாசம், சோம்பல், உடம்புவலி முதலியவைகள் இருக்கும். ஆடவர்களைக்கண்டால் வெறுப்பும், கல்யாணத்தில் ஆசையும் இல்லாமல் போய்விடும். எதனால் பெண்கள் இருசியாய் இருக்கிறார்

கள் என்பது நம்மால் சொல்ல முடியாத காரியம். ஆனால் சிலருக்கு கர்ப்பைப் பையில் உண்டாகும் நோயினால் புஷ்பவதியாகாமலிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு பலத்தையளிக்கும் "லோத்ராவை" உபயோகித்தால் அப்பெண்களுக்கு நல்ல ரத்தம் ஏற்பட்டு சர்வங்கங்களும் மேனியும் புஷ்டியும் உண்டாகி புஷ்பவதியாவார்கள். இன்னும் ருதுசம்பந்தமான சகல விதமான நோய்களுக்கும் மேன்மை தங்கிய டாக்டர். கே. என். கேஸரி அவர்கள் ஸ்திரீகளுக்காகத் தயார்செய்யும் "லோத்ராவை" வாங்கி அருந்தினால் மேற்சொன்ன சகலவிதமான நோய்களும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி சுகமடைவார்கள்.

---

## மதிப்புரை

### நீதிவிநோதக் கதைகள்

பண்டித டி. கே. ராமபத்ர சர்மா அவர்களால் எழுதப்பட்ட "நீதிவிநோதக் கதைகள்" என்ற புத்தகம் நமது பார்வைக்குவந்தது. இதில் பல உயர்தர நீதிகளை நூலாசிரியர் வெகு எளியநடையில் உபமான உபமேயங்களுடன் தெளிவாக உணர்த்துகிறார். நீதிகளை கதைகளின் மூலமாக போதிப்பதே நல்லவழி. மாதர்களும் இந்நூலை வாசிப்பதால் நல்ல பலனை அடைவார்கள். இதன் விலையோ மிகவும் குறைவு. சுமார் 150 பக்கங்கள்கொண்ட இந்நூல் ஆறணாவுக்கு அளிக்கப்படுகிறது. இந்த புஸ்தகத்தை யாவரும் வாங்கிப் படித்து திரு. சர்மாவை ஆதரிக்க கோருகிறோம்.

கிடைக்குமிடம்:—பண்டிதர் டி. கே. ராமபத்ர சர்மா,
193, திருவல்லிக்கேணி ஹைரோட், திருவல்லிக்கேணி.

### எம். என். ராய்.

பிரபல தேசீய தலைவரும், அரும் பெரும் தியாகங்களைச் செய்தவருமாகிய திரு. எம். என். ராயின் சரித்திரம் இன்னும் பல காரணங்களால் முழுதும் வெளிவராமலிருக்க வேண்டியதிருக்கிறது. அவரது வாழ்க்கை அவ்வாறு இருந்து வந்தது. இப்பேர்பட்ட தலைவரைப்பற்றி ஓரளவாவது தமிழ்மக்கள் உணரும்படி செய்த பெருமை திரு. ம. கி. திருவேங்கிடம் அவர்களுக்குரித்தாகும். இவர் எழுதியுள்ள "எம். என். ராய்" என்ற சிறு புஸ்தகம் ராயின் வீரம் செறிந்த வாழ்க்கையில் சில சம்பவங்களை நல்ல தமிழில் அழகாகச் சித்தரித்துக் காட்டுகிறது. தேச முன்னேற்றத்தில் ஆர்வம்கொண்ட ஒவ்வொரு ஸ்திரீ புருஷரும் இந்தப் புஸ்தகத்தை வாசிக்கவேண்டியது அவசியம். புஸ்தகத்தின் விலை அணா 2.

கிடைக்குமிடம்:—54, சைபுல் முல்க் தெரு,
கோமளீஸ்வரன்பேட்டை, சென்னை.



ராதா — கிருஷ்ணா



திருவிளக்கு

# திருவிளக்கேற்றித் தெய்வந் தொழுமின்!

"பர்வதகுமாரி"

**பொ**ழுது சாய்ந்ததும் நமது பெண்மணிகள் பக்தியோடு திருவிளக்கேற்றி வணங்குவதை நாம் பார்த்திருக்கிறோம். இதற்குக் காரணமென்ன?

சாயங்காலம், லக்ஷ்மிவரும் வேளை என்றும், அப்பொழுது திருவிளக்கேற்றித் தெய்வம் தொழுவது தீபமங்கள சோதியாகிய லக்ஷ்மிதேவியைத் தொழுவதேயாகுமென்றும் நமது முன்னோர் நம்பி வந்தனர். மலர்ந்த செந்தாமரையில் லக்ஷ்மிதேவியைத் தரிசித்தவர்கள், புதிய செந்தாமரை போலப் பொலியும் பொன் விளக்கின் ஜோதியிலும் அத்தேவியின் பொன் மேனியையும் சுடர் முகத்தையும் கண்டார்கள் என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. மோகனமான மாலைப்பொழுதில் மகாலக்ஷ்மி வருவதாகக் கருதி மங்கள தீபத்தை ஏற்றித் தெய்வம் தொழுவது, ஓர் அழகிய பழைய வழக்கமாகும். திருவிளக்கின் மகிமையால், லக்ஷ்மி கடாட்சம் பெற்றதைக் குறித்து ஓர் கதை வழங்கி வருகிறது. அதனைக் கீழே தருகிறோம்.

புஷ்பபுரி என்னும் புராதன நகரம் ஒன்றில், தனபாலர் என்ற பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் பெரிய பணக்காரர். அவருக்குச் சீராளன் என்ற ஓர் செல்வ மகன் இருந்தான். அவனுடைய மனைவியான சுந்தரவல்லி அழகில் சிறந்து விளங்கியதுபோல் நற்குண நற்செய்கைகளிலும் சிறந்து விளங்கினாள். அவர்கள் பல வருடங்களாக இன்ப வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

இப்படி வாழ்ந்து வருகையில், ஒரு காலத்தில் திடீரென்று கொடும் பஞ்சம் ஏற்பட்டது. நாட்டு மக்களும், நகர மக்களும் பஞ்சத்தால் வருந்திக் கதறுவாராயினர். ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாகக் கழிந்தது. ஜனங்கள் அனைவரும், பெருங் கவலையோடு, ஐயோ! இன்னும் எத்தனை நாள் நாம் இந்தக் கஷ்டம் அநுபவிக்க வேண்டுமோ? எப்பொழுது லக்ஷ்மி கண் திறந்து பார்ப்பாளோ? என்று இரங்கி ஏங்கினர்.

இப்பஞ்சத்தால் தனபாலரும் சீராளனும் மற்றவர்களைப் போலவே ஏழைகளாகி வருந்திக் கொண்டிருந்தனர். சுந்தரவல்லி மாத்திரம் லக்ஷ்மிதேவியின் மீது வழக்கம்போல் பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தாள்.

ஒருநாள் வெள்ளிக்கிழமை மாலை, அவ்வூரார், பஞ்சத்தின் கொடுமையால், மனம் நொந்து லக்ஷ்மிதேவியைக் கண்ணற்றவளென்று நிந்தனைசெய்துவிட்டு, இனி ஒருவர் வீட்டிலும் திருவிளக்கு ஏற்றுதல் வேண்டாம்; தெய்வம்! தெய்வம்!!— என்று காசைக் கரியாக்குவதில் பயன் ஒன்றுமில்லை என்று தீர்மானித்துக் கொண்டனர். இத்தீர்மானத்தை அனுசரித்து, அவர்கள் அந்திமங்குவதற்கு முன்னரே

வாயிற் கதவுகளை தாளிட்டுக்கொண்டு, உள்ளே தீபம் ஏற்றாது மூலையிலிருந்து முணு முணுத்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் அன்று சுந்தரவல்லி மாத்திரம், வழக்கம்போல் வாயிற் கதவை அடைக்காது, திரியும் நெய்யும் வாங்கித் திருவிளக்கேற்றி வைத்தாள். பிறகு அவள் முக மலர்ச்சியோடு தன் புருஷனை வணங்கி நோக்கி, "தாங்கள் வாசலிலுள்ள திண்ணையில் உட்காருங்கள்; யாராவது உள்ளே வந்தால் எங்கே போகிறீர்கள்? என்று கேளுங்கள். உள்ளே போகிறோம், என்றால் இனி வெளியே போகாமல் இருந்தால்தான் உள்ளே செல்லலாம் என்று சொல்லிவிடுங்கள்" என்று வேண்டிக் கொண்டாள்.

அப்பால் அப்பெண்மணி, தன் மாமனாராகிய தனபாலர் கொல்லை வாசற்படியிலும் கண்ணாயிருத்தல் வேண்டுமென்று புருடனை வேண்டிக் கொண்டாள். யாராவது வெளியே போகிறேன் என்றால், இனி உள்ளே மீண்டும் பிரவேசிப்பதில்லை என்று உறுதி கூறினால் வெளியே போகலாம் என்று தனபாலர் அனுமதி கொடுத்தல் வேண்டும்; இல்லாவிட்டால், போகக் கூடாதென்று அவர் மறுத்துவிடுதல் வேண்டும். இவ்வாறு ஏற்பாடு செய்த பின், சுந்தரவல்லி வீட்டிற்குள் விளக்கு எதிரே உட்கார்ந்து லக்ஷ்மியைத் தோத்திரஞ்செய்து கொண்டிருந்தாள்.

அன்று அந்தி மங்கியதும், ஆகாய மார்க்கமாக வந்த அஷ்ட லக்ஷ்மிகளும், அவ்வூரில் ஒரு வீட்டிலாவது விளக்கு இல்லையென்று கண்டு வருந்தினார்கள். பிறகு அவர்கள் ஆகாய வீதியிலிருந்து 'சரே'லென்று கீழே இறங்கி வந்து ஊரைச் சுற்றிப் பார்த்தார்கள். "என்ன ஆச்சரியம்! இது தரித்திரம் பிடித்த ஊராயிருக்கிறதே!" என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

அப்பொழுது சீராளன் அப்பெண் தெய்வங்களை வணங்கி, "தாய்மார்களே! நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான். "எங்களை அஷ்டலக்ஷ்மிகள் என்று அழைப்பார்கள். நாங்கள் பொன்னுலகிலிருந்து பூவுலகம் பார்க்க வந்தோம். நாங்கள் இன்று இவ்வூர் முழுமையும் சுற்றி அலைந்தோம். ஒரு வீடும் திறந்திருக்கவில்லை. வீடுகளில் விளக்கும் இல்லை. விளக்கு இல்லாத வீட்டில் நாங்கள் குடியிருக்கமாட்டோம்; அக்காள் மூதேவி தான் அங்கு தங்கியிருப்பாள். அவளுக்கும் எங்களுக்கும் பெரும்பகையுண்டு. இப்பொழுது இந்த வீடு தீபத்தால் ஜ்வலிக்கிறது. எனவே நாங்கள் இங்கு தங்கலாமென்று வந்தோம்" என்று அந்த தெய்வப் பெண்கள் மறுமொழி கூறினார்கள்.

உடனே சீராளன் சொன்னதை ஒப்புக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள்.

அஷ்டலக்ஷ்மிகளான சீதேவிகளையும் ஒருங்கே கண்ட மூதேவி அக்காள், இனி நமக்கு இது சரியான இடமன்று என்று கொல்லை வழியாக ஓட்டம் பிடிக்க முயன்றாள்.

அப்பொழுது அங்கே ஜாக்கிரதையாகக் காத்திருந்த தனபாலர், "யார்? எங்கே போகின்றீர்? இவ்வழியாக போவதாய் இருந்தால், மீண்டும் இங்கே வரலாகாது





தெரியுமா?" என்று கேள்விகளை அடுக்கினார். "நான் தான் மூதேவியாள், தெரியவில்லையா?" என்று மூதேவியாள் நடுங்கிக்கொண்டு சொன்னாள்.

பிறகு அவள், "அந்தோ! என் பகையாளிகளான சீதேவியாள் (லக்ஷ்மிகள்) இங்கு வந்துவிட்டார்கள்! நான் இனி ஒருகணமும் குடியிருக்க மாட்டேன். ஒரு பொழுதும் இனி இங்கு வருவதில்லை," என்று கதறிக்கொண்டு ஓட்டம் பிடித்தாள்.

அஷ்டலக்ஷ்மிகளும் அடிவைத்த அன்று முதல் தனபாலரது வீடு மீண்டும் அஷ்ட ஐஸ்வரியங்களாலும் பொங்கிப் பொலிந்தது. சீராளன் தன் செல்வியான சுந்தரவல்லியின் சூழ்ச்சித் திறமையை வியந்து பாராட்டினான். மாமனாரும் மருமகளை மனமுவந்து வாழ்த்தினார். குடும்பம் சௌக்கியமாக வாழ்ந்து வந்தது.

இதனால் சாயங்காலம், ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் திருவிளக்கேற்றுதல் வேண்டுமென்றும், வெள்ளிக்கிழமை விரதமிருந்து தீபம் ஏற்றித் தெய்வம் தொழுதால், லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகும் என்றும் நம்மக்கள் நம்புகிறார்கள். ஆகையால், திருவிளக்கேற்றித் தெய்வம் தொழுங்கள்!

———:O:———

## மன நிறைவாய்ந்த மங்கையர் வாழ்த்தும் தமிழ்நாடு.

காதலும் கற்பும் இனிதமைந்த கன்னியர் வாழ்ந்ததும் தமிழ்நாடு. தாம் காதலித்து மணந்த கணவரையன்றி மற்றைய ஆடவரை மனதிலும் தீண்டாத மறுவிலா நெறியே தமிழ்மாதர் நெறியாகும். அவ்வாறே தாம் மணந்த மங்கையரையன்றி மற்றைய மாதரைச் சிந்தையாலும் தொடாத செந்நெறியே தமிழ்நாட்டு ஆடவாது அறநெறியாய் அமைந்திருந்தது. தம் தலைவரல்லாத பிறர்நெஞ்சு புகுதலே நிறையமைந்த மாதர்க்குக் குறையெனக் கருதிய நாடு தமிழ்நாடேயாகும். கற்பெனும் பெருமையைத் தெய்வமாகக்கொண்டு வணங்கிய நாடும் தமிழ்நாடே. கற்பின் அளப்பரும் பெருமையை உலகிற்கு அறிவுறுத்தியதும் அந்நாடே. ஆக்கலும் அழித்தலும் நிறையமைந்த மாதரால் ஆகுமென்று வெள்ளிடைமலைபோல் விளக்கியதும் அந்நாடே. மன நிறைவாய்ந்த் மங்கையர் வாழும் தமிழ்நாட்டில் காதலனை இழந்து கண்ணீர்வடித்த கண்ணகியார்,

"மட்டார்குழலார் பிறந்த
பதிப் பிறந்தேன்
பட்டாங்கில்யானுமோர்
பத்தினியே யாமாகில்
ஒட்டேனை சோடெழிப்பேன்
மதுரையையும்"

என்று வஞ்சினம் கூறியபோது மதுரைமாநகரம் எரியினுக்கிரையாகிற்றென்று செந்தமிழ் நூலாகிய சிலப்பதிகாரம் கூறுகின்றது. இதனால் மறுவிலாக்கற்பு வாய்ந்த மங்கையர் தம் சொல்லால் உலகழிக்கும் திறம்பெற்றிருந்தாரென்பது இனிது விளங்கும். உயரிய திறமும் கற்பமைந்த மங்கையர்பால் களித்திலங்கக் காணலாம். ஆசிலாக் கற்புவாய்ந்த ஆதிரை எனும் நல்லாள் கையினால் அளித்த அன்னம் அள்ள அள்ளக் குறையாது நிறைந்து தமிழ்நாட்டில் ஊண் ஒலியை ஒடுக்கிற்றென்று மணி மேகலை கூறுகின்றது.

# தவளாதேவியின் தேசாபிமானம்

## அல்லது

## வஞ்சித்தவருக்கு உதவி

●

“ சமுனி ”

நமது பாரதகண்டம் எனப் பெயர் பெற்ற இந்தியா நாட்டிற்குத் தலைநகரம் ‘‘ டில்லி ’’ என்பது நம்மவர்களுக்குத் தெரிந்த விஷயம்.

கிறிஸ்து பிறந்த பன்னிரண்டாவது நூற்றாண்டின் கடைசியில் அந்தப் பட்டணத்தை ஆண்டு வந்தவன் ‘‘பிருதுவி’’ என்ற கீர்த்திபெற்ற ஒரு சக்கரவர்த்தி.

அந்தக் காலத்தில் தலைநகராகிய டில்லிப் பட்டணத்திற்கு கொஞ்சம் தென்மேற்கே இராஜதானிக்குள்ளேயே ‘‘ சாண்டில்லியம் ’’ என்று பெயர்பெற்ற ஒரு சிறு இராஜ்யம் இருந்தது. அக்காலத்தில் அதை ஆண்டு கொண்டிருந்த “ சாண்டில்லியதிபதி” யென்பான் தன் மகனின் இளமைப் பருவத்திலேயே மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் ஏகினான்.

அவன் பிள்ளையின் பெயர் ‘‘ பரமல்லன்.’’ இளம்பிராயத்தில் இவனை அன்புடன், இவனுடைய நெருங்கிய உறவினனும், சாண்டில்லியத்தில் உயர்ந்த பதவியைப் பெற்றவனுமாகிய ‘‘ யசோவந்தனும் ’’ அவன் தர்ம பத்தினியாகிய ‘‘ தவளாதேவியும் ’’ வளர்த்து வந்தார்கள். இவர்களுக்கு ‘‘ அளகன், அதுலன் ’’ என்ற இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள். ஒரு தாய் மக்களென இம்மூவரும் மிகவும் நெருங்கி உறவாடி வளர்ந்து வந்தார்கள். இப்படி சிறிது காலம் சென்ற பின்னர், பரமல்லனின் தக்க வயதில் அவன் சாண்டில்லியத்தைச் செங்கோல் செலுத்துவானாயினன். இதுகாறும் வளர்த்து வந்த யசோவந்தனும் பரகதியானான்.

ஒரு நாள் அளகன் ஒரு குதிரையின் மீது சவாரியாக அரண்மனைக்குப் பரமல்லனைப் பார்க்கும் பொருட்டு சென்றான். அதிலட்சணம் பொருந்திய அந்த அழகுள்ள குதிரையைப் பார்த்தவுடன் பரமல்லன் அதன்மேல் விருப்பங்கொண்டான். அவன் அளகனைப் பார்த்து, ‘‘ அளகா ! குதிரையோ எவர் பார்த்த பொழுதிலும், அனுபவம் இல்லாதவருங்கூட, அரபிக் குதிரை என்று சொல்லிவிடும்படியாக இருக்கிறது. அந்த மாதிரி எல்லா லட்சணங்களும் பொருந்திய பெண் குதிரையை நான் இதுவரையிலும் பார்த்ததில்லை. ஆகையால் இந்தக் குதிரையை எனக்குக் கொடுப்பாயா ?’’ என்றான்.

அளகன் :—என்னுடைய உயிரை வேண்டுமானாலும், தங்களுக்குப் பாத காணிக்கையாகச் செலுத்தத் தயாராய் இருக்கிறேன். இந்தக் குதிரையை அதற்கும் மேலாக நான் நினைக்கிறேன். ஆதலால் தயைசெய்து மன்னிக்கவும்.



பரமல்லன் :—என்ன சொன்னாய் ? நீ யார் முன்னிலையில் நிற்கிறாய் என்பதை நினைத்தாய் இல்லைபோலும்! விலையுயர்ந்த பொருள்களெல்லாம் அரசனுக்குச் சொந்தம் என்பதை ஏன் நீ அறியக்கூடாது ?

அளகன் :—நல்ல நியாயம்! பிரஜைகளுடைய நல்ல சொத்துக்களை எல்லாம் இராஜாக்கள் அபகரித்துக் கொள்வது இராஜ தர்மம் என்று நான் எண்ணவில்லை. அதிலும் தங்களைப் போலொத்த இராஜாக்கள் அப்படிச் செய்வார்கள் என்று எண்ணவும் என்னால் முடியாது.

இவ்விஷயங்கள் அனைத்தையும் பரமல்லன் கேட்டபோது கோபம் மேலிட்டுப் பல்லை நரநர வென்று கடித்துக்கொண்டு, கண் சிவந்து, தீப்பொறி பறக்கும்படியாக, மீசை துடிக்கத் தன் மந்திரியை அழைத்து உடனே சென்று அளகனையும், அதுலனையும், புருஷனை இழந்து ஒரு வருடங்கூட ஆகாத கைம்பெண்ணாகிய அவர்களின் தாயோடுகூட தேசப்பிரஷ்டஞ் செய்யும்படி கட்டளையிட்டான். எவ்வளவோ செல்வத்தில் ஆழ்ந்து சகலவித பாக்கியங்களை அநுபவித்துக்கொண்டிருந்த இவர்கள் சிறிது நேரத்திற்குள் தம் நாடு, வீடு, செல்வம், பண்டங்கள் முதலிய வெல்லாம் துறந்து, கொஞ்சமும் நெஞ்சத்தில் இரக்கமில்லாத இவ்வரசனது கட்டளைப்படி சாண்டில்லியத்தை விட்டு துரத்தப்பட்டார்கள்.

அநாதை என்று சொல்லும்படி தாய் தந்தையரைச் சிறு வயதிலேயே இழந்த இப்பரமல்லனை அன்போடணைத்து, அழுதகண் துடைத்து, ஆர்வமுடன் கொஞ்சி தம் பிள்ளைகளில் ஒருவனாக இந்நாள்வரை வளர்த்து வந்த இவனது அன்னைக் கன்னையாகிய தவளா தேவியையும் வணங்காத இவனது கொடுமையையும் மதிக்கேட்டையும் என்னவென்று விளம்புவது? வேலியே பயிரைத் தின்றால் என்ன செய்வது?

... ... ...

நெடிய அலைகடல் சூழ்ந்த இந்நிலவுலகின் கண் எங்கேயாவது போவதென்று மூவரும் தீர்மானித்துக் கொண்டார்கள். இவ்விதம் நேர்ந்த ஒரு கொடுமையால் அநேக சங்கடங்களும் கஷ்டங்களும் அநுபவிக்க வேண்டி நேர்ந்தது. என்ன இருந்தபோதிலும், எவ்வளவு உஷ்ணமான பகலும் பன்னிரண்டு மணி நேரத்திற்கு மேலில்லை யென்று தங்கள் மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டார்கள். காடு, மலை, வனாந்திரங்கள் எல்லாங் கடந்து அநேக பட்டணங்களையுந் தாண்டிக் கடைசியாக அவர்கள் ஜயச்சந்திர மகாராஜாவினால் ஆளப்படும் கன்னியாகுப்ஜம் என்ற இடத்தில் சிறிதுகாலம் அவருடைய தயவால் அவரது விருந்தினராகத் தங்கள் காலத்தைக்கழித்து வருவாராயினர்.

இவ்வாறு இவர்கள் தூரதேசத்திலிருந்தும் இவர்களைப் பரமல்லன் பலவிதமான அக்ரமங்களால் அழிக்கும் வழிதேடிக் கொண்டேயிருந்தான். “ கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே ” என்பதற்கிணங்க இவன் பிரஜைகளாகிய இவர்களோடும் நில்லாமல், பிருதுவிசக்ரவர்த்தி யுத்தம் முடிந்து திரும்பிப் போகும் சமயத்தில் ஒளிந்திருந்து, சில போர்வீரர்களுடன் அவரை எதிர்த்து அவர்

கொண்டு சென்ற தனத்தையும் கைப்பற்றினான். பின்னர் இந்தக் கிருத்தியத்திற்குக் காரணபூதன் பரமல்லன் என்றறிந்து, அதிக கோபங்கொண்டவனாய் உடனே தானே ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு பிருதுவி சாண்டில்லியத்திற்குத் தலை நகராகிய "மஹாபத்தியத்திற்கு" சமீபத்தில் சென்றான். இப்படி இவன் யுத்த சன்னத்தனாய் வந்திருக்கும் விஷயத்தை யறிந்ததும் பரமல்லன் தன்னுடைய புத்தியின்மையைக் குறித்து விசனிக்க ஆரம்பித்தான்.

என் செய்வது! சுழல்காற்றிலகப்பட்ட துரும்பைப்போல் மயங்குவானாயினான். "ஐயோ! என்னுடைய சைன்னியம் எதிரிராஜனுடைய சதுரங்க பலத்திற்கு எம்மட்டு? வில்லெடுத்துப்போர் புரிவதில் முதன்மை பெற்றவனென எல்லோராலும் கொண்டாடப்படும் "பிருதுவி" சக்கரவர்த்தி எங்கே? நான் எங்கே," என்று பலவிதமாய் வாடிவருந்தி விசாரத்துடனிருப்பதை அவனுடைய புத்தியுள்ள பட்ட மகிஷியாகிய "மகிழாம்பாதேவி" கண்டு, "எதற்காக நாதா! தாங்கள் இவ்வித வருத்தத்துடனிருக்கிறீர்கள்!" என்று வினவலானாள்.

பரமல்லன் :— கண்ணே! தீர்ந்தது என்னுடைய காரியம். நான் துராசையினால் பிருதுவிச் சக்கரவர்த்திக்கு ஒரு அபசாரம் செய்துவிட்டேன். நாளை பொழுது விடியுமுன் சக்கரவர்த்தி ஒரு பெரிய சேனையுடன் நம் கோட்டையை முற்றுகை போடப் புறப்பட்டு விட்டதாகச் சேதி வந்திருக்கிறது. அவர் வந்தால் நமது இராஜ்யம் அழியுமென்பதற்கையமில்லை. எவ்விதக் கெடுதிகளெல்லாம் சம்பவிக்கப் போகின்றதோ?

மகிழாம்பாள் :—நாதா! ஏன் இதற்காக மிகவும் வருந்துகின்றீர்கள். வந்தால் தங்களுக்கு உதவியாக நம் பிரஜைகளில் ஒருவருமில்லையா?

பர :—எனக்கா? இந்தப் பாவிக்கா? பிரஜாதுரோகியான எனக்கு உதவியாக யார் இருக்கப் போகிறார்கள்?

மகி :—நாதா! இருப்பார்கள்—இருக்கிறார்கள். தாங்கள் இரண்டு பேர்களை தேசப்பிரஷ்டம் செய்திருக்கிறீர்களல்லவா?

பர :—யார்! அளகனும் அதுலனுமா? அவர்கள் இப்பொழுது எவ்விடமிருக்கின்றனரோ? என்னவானார்களோ? நான் அழைப்பதாகக் கூறினால் அவர்கள் வருவார்களா?

மகி :—நாதா! அதற்கு எவ்வித உபாயமேனும் செய்யலாம். தாங்கள், சக்கரவர்த்தி யுத்த சன்னத்தராய் வந்ததும், தங்களுடைய பிரஜைகளில் இரண்டு பேர்கள் நாட்டிலில்லாததால் அவர்கள் வந்தவுடன் யுத்தம் தொடங்க அனுமதி கொடுக்கக் கேட்கவேண்டும். கருணையும் தீரமும் நிறைந்த அந்த மகானுபாவர் தங்களுடைய அபேக்ஷையை ஒருக்காலும் அங்கீகரியாமல் இரார்.

பர :—ஆம். அதனால் என்ன பயன்? கரையுடைந்த பிறகு அணைகட்டிப் பயனென்ன? கைதவறிப் போன பராக்கிரமசாலிகளான அவ்விருவரும் இப்பொழுது என்பக்கத்தில் உதவியாக இருந்தால்—கஷ்டம்! துரோகியாகிய நான் அவர்களுடைய பிதா இறந்ததும் சாதுக்களான அவர்களையும், அஷ்டைஸ்வரியமும், லட்சணமும், குணமும் பொருந்திய அவர்களுடைய தாயையும்—ஐயோ! பெற்ற தாயினும் மேலாய் என்னை போஷித்து வந்த அவர்கள் தாய்க்கு—நான் என்ன கிருத்தியம் செய்தேன். என்னைப்போன்ற பாவி இவ்வுலகத்திலுண்டோ?





மகி:—தங்கள் தைரியத்தைக் கைவிடாதீர்கள். இப்பொழுதாவது தங்களுக்கு மனதில் பச்சாதாபம் மேலிடுகின்றதல்லவா? அதுவேபோதும். ஜகதீசன் தங்களுடைய குற்றங்களை மன்னிப்பதுடன், தங்களுக்கு யாதொரு விதமான தீங்கும் நேரிடாதபடி காப்பாற்றுவான்.

இவ்விதம் இருவருடைய சம்பாஷணையும் முடிவுபெற்றது. மறுநாள் காலை சக்கரவர்த்தி பரிவாரங்களுடன் பட்டணத்திற்குள் சென்று பார்க்கும்பொழுது, யுத்தத்திற்குத் தயாராகவிருக்கும் யாதொரு சின்னங்களும் மஹாபத்தியத்தில் காணப்படவில்லை. விபரீதமாக சைந்நியங்களுக்குப் பதிலாக விருத்தாப்பியம் அடைந்த ஒரு மனிதனும், பீரங்கிக்குப் பதிலாக மிகவும் வணக்கத்துடன் எழுதப்பெற்ற ஒரு கடிதமும் அவ்விடத்திலிருந்தன. பரமல்லனுடைய தர்மபத்தினியின் வாக்கின்படி இவ்விதம் நடந்திருக்கின்றதென்பது சொல்லாமலே வாசகர்களுக்கு விளங்கியிருக்கும். அந்த லிகிதத்தை எடுத்து பிருதுவி படித்ததும், அவனுக்கு அடக்க முடியாத சந்தோஷம் வந்துவிட்டது. துர்பலனாகவோ, யுத்தத்திற்குத் தகுந்த ஏற்பாட்டுடன் இல்லாதவனாகவோ இருப்பவனிடம் யுத்தம் செய்வது க்ஷத்திரிய தர்மத்திற்கு ஒத்ததல்ல. "பிரஜைகளில் போயிருக்கும் இரண்டு பேர் வந்த பிறகு தானோ நம்மை ஜெயிக்கப் போகிறான் பரமல்லன்! சரி இருக்கட்டும் பார்ப்போம். ஒரு மாதம் கழிந்தபிறகு நான் மறுபடியும் வருவேன்", என்று அக்கிழவனிடம் கூறிவிட்டு, அந்த வீரசிகாமணி தன் திக்கை நோக்கித் திரும்பிச் சென்றான்.

மகிழாம்பா தேவிக்கு அடிக்கடி தவளாதேவியிடமிருந்து கடிதம் வந்துகொண்டிருந்தபடியால், அளகன் முதலானோர் இப்பொழுது கன்னியாகுப்ஜத்தில் வசிக்கிறார்கள் என்று பரமல்லன் தெரிந்துகொண்டான். சாண்டில்லியத்தை மிகவும் பலவானான ஒரு சத்துரு அதாவது டில்லியைப் பரிபாலிக்கும் சக்கரவர்த்தியே படையெடுக்க நிச்சயத்திருப்பதால் அதைத் தடுக்க தான் சக்தியற்றவனாகவிருக்கின்றபடியால், அளகனும் அதுலனும் தங்களுடைய தாயுடன் ராஜ்யத்தைக்காக்க மஹாபத்திய நகரத்திற்கு வந்து சேரவேண்டுமென்று ஒரு கடிதமெழுதி அளகனுக்கும், மற்றொன்று மகிழாம்பாள் தேவியிடமிருந்து தவளாதேவிக்கும் இரண்டு கடிதங்களாக ஓர் தூதனிடம் கொடுத்தனுப்பி, கன்னியாகுப்ஜத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி அனுப்பினர். அத் தூதனும் இவர்களிடம் கடிதங்களைச் சேர்த்தனன். கடிதங்களைப் பிரித்துப் படித்ததும், தன் புத்திரர்களைப் பார்த்துத் தவளாதேவி, "என் அருமைமக்களே! நீங்கள் என்ன முடிவுக்கு வந்தீர்கள்" என்று பொதுவாகக் கேட்டாள்.

அதற்கு அளகன், "அம்மா! என்ன முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. பரமல்லனும் சாண்டில்லியனும் சேர்ந்து ஒன்

ருக இறக்கட்டும். அதனால் நமக்கென்ன நஷ்டம். அந்த மகாபாவியோ பால் கொடுத்த கையைக் கடிக்கும் பாம்பு. அம்மா! அவனல்லவா நம்மை இவ்விதம் வீட்டையும் நாட்டையும் விட்டு அடித்துத் துரத்தி இடைவழிப் பிணங்களாகச் செய்து தண்டித்தவன்" என்றான்.

இதைக் கேட்டதும் தவளாதேவியின் கண்கள் கோபத்தால் சிவந்தன. உதடுகள் துடித்தன. அவ் வுத்தமஸ்திரீயின் கண்கள் இரண்டும் நாலுபக்கங்களிலும் இருண்ட மேகங்களால் சூழப்பெற்று, இப்பொழுதோ சிறிது நேரத்திலோ மழையை எதிர்பார்க்கப்பெற்ற ஆகாயம்போல் கண்ணிறைந்த கண்ணீருடன் தன்னுடைய ஸ்ரீமந்த புத்திரனாகிய அளகனை நோக்கி, "அடே! என்ன சொன்னாய்? நீயோ ராஜ புத்திரன்? நீயோ யசோவந்த வீரனின் பெயரை நிலை நிறுத்தப் பிறந்த புத்திரன்? நீயோ மாத்ரு வாக்ய பரிபாலனம் செய்யப்போகும் புத்திர ரத்தினம்? என்ன சொன்னாய்? இன்னுமொருமுறை கூறு. உன் நாக்கை அப்படியே சேதித்துவிடுகிறேன் பார்!" என்றாள்.

அளகன்:—அம்மா! கோபித்துக்கொள்ளாதீர். நீர் சொல்வதைக் கேட்கின்றேன். என்பேரில் குற்றமில்லை. முன் நடந்த விஷயங்களே அதற்குக் காரணம் அம்மா! பிரஜா தர்மத்தையும் க்ஷத்திரிய தர்மத்தையும் நான் மறக்கவில்லை; மறக்கவும் மாட்டேன்.

தவ:—என் கண்ணே! அப்படிச்சொல். இதை முதலிலேயே நீ கூறியிருக்கவேண்டும். அதுலா, நீ என்ன சொல்லப் போகின்றாய்?

அதுலன்:—அம்மா! எப்பொழுது தகப்பன் இறந்தாரோ அப்பொழுதே என் சகோதரர் என் தந்தைக்குச் சமானமாகின்றார். பிள்ளைகள் பெற்றோர் வாக்கிய பரிபாலனம்செய்யக் கடமைப் பட்டவரானபடியால் உங்களுடைய சொல்படி நடக்கத் தயாராயிருக்கின்றேன்.

தவ:—சரி ஆனால் உடனே புறப்படுங்கள். ராஜாவால் நமக்கு நேர்ந்த இத்தகைய துன்பங்களைப்பற்றி ஆலோசிக்கும் சமயம் இதுவல்ல. அதுமாத்திரமில்லை. கழிந்த காரியங்களைப்பற்றி ஒருநாளும் நினையாமல் இப்பொழுதே விட்டுவிட வேண்டும்.

அளகனும் அதுலனும் தங்கள் தாயாரோடு ஜயசந்திரன் அநுமதி பெற்றுக் கொண்டு உடனே புறப்பட்டு மஹாபத்தியத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். பரமல்லன் இவர்களைக் கண்டதும் தாங்கொணாச் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவனாய்ச் சாஷ்டாங்கமாக தவளாதேவியை நமஸ்காரம்செய்து, தான்செய்த அபராதங்களனைத்தையும் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். நெடுநாள் பிரிந்து சேர்ந்த சிநேகிதர்களைப்போல் அளகன் அதுலன் இருவரையும் தழுவிக் கொண்டான். இவர்களின் உதவி ஏற்பட்டிருப்பதால் ராஜபக்தர்களுக்கு அடக்கமுடியாத சந்தோஷம் உண்டாயிற்று. இரண்டுவாரத்திற்குள் ஒரு திரண்ட சேனையைத் தயார்செய்தனர்.

பிருதுவிச் சக்கரவர்த்தி ஒரு மாத காலம் சென்றதும் மறுபடியும் யுத்த தளவாடங்களுடன் வந்து சேர்ந்தனன். இம்





மஹா வீரனிடம் எதிர்த்துப் போர் செய்யும்படி ஆண்ட பிரஜைகளில் ஒருவருக்கும் துணிவு வரவில்லை. ஆகையால் இவனிடம் போர் புரிவதைவிட "கீழடங்குவதல்லவா நல்லது" என்று பயமே குடிகொண்ட பரமல்லனும் கூறினான்.

அளகன்:—அப்படியாயின் தாங்கள் எங்களையும் இவ்வவமானத்துக்கு உட்படும்படி அழைத்திருக்கலாகாதே!

பரமல்லன்:—அளகா! நமக்கு நேர்ந்திருக்கும் சத்துருவின் பலத்தை நன்றாக ஆலோசிக்குமிடத்து இவ்விதம் கூறமாட்டாய். பிருதிவிச் சக்கரவர்த்தி தனக்கெதிராக இக்காலத்தில் போர்புரிய ஒருவரும் இல்லையென்று பேர்வாங்கியிருக்கிறான். அவனை ஜயிக்கவேண்டுமாயின் இனியாராயினும் உலகத்தில் பிறக்கவேண்டுமே தவிர, இப்பொழுது ஒருவருமில்லை. அன்றியும் நாமோ எதிர்த்துப் போர்புரியும் திறமையற்றவர்களென்று தெரிந்திருந்தும், இக் காரியத்தில் தலையிடுவதானது என் மனதை சஞ்சலத்திற்குள் ஆழ்த்துகின்றது. ஆதலால் தீரயோசித்து செய்வதுதான் மேலென எண்ணுகிறேன்.

அளகன்:—அரசே! எங்களுடைய ஜீவன் எங்களுக்குப் புல்லுக்குச் சமானம். ராஜவாகிய தங்களுடைய ஜீவனை எவ்விதத்திலும் எங்களுடைய உயிரைக் கொடுத்தேனும் காப்பாற்றத் தயாராயிருக்கின்றோம். நித்தியமாய், நிர்மலமாய், நிஷ்களங்கமாய், நிராகரமாய், நிறைவாய், நீங்காச் சத்தமுமாய் விளங்குகின்றவர் எவருண்டோ அவர் எங்களை வீரசொர்க்கத்திற் சேர்த்துக்கொள்வார்.

தவளாதேவியும் யுத்தம் செய்வதே மேன்மையென அவளது முகபாவத்தால் தெரிவித்தனள். மறுநாள் மஹாபாரதத்தில் கூறியுள்ள யுத்தத்தைப்போல் அதி பயங்கரமான யுத்தம் நடைபெற்றது. தனக்கு நிகர் ஒருவருமில்லையென சிந்தித்திருந்த பிருதுவிச் சக்கரவர்த்தி அளகன் அதுலன் இவர்களுடைய சாமார்த்தியத்தைக் கண்டு மிகவும் வியப்படைந்தார். தூதர்களின் மூலமாக அவர்களின் சரித்திரங்களைக் கேட்டறிந்தபொழுது, அம் மகான் "இப்படி தெய்வ பக்தியும், தேச பக்தியும் உள்ளயெளவன புருஷர்களின் ஆயுளுக்காக நான் கடவுளை நமஸ்கரிக்கின்றேன். நான் இனி ஒருபோதும் சாண்டில்லியத்தை ஆக்கிரமிப்பதில்லை" என்று சொல்லிப் பரமல்லனோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு தன்னாட்டிற்கேகினான். பரமல்லனும் அளகன் அதுலன் முதலானவர்களோடு தன் ராஜ்யத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன் எப்படி அந்நி யோந்நியமாய் இருந்தனரோ, அது போல்தன் பின்னாட்களையும் கழித்து வந்தான்.

# தட்டுவது யார்?

"சமுனி"

பிரதிதினமும் ஓர் கிராமப் பெண் தனது பிதாவின் ஆடுமாடுகளை மந்தைக்கு ஓட்டிச்செல்வாள், அவள் பெயர் தயா.

அப்படியே தினந்தோறும் மாலையில் பாட்டுக்கள் பாடிக்கொண்டு சந்தோஷமாக வீட்டிற்குத் திரும்புவாள் தயா.

ஒரு நாள் மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கும் புல் தரையில் தனிமையாயிருக்கையில் தனது இதயத்துள் ஏதோ சப்தங்கள் முழங்கிக்கொண்டிருப்பதைக் கேட்டாள்.

அச்சப்தங்கள் எங்கிருந்து வருகின்றன? எதை விளக்குகின்றன?

மறுநாள் மாலையிலும் வழக்கம்போல் தயா இல்லத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கையில் அழகிய ஓர் ஏரியைக் கண்டாள்.

அவ்வேரியின் வனப்பு அளவிடற்பாலதன்று. அதின்கண் உள்ள தண்ணீரை உற்று நோக்கினாள். ஓர் உருவிழித் தோற்றத்தைக்கண்டு திகைப்புற்றாள். கிருஷ்ணா! கிருஷ்ணா!! வென முழங்கும் ஓர் ஒலியும் கேட்டாள்.

மாலையில் வீடுவந்து சேர்ந்ததும், தனதன்னையைச் சந்தித்து 'கிருஷ்ணன்' என்பவன்யார்? அவன் எங்கிருக்கிறான் என்று வினவினாள்.

'கிருஷ்ணன் வாழ்க்கைக் கடவுளாகும். அவன் ஆரண்யத்தில் வசிக்கிறான்,' என்று அவள் தாய் விடையிறுத்தாள்.

இரவில் தயா உறங்கினாள். அவளது எண்ணம் முழுதும் வாழ்க்கைக் கடவுளாகிய அம்முதல்வனிடமே பதிந்துகிடந்தது.

வீட்டிலுள்ளோரனைவரும் நித்திரா தேவியின் ஆதிக்கத்தின் கீழிருந்தனர். தயா மெதுவாகத் தனது பெற்றோர்களின் பாதங்களைத் தொட்டாள்.

தனது சகோதரர்கள் உறங்குவதை ஆதரவுடன் நோக்கினாள்.

தயா முற்றத்தில் வந்து நின்றாள். பின்னர் அவளது கண்கள் அன்பு ஒளிவீசத் தனது பெற்றோர்களையும் சகோதரர்களையும் மீண்டுமொருமுறை உற்று நோக்கினாள். நள்ளிருளில் தன்னந்தனியே வெளிச் செல்லத்துணிந்தாள். எதன் பொருட்டு? கானகத்தில் கண்ணனைக் காரிருளில் காணுதற் பொருட்டு.

அடைவி நுழைந்தாள். 'ஏ கிருஷ்ணா! நீ கானகத்தில் வாழும் வேடுவன். ஏ! வாழ்க்கை முதலே! நின்னுடன் வசித்தற் பொருட்டு ஈண்டு வந்துள்ளேன்.' என மும்முறை மொழிந்தாள்.

ஆனால் 'நினது வீடு செல்! ஆரண்யத்திலென்னை நீகாணலாகாது' என்ற சப்தங் கேட்டது.

இம்மொழி செவியுற்றதும், தயா அவற்றிற்குக் கீழ்ப்படிந்தவளாய்த் தன் வீடு நோக்கித் திரும்பினாள்.

பின்னர் தினந்தோறும், ஏதோ சிலசப்தங்கள் எழுந்து கொண்டிருந்தன. அவற்றை அவள் கேட்டுக்கொண்டிருந்தனளே யன்றி, அவற்றின் பொருளை அவள் அறியவில்லை. சில சமயங்களில் கண்டாகந்திக்கும் பொருட்டு வெளிச் சென்று நோக்குவாள். ஆனால் எவ்விதத் தோற்றமும் அவளது கண்கட்குத் தென்படவில்லை.



ஓர் தினம், உச்சி வேளை. கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது.

தயா, கபாடம் திறக்கச் சென்றாள். அங்குச் சென்று அவள் கண்ட காட்சி என்ன? உடல் மெலிந்து தோல் சுருங்கியுள்ள ஓர் ஏழை விதவையின் உருவத்தைக் கண்டாள். "அன்னையே! நினக்கு என்னால் செய்யக்கூடிய உதவியென்ன?" என்று தயா கேட்டாள். 'நான் தாகமேலீட்டால் வருந்துகிறேன். இன்று முழுதும் எவ்வித உணவும் உட்கொள்ளவில்லை. எனது மானத்தை மறைக்கக் கந்தையும் கூட என்னிடமில்லை.' எனப் பதிலுரைத்தாள்.

இம்மொழிகளைக் கேட்டதும் தயா தனது சமையலறையினுள் நுழைந்து அதிசீக்கிரத்தில் உணவு தயாரித்தாள். தனது பெட்டியைத் திறந்து சிறிது காலத்திற்குமுன் தனக்குத்தன் அன்னையால் அளிக்கப்பட்ட நேர்த்தியான கதர் வஸ்திரமொன்றை எடுத்தாள். அவ்வஸ்திரம் முக்கியமான விசேடகாலங்களில், தயா அணிந்துகொள்ள வேண்டுமென்று அவளுக்கு அவளது அன்னையால் கொடுக்கப்பட்டதாகும்.

தயா தான் தயாரித்த உணவையும், தான் கொண்டுவந்த ஆடையையும் மூதாட்டியின் பாதகமலங்களில் சமர்ப்பித்து வணங்கி நின்றாள்.

பின்னர் பானத்திற்குத் தண்ணீர் கொண்டு வரும் பொருட்டுச் சென்றாள்.

திரும்பவந்ததும் 'அன்னையே! இதோ தண்ணீர்!' என்று கூறி பாத்திரத்தையெடுத்து மூதாட்டியின் உதடுகளண்டை கொண்டு போய்ப்பருக உதவினாள். என்ன ஆச்சரியம்! மூதாட்டியைக் காணோம்! மறைந்து விட்டாள். தனது சிறு குடிசையுங்காணோம். திடீரென ஓர் அழகிய மாளிகை தயா கண்முன் தோன்றியது. பல தீபங்கள் பிரகாசித்துக்கொண்டிருந்தன. எங்கும் செவிக்கினிய சங்கீத சப்தம் முழங்கிக்கொண்டிருந்தது. மாளிகை மத்தியில் கண்ணபிரான் உட்கார்ந்துகொண்டு வீணாகானம் செய்து கொண்டிருந்தார். தயா அவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தாள். பகவான் கிருஷ்ணன் அவளது பக்தியை மெச்சி, "அவ்வேழை விதவை எனது ரூபம். நான் தாகத்தால் வருந்தினேன். நீ எனக்குத் தண்ணீர் அளித்து எனது தாகத்தைத் தணித்தாய். நான் பசியால் வருந்தினேன். நீ எனது பசிப் பிணியை யகற்றினாய். யான் ஆடையின்றி நிர்வாணியாயிருந்தேன். நீ எனக்கு ஆடையளித்து எனது மானத்தைக் காப்பாற்றினாய். நான் காட்சி கொடுத்ததே நினக்கு வெகுமதி' எனக்கூறினார்.

இது வோர் ஒப்பனைக் கதையாகும். பசிப்பிணி தோற்றமுள்ள கண்களோடும், இரத்தம் வற்றிய முகத்துடனும் இந்தியாவின் கதவைத் தட்டுவது யார்?

ஏழைகளின் தோழனான கிருஷ்ணன் தாகத்துடனும் பசியுடனும், நிர்வாணமாக நிற்கின்றார் என்பதைச் சிந்தனையிலாழ்த்தி வாருங்கள்.

# நங்கையர் அழகு

திரு டி. கே. கோவிந்தய்யர்



ஒரு நாட்டிற்குச் சிறப்புண்டாக வேண்டுமெனின் அதற்கு அந்நாட்டுப் பெண்டிரே முன் நிற்பவர். அவர் தமது நற்குண நற்செய்கைகளால் நன்னிலை யோங்கச் செய்து தமது நடத்தையால் தமது மக்களையும் நன்னடையிலொழுகச் செய்து, தேசத்திற் கணியாக விளங்கச் செய்வர். ஆகையால் எந்த எந்தத் தேசத்துப் பெண்கள் தமது நடைநொடி பாவனைகளால் கல்மிஷ மற்று விளங்கித், தமது மக்கட்கு நல்ல ஒழுக்கத்தைச் சொல்லாமலே ஒழுகச் செய்கின்றனரோ, அந்நாடு முந்தி விளங்குமென்பதற்கு நமது பூர்வீக நாடே அத்தாட்சி. புராணேதிகாஸகாலங்களில் பெண்கள் தமது கணவர்க்கு ஊன்றுகோலாயும், உத்ஸாகாஸ்பதர்களாகியும் விளங்கித் தேச க்ஷேமத்தை முன்னிட்டுக் கணவனையே கடவுளாக மதித்து வாழ்ந்து வந்தார்கள். அத்தகைய தாய்மார்க்குத் தம் நலத்தை மறுத்து, பொது நலத்தையே கருதும் மக்கள் பிறத்தல் ஓரதிசயமாகாது; சிலர் "நமது பெண்டிர்களுக்குச் சுதந்திரமேகிடையாது; அவர் வீட்டுக்குழைக்கும் கூலியாட்கள்; அவர்களை சிறிதும் கவனிப்பாரில்லை" என்று வாய்ப்பறை யறைந்து வம்பு பேசுவர். உண்மையை நோக்குமிடத்து நமது வீட்டை ஆள்வது நமது பெண்களே அல்லது வேறுயார்? நடுத்தெருவில் அலைந்து, பலருடன் கை கலந்து, ஹாஸ்ய பரிகாஸத்துடன் பேசுவதில் ஓர் சுதந்திரம் ஏற்படுமானால் நமது பெண்டிர்களுடைய ஜீவனம் முழுமையும் கூலி ஜீவனமெனவே சொல்லிவிடலாம். ஆனால் நமது இந்திய ஜாதியின் லக்ஷணத்தைக் கவனிக்காது நமக்குத் தோன்றிய விதமெல்லாம் பேசுவது அழகாகாது. பலநாள் தொட்டு நமது உடலுள் பாயுமிரத்தத்தில் ஆத்ம லாபமாகிய தெய்வீகத்தன்மை, கேவலம், கணவனைத் தனது இச்சையை நுகர்வதற்கேற்ற ஸாதனமாக எண்ணாது, தனது முமுக்ஷுத்வத்தை நாட ஏற்பட்ட பெருமாதாரமாக நமது பெண்டிரை எண்ணச் செய்கிறது. இப்பெரும் தெய்வீக நோக்கமே நமது பெண்டிர் மனத்தைக் கொள்ளை கொண்டிருப்பதால், அவரை மேனாட்டாரில் சிலரைப்போல் தம் இறக்கும் கணவரது உயிர் வெளியேறுவதற்குள்ளாக அன்னியனது கரங்களில் தவழ்ந்து குலாவாதிருக்கச் செய்வது. தனது கணவனது சவத்தை அடக்கஞ் செய்த பூமியின்மீது புல் முளைப்பதன் முன்னமே மற்றொருவனை மணாளனாக மதித்து, வாழ்வது அத் தெய்வீக நோக்கம் பாய்ந்த மனத்திலென்றேனு முதிக்குமா? உடல் பொய்யுறவு; உயிர் மெய்யுறவு என நமது பெண்டிர் தமது கணவனிறப்பினும் அவனதுடல் ஒழிந்ததாக எண்ணி, அவனது உயிரை மனத்தால் வணங்கிகைம்மை நோன்பைக் கடனாகக் கொண்டு விளங்குவர். அவரது பெருமையைச் சொல்லவும் பெறுமோ? இம்மூல அபிப்பிராயத்தை முன்னிட்டே வள்ளுவனாரும்

> தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழு
> வாள் பெய்யெனப் பெய்யு மழை.

என அவரது பெருமையை வாயார வாழ்த்தினர். மற்றித்தகைய எண்ணங்களை முன்னிட்டே நமது பெண்டிரது வாழ்க்கை வழி பல நியமங்களுக்குட்பட்டிருக்க நமது ஒழுக்கவிதிகள் ஏற்படுத்தியுள்ளன. அவரது பெருமையை முன்னிட்டே, அவரின்றி யஞ்ஞயாகாதிகள் செய்ய முடியாதாகின்றன. அவரது தன் மறுப்பு, உண்மை நோன்பு, பேரன்பு இவற்றை எண்ணி எண்ணி அவரில்லாத மனையை

> "—விழைதக்க
> மாண்ட மனையாளை யில்லாதானில்லகம்
> காண்டற் கரியதோர் காடு"

என வர்ணித்தனர் பெரியோர். அவ்வாறாயின் பெண் என்பவள் எவள்? அவளது இயற்கைக் குணங்கள் எவை? அத்தகையர் நமது நாட்டில் இருக்கின்றாரா?— இவை முதலாகிய கேள்விகள் பின் தாமே ஏற்படும். அவற்றை நாமே சற்றுக் கவனிப்போம்.

> கட்கினியாள் காதலன் காதல் வகை புனை
> வாள், உட்குடையாள் ஊர்நாண் இயல்பி
> னள், உட்கி இடனறிந்து ஊடி இனிதின்
> உணரும் மடமொழி மாதராள் பெண்.

கட்கினியாள், அதாவது கண்ணிற்கு இனிமையுண்டாகக் கூடியவளாய் இருக்க வேண்டும்; அதாவது தனது கணவனது பார்வைக் கினியவளாய் இருத்தல் வேண்டும். இதனால் அழகே அவள் உருவெடுத்திருக்க வேண்டுமென்பது சொல்லப்படவில்லை; அவ்வாறானால் இந்தக் குணம் எல்லோரிடம் அமைவது அஸாத்தியமாகும். தன்னைத் தன் கணவன் காணின் அவன் மனத்தில் மயக்கம், வெறுப்பு, கோபம் முதலியன உண்டாகாதிருக்கும்படியாக எள்ளுங் கொள்ளுமாக வெடிக்காது நடத்தலே ஆகும். அது கடவுள் கொடுத்த உருவைக் கோபம் முதலியவைகளால் விகாரப்படுத்தாது தமது இயற்கை அமைப்பினால் தமது கணவர்க்கு நேத்ரோத்ஸவமாக விளங்குவதேயாகும்.

பெண்ணின் இரண்டாவது லக்ஷணம் காதலன் காதல் வகைபுனைதல்:—அதாவது தமது கணவர் எதை உடுத்திக்கொண்டால் இன்பமடைவரோ, எதை அணிந்துகொண்டால் ஆனந்தமடைவரோ, அத்தகைய ஆடையாபரணங்களால் தமது இயற்கை அழகிற்கு அழகு செய்வதாகும். இவ்வழகு தமது கணவரது மனதை ஆனந்தஸாகரத்தில் ஆழ்த்துவதால் மங்கையர்க்கு இன்றியமையாததாகும். மூன்றாவது லக்ஷணம் உட்குடைவது; அதாவது அஞ்சுந்தன்மை; தமது கணவர், பெரியோரிவரிடம் வணக்கத்துடன் விளங்குவது. இதனையே கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என ஔவையும் கூறியுள்ளார். நான்காவது லக்ஷணம் ஊர் நாண் இயல்பு; அதாவது உலகத்தாரிடம் நாணத்தோடு விளங்குவது; ஊர் வாயைமூட உலைமூடி தானுண்டோ என்று சொல்வதற்கேற்பப் பயந்து ஊரார் தம்மீது பழிசுமற்றுவதற்கிடங் கொடாது ஊரஞ்சி வாழ்தல். மூன்றாவது லக்ஷணத்தால் வீடஞ்சி வாழ்தலைச் சொல்லி நான்காவதால் ஊரஞ்சி வாழ்தல் கூறப்பட்டது. மற்றும் கணவரிடம் அந்தரங்கத்தில் நடக்கவேண்டிய முறைமையை,

> "உட்கி
> இடனறிந்து ஊடி இனிதின் உணரும்."

எனச் சொல்லப்பட்டுள்ளது; அதாவது தமது கணவரிடம் பயபக்தியுடன் விளங்கி அவரது சுகத்தை முன்னிட்டுச் சமயமறிந்து பிணங்கி இன்பமடைந்து வாழ்வதாகும். இத்தகைய லக்ஷணங்களெல்லாம் அமைந்திருப்பினும், அத்தகை பெண் வடுச்சொல் உடையாளானால் பெண் ஆகாள் என்பது தோற்ற மடமொழி எனக் கூறப்பட்டது. மெல்லியமொழியே மாதர்க் கணிகலம். இத்தகைய லக்ஷணம் பொருந்தியவளே பெண் என்னும் பெயர் பெறத் தகுந்தவளாம். இத்தகைய லக்ஷணத்துடன், வீரம், ஞானம், இவைகளை தமதாக்கி வாழ முயல்வதே நற்குலத்துதித்த நங்கையர்க் கழகு.

# கனகம் தைத்த ‘க்ராஸ் ஸ்டிச்’ படம்

ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயலக்ஷ்மி

ஒரு நாள் காலை ரங்கனாதன் உட்ஹௌஸ் எழுதிய (A Small bachelor) ‘ஒரு சிறிய பிரம்மச்சாரி’ என்ற நாவலை மிகஸ்வாரஸ்யத்துடன் வாசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் மனைவி கனகம் கையில் ஓர் படத்தை பிடித்தவண்ணம் அவ்விடம் தோன்றினாள். தன் கணவன் தன் வருகையை கவனியாது வெகு ஸ்வாரஸ்யமாக ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டு கனகத்திற்கு கொஞ்சம் கோபம் வாராமல் இருக்குமா? நீங்களே சொல்லுங்கள். அவளும் ஐந்து நிமிஷம் நின்று பார்த்தாள். ரங்கனாதன் புத்தகத்திலிருந்து தலையை நிமிர்த்தினபாடில்லை. கொஞ்சம் கனைத்தும் பார்த்தாள், மூக்கை உருஞ்சிப்பார்த்தாள். ரங்கனாதன் அசைந்தபாடில்லை. உடனே “என்னாணா உங்களைத்தான்! மணி பத்தடித்தாய் விட்டது! குளிக்கவுமில்லை. ஆபீஸிற்குப்போகும் யோஜனையுமில்லாமல் நாவல் படித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கேளே! நன்னா இருக்கு” என்று கன்னத்தில் கையை வைத்துக் கொண்டாள்.

ரங்கனாதனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டு, தலையை சொறிந்த வண்ணம் “கனகம், இவ்வளவுமட்டுமாவது எரக்கம் வச்சு எனக்கு நினைப்பு மூட்டினாயே. ரொம்ப தாங்க்ஸ் (Thanks.) உட்ஹவுஸ் நாவல்களைக் கையில் தொட்டுவிட்டால் படித்து முடிக்கும் வரைக்கும் வேறு எந்த யோசனையும் தோன்றுவதில்லை. அவ்ஸ்தை. அவன் எவ்வளவு நன்றாக எழுதுகிறான் தெரியுமா? உனக்கும் இங்கிலீஷ் கொஞ்சம் தெரிந்திருந்தால் என்ன கனகம், நீ படித்து முடித்தால் ஒழிய இப்புத்தகம் என் கைக்கு அகப்பட்டிருக்கவே இருக்காது,” என்று சொல்லிக்கொண்டே அரை மனதுடன் புத்தகத்தை மூடி மேஜைமேல் வைத்தான்.

ரோஷத்துடன் கனகம் “ஆமாம்! எனக்கு இங்கிலீஷ் தெரிந்திருந்தாலும் கூட, லேடீயாட்டமா நான் காலங்கார்த்தாலெ எழுந்ததும் நாவலும் கையுமாக உக்காந்திருந்தால், பத்து மணிக்கெல்லாம் நீங்கள் இலை முன் வந்து உட்கார்ந்தால், யார் சமைத்து தயாராக பரிமாறுவாளாம்? இரண்டு இங்கிலீஷ் எழுத்து தெரியலேன்னுதானே என்னை இப்படியெல்லாம் எளனம் செய்யரேள்” என்றாள்.

ரங்கனாதன் “இல்லை கனகம், தமாஷாகப் பேசினால் கோவிச்சுக்கரையே. உன்னாட்டமா கெட்டிக்காரியாருமில்லேன்னு நாந்தான் தினம் சொல்லரேனே. அப்படி…………” என்று இரண்டு சமாதான மொழிகள் சொல்லவே, கனகமும் சமாதானத்துடன் “அதிருக்கட்டும்னா. உங்களுக்கு ஆபீஸிற்கு நாழிகையாய் விட்டதென்று நினைப்புமூட்ட ஒரு ஆள் வைக்கணும் போலிருக்கு. ஜலம் இறைத்து வையென்று சொல்லி அரைமணிக்கு மேலாயிற்று. இறைத்துவைத்த ஜலமெல்லாம் ஆறி அவலாய்ப் போய்விட்டது. ஆபீஸிலிருந்து திரும்பி வரும்பொழுது அப்படியே எனக்கு சில சாமான்கள் வாங்கிவரேளா” என்று ஒருபுறம் தலையை சாய்த்தவண்ணம் வெகு நயமாகத்தன் நாயகனை கொஞ்சின பார்வையுடன் கேட்டாள்.

ரங்கனாதனுக்கு சாமான் என்றதுமே திகீர் என்றது. அதுவும் சாமான் என்று ஏகவசனத்தில் சொல்லாமல் கனகம் பகுவசனத்தில் சொல்லவே அவனுக்கு இன்னும் திகிலாய் பணத்து யோஜனை வந்துவிட்டது. அவன் ஜிதி இலாகாவில் ஒரு குமாஸ்தா. மாதம் அறுபது ரூபாய் சம்பளம். வீட்டு வாடகை பதினைந்து ரூபாய் தீர்ந்துபோக, மாதா மாதம் பத்து ரூபாய் இன்ஷ்யூரன்ஸிற்கென்று சம்பளத்தில் பிடித்துக்கொண்டு விடுகிறார்கள். மிச்சம் முப்பத்தைந்து ரூபாயில் சென்னையில் சம்சாரம் செய்வது சுலபமா வென்று நீங்களே யோஜித்துப் பாருங்கள் கொஞ்சம். இந்த நடுவில் அவன் மனைவி “தைய்யல் வேலை தைய்யல் வேலை” என்று தைய்க்கும் தடபுடல்களுக்கே மாதம் கண்டிப்பாய் ஐந்து ரூபாயாகிலும் செலவழிக்காமலிருப்பதில்லை. மாதம் பதினைந்து தேதிக்குள் கையிலிருந்த பணமெல்லாம் கரைந்து போய், பாங்கியில் கஷ்ட காலத்திற்கென்று கொஞ்சம் நஞ்சம் கூட்டி வைத்திருக்கும் பணத்திலிருந்தும் வீட்டு செலவிற்காக அப்பப்பொழுது எடுக்க வேண்டி வரும். அன்று இருபதாந்தேதி. கையில் ஒன்றிரண்டு ரூபாய்களே இருந்தன. கனகம்மாளின் பீடிகையை கண்டு ரங்கநாதனிற்கு பயமாயிற்று.

கனகம் புன்சிரிப்புடன் கையிலிருந்த படத்தை மேஜையின் காலின்மீது சார்த்தி வைத்து “இந்த க்ராஸ் ஸ்டிச் பூக்கூடையை பாருங்கள். எவ்வளவு அழகாக இருக்கு. இல்லையா?” என்றாள்.

ரங்கநாதன் மெள்ள, “ஹூம்” என்று கூறி அவ்வறையிலிருந்தும் நழுவ முயன்றான். ஆனால் கனகமா அவனை போகவிடுபவள்! “இதை மூன்றாவது வீட்டு பாக்கியம் தைத்திருக்காள். அவள் இதை தைத்த பொழுதிலிருந்து இதை பார்த்து நானும் தைக்கணும்னு ரொம்ப ஆசையாக விருக்கு. இதை உங்களுக்கு காண்பிக்கணும்னாட்டே நேத்து சாயங்காலம் போய் அவளிடமிருந்து வாங்கி வந்தேன்.”

ரங்கனாதன் “பீடிகை போட்டது போதுமடீ, சொல்ல வேண்டியதை சுருக்க சொல்லித்தொலையேன். ஆபீஸிற்கு நாழிகையாய் விட்டது. நான் குளிக்கப் போகணும்” என்றான்.

கனகம் “அட்டா, எவ்வளவு அவசரம் இப்பொழுது. நான் இங்கு வந்திராவிடில் இன்னும் கதை வாசிச்சுண்டே இருந்திருப்பேள். இன்னிக்கி ஆபீஸிலிருந்து திரும்பி வரும் பொழுது நூலு அட்டை எல்லாம் வாங்கிண்டு வாணும். இல்லாவிட்டா காபி டிண்டீ இல்லைனு வச்சுகோங்கோ என்ன?” என்று நகைத்தாள்.

ரங்கனாதன், “இன்றைக்கு முடியாது கனகம். ஞாயிற்றுகிழமை கட்டாயம் வாங்கி வருகிறேன். அதுவுமல்லாமல் இன்றைக்கு இருபது தேதி தான். அதற்குள் பணமெல்லாம் செலவாய் விட்டது. முதல் தேதிவரைக்கும் செலவிற்கு கையில் இரண்டே ரூபாய்கள்தான் இருக்கின்றன. இந்த சாமான்களை வாங்கிவரவேண்டுமென்றால் கடைசிபக்ஷம் மூன்று ரூபாய்களாவது ஆகுமல்லவா?” என்றான்.

கனகம் “ஒத்தர் வீட்டு பதார்த்தத்தை எத்தனை நாள் வச்சுண்டிருப்பது? அதெல்லாமில்லை; இன்றைக்கு கட்டாயம் வாங்கி வாணும்” என பதில் சொன்னாள்.

ரங்கனாதன் “வர்ணம் பார்த்து நூல் வாங்கி வருவதற்கு படத்தை வேறு சுமந்து கொண்டு போகணுமடீ. ஆபீஸிற்கு செல்லும்பொழுது இம்சிக்காதே கனகா! பார், நீ நல்லவளல்லவா” என்று இனிமையாய்ச் சொன்னான்.

கனகம் “நான் இப்பொழுது என்ன தொந்திரவு செஞ்சுட்டேன்? நகை கேட்டேனா? புடவை கேட்டேனா? மஹா ப்ரமாதம். இந்த சில்லரை சாமான்களை வாங்கிவர என்ன முருக்கு செய்யரேள்; போன கிருஸ்மஸ் லீவில் திருச்சினாபள்ளிக்கு போனபோது எங்கக்கா ரவிகைக்கென்று ஐந்து ரூபாய் வெத்திலை பாக்கில் வெச்சுகுடுத்தா. அதை அப்படியே

செலவழிக்காமல் வச்சுருக்கேன். அதைக் கொடுக்கிறேன். நீங்கள் ஒன்றும் பணம் செலவழிக்கவேண்டாம். பதார்த்தங்களை வாங்கி வந்தால் அதுவேபோதும்" என்று சொல்லிய வண்ணம் தன் பெட்டியை திறந்து ஐந்து ரூபாய் நோட் ஒன்றை கொண்டுவந்தாள். "அப்புறம் ஆகட்டும்" என்று மொண மொணத்துக்கொண்டே ரங்கனாதன் வென்னீர்உள்பக்கம் செல்ல புறப்பட்டான். அவன் வாசற்படியை தாண்டுவதற்குள் தடார் என்று என்னமோ விழுந்த சப்தம் கேட்கவே "என்னடி அது?" என்று திரும்பி பார்த்தான். கனகம் "ஒன்னும் இல்லேண்ணா. க்ராஸ் ஸ்டிச் படம் கீழே வழுக்கி விழுந்து கண்ணாடி உடைந்துபோய் விட்டது. ஆபீஸிற்கு போகும்பொழுது அப்படியே கடைவீதிக்குச் சென்று இதை கண்ணாடி போடக்கொடுத்து விட்டுச் செல்லுங்கள். திரும்பி வரும் பொழுது படத்தையும் வாங்கிக்கொண்டு அப்படியே உல்லன் நூலும் வாங்கி வந்தாலாச்சு" என்று சர்வசாதாரணமாக மொழியவே, ரங்கனாதனுக்கு கோபம் ஜாஸ்தி வந்தது. ஆனாலும் பாவம் வரும் கோபத்தை அடக்கிக் கொண்டு, "இந்தபடம் எவ்வளவு பெரியதாக விருக்கு. இதற்கு கண்ணாடி போடுவதென்றால் எட்டணா சார்ஜு ஆகுமே" என்று மொண மொணத்தவாறு குளிக்கச் சென்றான்.

உடம்பிற்கு சோப்கூட தேய்த்துகொள்ளாமல் சொம்பு ஜலத்தை உடம்பின்மேல் கொட்டிக்கொண்டு அவசர அவசரமாக குளித்தேனென்று பெயர் செய்துவிட்டு, வெளியே வந்தான். தலை க்ராபை வாரிக்கொள்வதற்காக மேஜை யருகில் வரவே உட்ஹௌஸ் நாவல் புத்தகம் அவன் கண்ணிற்பட்டது. "இதனாலல்லவா ஆபீஸிற்கு இவ்வளவு நாழிகையாய் விட்டது" என்று எண்ணினவனாய் கோபத்துடன் புத்தகத்தை எடுத்து கீழே வீசி எறிந்தான். "அத்தெத்—தெ—த்தே—தே" என்று மழலை சொற்கள் சொரிந்த வண்ணம் தன் தந்தை பக்கம் தவழ்ந்துவந்த அவனது செல்லக் குழந்தை பாலகிருஷ்ணன் தலைமேல் அந்த புத்தகம் விழவே, குழந்தை வீறிட்டு அழத் தொடங்கிற்று. தக்ஷணம் குழந்தையின் தாயார் ஓடிவந்து சமாதானம் செய்துகொண்டிருந்த ரங்கனாதனிடமிருந்து குழந்தையை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு "ஆபீஸிற்கு நாழிகையாய் விட்டதென்று குழந்தைமேல் ஏன் இவ்விதம் சீறுகிறேள்?" என்று சிடுசிடுத்துக்கொண்டு குழந்தையை சமாதானம் செய்ய வாசல்புறம் சென்றாள். ரங்கனாதன் அவள் பின்னால் சென்று விஷயத்தை விவரித்துக் கூறியும் அவனது மனைவியின் கோபம் தணியவில்லை. அப்புறம் அவன் அவசர அவசரமாக சமயலறைக்குச் சென்று ஓர் இலையில் கொஞ்சம் ஊறுகாயும் சாதமும் பரிமாறிக்கொண்டு கொஞ்சம் மோர்விட்டு பிசைந்து இரண்டுவாய் சாப்பிட்டெழுந்து கை யலம்பிக்கொண்டு சட்டை மாட்ட தனதறைக்குச் சென்றான். அப்பொழுதுதான் கனகம்மாள் வாசலிலிருந்து உள்ளே வந்தவள் "என்னா சாப்பிடுவதில்லையா? அதற்குள் சட்டை போட்டுக்கொள்ள புறப்பட்டேட்டேளே?" என்றாள்.

ரங்கனாதன் வெறுப்புடன் "சாப்பாடு கீப்பாடெல்லாம் ஆச்சு" என்றான்.

கனகம் இடுப்பிலிருந்த குழந்தையை பாயில் விளையாட விட்டுவிட்டு, ஓடிப்போய் அந்த படத்தை ஓர் காகிதத்தில் சுற்றிக்கொண்டு வந்து ரங்கனாதனின் கையில் கொடுத்து, "இதை கடையில் கண்ணாடி போடக்கொடுத்து விட்டு போங்கள். மெள்ள மறந்துவிட்டு போகலாமென்று பார்த்தேளாக்கும்" என்று நகைத்துக் கொண்டு கூறினாள்.

ரங்கனாதன் "கனகம், இந்தக் காரியத்தை நாளைக்குச் செய்து கொடுக்கிறேனம்மா! பாரு, இன்றைக்கு ஆபீஸிற்கு எவ்வளவு நாழிகையாய்விட்டது" என்று எவ்வளவு கூறியும் கனகத்தின் பிடிவாதம் போகவில்லை.



சங்கீத பயிற்சி



உழைப்பின் சிகரம்.



அந்தப் படத்தையும் எடுத்துக்கொண்டு சைகிளில் போவது அசாத்தியமாக விருந்ததினால், ட்ராம் நிற்குமிடத்திற்கு செல்லலானான். வழியில் அவனுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. என்னவென்றால் ட்ராம் ஸ்டேண்டிற்கு போகும் வழியிலிருக்கும் தனது நண்பன் சுப்புவின் வீட்டில் படத்தை வைத்துவிட்டு ஆபீஸிற்கு சென்று விடுவது. ஆபீஸ் முடிந்ததும் நேராக சுப்புவின் வீட்டிற்குச் சென்று படத்தை கடைவீதிக்கு எடுத்து செல்வது; என்று யோஜித்துக்கொண்டே நடந்துவர, வழியிலிருந்த சுப்புவின் வீட்டையும் கடந்து வந்து விட்டான். அடடா! திரும்பவும் அவன் வீட்டை நோக்கி புறப்பட்டான். சுப்புரத்தினம் வழியில் அகப்பட்டான். அவனிடம் சங்கதியை தெரிவிக்கவே அவனும் "படத்தை வீட்டில் வைத்துவாயேன். அதற்கென்னப்ரமாதம்" என்று சைகிளை முன்னே ஓட்டலானான்.

அவன் சைகிள்பின் கட்டியிருந்த காகித கட்டை கண்டதும் ரங்கனாதனுக்கும் தான் தன் காகிதக் கட்டை தன் மனைவியின் படத்தின் கலாட்டாவில் வீட்டிலேயே விட்டு விட்டு மறந்து வந்தது ஞாபகமாயிற்று "நல்ல காலம் பிழைத்தேன். ஆபீஸிற்கு நாழிகையானால் பைனுடன் (fine) போகிறது. கட்டை மறந்து விட்டு போயிருந்தால் வேலைக்கு கல் விழுந்திருக்குமே" என்று நினைத்த வண்ணம் படத்தை சுப்புவின் வீட்டில் வைத்துவிட்டு மறுபடியும் வீட்டை நோக்கி விசையாக நடந்தான், பாவம்! முதல் நாள் தான் அவனது மேலதிகாரி வீட்டில் வேலை செய்து கொண்டு வரும்படி பெரிய காகித கட்டொன்றை அவனிடம் கொடுத்திருந்தார். ரங்கனாதன் முதல் நாள் இரவு ஒரு மணிவரையிலும் வேலையை செய்து முடித்து வைத்திருந்தான் பாவம். ஆபீஸிற்கு புறப்படும் சமயத்தில், அவன் மனைவி கொடுத்த படத்தின் கலாடாவின் நடுவில் காகிதக் கட்டை கொண்டுவர மறந்தே விட்டான். சுப்பு வழியில் சிக்கினது நல்ல காலமாகபோய்விட்டது. இல்லாவிடில் காகித கட்டில்லாமலே ஆபீஸிற்குபோய் மேலதிகாரியிடம் நல்ல ஆசீர்வாதம் பெற்றிருப்பான் ரங்கனாதன்.

வீட்டிற்கு வந்தவன் 'கனகம், கனகம்' என்று கூவிய வண்ணம் கதவை தடதடவென்று தட்டினான். "குழந்தையை தூங்கச் செய்து கொண்டிருக்கிறேன். யாரது இவ்வளவு கலாடா செய்யரது?" என்று கூவியவாறு கனகம் கதவை திறந்தாள். வாசற்படியில் தன் கணவனைக் கண்டவுடன் "என்ன என்ன? ஏன் வந்தாட்டேள்? தலைவலியா? படத்தை கண்ணாடிபோட குடுத்தாட்டேளா?" என்று பலவித கேள்விகள் கேட்கவே, ரங்கனாதன் மௌனத்துடன் காகிதக்கட்டுகளை (Files) எடுத்துக்கொண்டு சைகிளில் ஆபீஸிற்குப் புறப்பட்டான். அப்பொழுது அவன் கைகடியாரத்தின் முள் சரியாக 11-30 மணி காண்பித்தது. அப்புரம் ஆபீஸில் அவனது நிலை என்ன வாயிற்றோ நமக்கு தெரியாது.

சாயங்காலம் ஆபீஸிலிருந்து வீட்டிற்கு திரும்பி வரும்பொழுது சுப்புவின் வீடு வரைக்கும் ரங்கநாதனுக்கு அந்த படத்தின் ஞாபகமே வரவில்லை. சுப்புவின் வீட்டைக் கண்டவுடனே ஞாபகம் வந்தது; "நல்லவேளை! படமில்லாமல் வீடு சென்றிருந்தாலோ"? என்றெண்ணினவனாய் சைகிளிலிருந்து கீழே இறங்கி சுப்புவின் வீட்டையடைந்தான். வீடு பூட்டி இருந்தது. ஆள் வீதியில் உட்கார்ந்திருந்தான். அவனை விசாரித்ததில் சுப்பு தன் சம்சாரத்துடன் இப்பொழுதுதான் டௌனிற்கு சென்றதாகவும், அவன் வருவதற்கு ஆறு மணியாகுமென்றும் ஆள் கூறினான். படத்தையாவது ஆளிடம் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கப்படாதா? அதுவும் செய்யவில்லை சுப்பு. ஆறு மணிக்குள் கடற்கறையிலாகிலும் சுற்றிவிட்டுத் திரும்பலாமென்று கடற்கரைக்கு சென்றான்.

ஆனால் அன்றையதினம் அவனுக்கு கடற்கரையின் காற்றுக்கூட சுகப்படவில்லை. ஆறு மணிக்கு சரியாக ரங்கநாதன் சுப்புவின் வீட்டை யடைந்தான். அப்பொழுதுதான் சுப்பு எரிவந்த ஜட்காவண்டியும் வீட்டின் வாயிலில் வந்து நின்றது. முதலில் அகத்துக்காரி இரங்கிசெல்ல, அப்புறம் சுப்பு ஓரொரு குழந்தையாக தன் நான்கு குழந்தைகளையும் வண்டியிலிருந்து இறக்கி விட்டுவிட்டு, இரண்டு படங்கள், இரண்டு மூன்று காகிதப் பொட்டலங்கள், இரண்டு மூன்று அட்டை, இன்னும் சில சாமான்களையும் வண்டியிலிருந்து எடுத்து ஆளினிடம் கொடுத்தான். அந்த இரண்டு படங்களில் ஒன்று க்ராஸ்டிச் செய்த சிங்கப்படம், ஒன்று ரங்கநாதன் காலையில் சுப்புவின் வீட்டில் வைத்துச் சென்ற படமுமாக இருந்தன. ரங்கநாதன் "என்னடா என் படத்தையும் டௌனுக்கு கொண்டுபோயிருந்தாயா?" என்று வினவினான்!

சுப்பு" ஆமாம்டாப்பா. உன் மனைவி என் மனைவியைவிட நல்லவள்போலிருக்கு. உன் மனைவியாவது படத்தை பார்த்து வர்ணநூல்களும், அட்டையும் வாங்கிவந்தால் போதும் என்று சொல்லி அனுப்பி இருக்கிறாள். ஆனால் எங்காத்துவள் படமன்றி தன்னையே கடைக்கு அழைத்து செல்லவேண்டுமென்றும், எனக்கு நூல் செலக்ட் செய்ய வராதென்றும் தொந்திரவு செய்தாள். ஆகையால் ஆபீஸிலிருந்து சற்று முன்பாகவே புறப்பட்டுவந்து அவளையும் அழைத்துக்கொண்டு டௌனிற்கு சென்றிருந்தேன். நீ வேறு டௌனிற்குபோய் என் அலையவேண்டுமென்று அப்படியே உன் காரியத்தையும் முடித்துக்கொண்டு வந்தேன். "தைய்யல் வேலை, தையல் வேலை" என்று இந்த பெண்டுகள் நம்ப பிராணத்தை பிழிந்து விடுகிறார்களப்பா, யாராலாகிறது," என்று சொல்லிக்கொண்டே கண்ணாடிபோட்ட ரங்கநாதனின் படம், வர்ணநூல்கள் அடங்கிய காகித பொட்டலமொன்று ரந்திரம்செய்த அட்டை ஒன்று எல்லாவற்றையும் ரங்கநாதனிடம் கொடுத்தான். ரங்கநாதன் தன் நண்பன் செய்த உபகாரத்திற்காக அத்யானந்தத்துடன் அவனுக்கு ஆயிரம் வந்தனங்கள் அளித்துவிட்டு, அவனுக்கு கொடுக்கவேண்டிய பணத்தையும் கொடுத்துவிட்டு, சாமான்களுடன் சைகிளையும் தள்ளிக்கொண்டே வீடுவந்து சேர்ந்தான்.

கனகம் அவனை எதிர்பார்த்த வண்ணம் வாசல் கதவண்டையே நின்றிருந்தாள். ரங்கநாதன் கொணர்ந்த சாமான்களனைத்தையும் மேஜைமேல் வைத்துவிட்டு "உஸ் அப்பா," வென்று சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டான். கனகம் மேஜைமேலிருந்த சாமான்களை ஆவலுடன் பரீக்ஷிக்கத்துவங்கினாள். "தூ, கருந்தநீலம் வாங்கி வந்திருக்கிறேளே! படத்தில் பாருங்கள், ஆகாய வர்ண நூலல்லவோ இருக்கிறது. மஞ்சள் வர்ண நூலிற்கு பதில், ஆரஞ்சுவர்ண நூல் வாங்கி விட்டேள். அட்டையின் ஓட்டைகள் ரொம்ப தூர தூர இருக்கின்றனவே. ஓட்டைகள் நெருக்கமாக விருப்பதாகப் பார்த்து வாங்கியிருந்தால் நன்றாக விருந்திருக்கும்." என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க, ரங்கநாதன் மனதினுள் "இவளை பார்க்க சுப்புவின் மனைவியே மேல் என்று தோன்றுகிறது. இவளையும் கடைக்கே அழைத்துச் சென்றிருந்தால் இவளுடைய இந்த கோளாறுகள் தப்பி இருந்திருக்கும்" என்று யோஜித்துக்கொண்டிருந்தான். அதற்குள் கனகத்தின் இடுப்பிலிருந்த பாலகிருஷ்ணன் மேஜைமேல் தாவி, இங்கி பாட்டிலை உருட்டிவிட்டு மேஜைமேலிருந்த சாமான்களை எல்லாம் இங்கியால் அபிஷேகம் செய்து விட்டான்! மறுநாள் ரங்கநாதன் மனைவியைக் கடைக்கு அழைத்துச் சென்று மறுபடியும் புதிய சாமான்களை வாங்கி கொடுத்தான். அன்றிலிருந்து அவனுக்கு "க்ராஸ் ஸ்டிச்" படத்தைக் கண்டால் விஷத்திற்கு சமானம்!



# மனமற்ற விவாகம்

ஸ்ரீமதி கோமளம்

நன்றாய் பேசத்தெரியாமல் உலக விஷயம் தெரியாத குழந்தைக்கு 5, 6 வயதுக்கே கல்யாணம் செய்து விடுகிறார்கள். பின்னால் படப்போகும் கஷ்டம் அக்குழந்தைக்குத் தெரியாது. புது ஆடையாபரணங்களைக் கண்டதும் சந்தோஷமாய்த்தான் இருக்கும். அது பிற்பாடுதான் கஷ்டத்தை உண்டாக்கும். அதுவும் சிறுகுழந்தையிலேயே மாங்கல்ய பலன் இல்லாமல் போய் விடுகிறது. மறு விவாகம் செய்வதற்கும் நமது ஹிந்து சமூகம் குறுக்கே நிற்கிறது. இல்லாவிட்டால் பெண்வயது வந்து புருஷன் வீட்டில் போய்ப்படும் கஷ்டங்களையோ சொல்லமுடியாது. பெண்கள் மனது போல் புருஷன் நடப்பது கிடையாது. சிலர் . கோபிஷ்டராயும் மூர்க்கராயும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தாயார் சகோதரிகள் பேச்சைக் கேட்டுக் கொண்டு மனைவியை பலவித கஷ்டங்களுக்கும் உள்ளாக்குகிறார்கள். மனைவியென்பதை மனதிலும் கருதாமல் தாசிவீடே கதி என்று ஒரு சிலர் இருக்கிறார்கள். மனைவியென்றால் தனக்கு அடிமையென்றும் உழவு மாட்டுக்குச்சமம் என்றும் சில ஆடவர்கள் நினைப்பார்கள். அது தவறு. அவர்களே நமக்கு தெய்வம்.

பெண்களின் தாய் தந்தையர்கள் 10 வயதிற்குள்ளாகவே எல்லாவித சடங்குகளையும் முடித்து நமக்கு ஒரு மூட்டை கழிந்தது என்று நினைத்து புருஷன் வீட்டிற்கு தள்ளி விடுகிறார்கள். புருஷன் ஒரு முட்டாளாக யிருந்தால் மனைவியை பலவித கஷ்டங்களுக்கும் உள்ளாக்குவான். தாயார் வீட்டில் போய் கொஞ்சகாலம் சுகமாய் இருப்போமென்றாலோ, "சேலையில்லை யென்று சின்னாயிவீட்டிற்குப் போனாளாம். அவள் ஈச்சம் பாயைக்கட்டிக்கொண்டு எதிரேவந்தாளாம்" என்றபடி அங்குபோனாலோ, அண்ணன் மனைவி, பாட்டி, அத்தை எல்லோருமாய், "ஏதடி காலம், புருஷனிடம் வாழாமல் வாழாவட்டியாக, வாழாமல் ஓடிவந்து விட்டாள்" என்று சொல்லுவார்கள். அந்தப் பெண்ணின் புருஷன்கீழ் இவர்களாகஷ்டப்படப் போகிறார்கள். அதுவும் தைரியமில்லாத பெண்கள் கஷ்டத்திற்கு பயந்து கொண்டு குளம், குட்டையில் வீழ்ந்து உயிரை விடுகிறார்கள். அப்படி இறந்தவர்களின் மனமும் சாந்தி அடையாது. இருப்பவர்களுக்கும் கஷ்டம்.

ஆகையால் இப்படி யெல்லாம் நமது ஹிந்துசமூகத்தில் நடக்காமல் இருப்பதற்கு நாம் எல்லோரும் பிரயாசைப்படவேணும். பால்யவிவாகத்தைத்தடுத்து 4, 5, வயதுக்கே பெண்களை பள்ளியில் சேர்த்து நன்றாய் கல்விபயன்ற பிறகு 18, 20, வயதுக்குமேல் பெண்கள் இஷ்டப்படியும் தாய்தந்தையர் இஷ்டப்படியும் பெண் மனதிற்கிசைந்த மணாளனை மணந்தால் உத்தமம். பெண்மனதிற்கு இஷ்டம் இல்லாமல் மணம் செய்து விட்டால் ஆயுள் பூராவும் பெண்களுக்கும் கஷ்டம். தாய்தந்தையர்க்கும் கஷ்டம். கிணற்று நீரைவெள்ளம் கொண்டு போய் விடாது. விவாஹம் கத்திரிக்காய், வாழைக்காய்

வியாபாரமல்ல. மாற்றமுடியாது. ஆகையால் பெண்கள் இஷ்டப்படி செய்வதே மேல். பெண்களுக்கு மனமில்லாதிருக்கும் போது மணம் செய்தால் தம்பதிகள் ஒத்து வாழமுடியாது. சம்சாரியாகவும் குடித்தனம் முன்னுக்கும் வராது. மனம் ஒத்த வாழ்வேவாழ்வு என்றபடி மனதிற்கிசைந்த மணவாளனை மணப்பதற்கு கடவுள் அருள் புரிவாராக.

பழையகால மூடக்கொள்கை படிக்க வைத்தால் பெண்கள் கெட்டுப்போய் விடும் என்ற எண்ணம் இன்னும் சில இடங்களில் இருந்து வருகிறது; அது தவறு. கெட்டுப்போகிறவர்களை பெட்டியில் வைத்து பூட்டினாலும் கெட்டுப் போய் விடுவார்கள் என்றும் மனம் காவலே தவிர மதில் காவல் அல்லவென்றும் சொல்லலாம். பெண்களைபடிக்க வைக்க சக்தியில்லாதவர்களுக்கு பணம் இல்லையே என்ற எண்ணம் உண்டாகலாம். வாஸ்தவம்தான். ஆனால் கல்யாணமென்றாலோ எங்கிருந்தாவது பணம் கிளம்பிவிடும். வீடுவாசல்களை அடமானம் வைத்தும் நிலபுலன்களை விற்றும் கடனைவாங்கியும் கல்யாணத்தில் விரயம் செய்வது உலகத்தில் ஜாஸ்தியே. அதுவும் நம் இந்தியாவில் மிகவும் ஜாஸ்தியே. ஏழைக்கல்யாணத்திற்கே 1000 ரூபாய் ஆகும். வரதக்ஷிணை என்றும், ஆடையாபரணமென்றும், பாத்திரம் பண்டங்களென்றும் கச்சேரிகளென்றும் இன்னும் பலவிதத்திலும் பணவிரயம் செய்வது நம்மவர்க்கே ஜாஸ்தியாய் விட்டது. விதவிதமாய் சாப்பாட்டு வகையறாக்கள் செய்து பாதி உண்பதும் பாதி தெருவில் வீசப்படுவதுமாய்போய் விட்டது. எத்தனை செய்தும் மாப்பிள்ளை வீட்டார்க்கு திருப்தி கிடையாது. புருஷன் மனைவியை, "உன் அப்பனிடமிருந்து 1000, 2000. ரூ. வாங்கிக்கொண்டுவா, இல்லாவிட்டால் உன் முகத்தில் முழிக்கமாட்டேன். உன் அப்பன் வீட்டுக்குப் போய் விடு" என்று விரட்டுவான். அந்த அபலைப்பெண்கள் அழுதகண்ணும் சிந்தியமூக்குமாய் தகப்பனிடம் முறையிடுவார்கள். தகப்பன் தன் மனைவிதாலியை விற்றாவது மாப்பிள்ளைக்கு அழுகிறது.

இந்த அட்டூழியமெல்லாம் நடக்காமல் முன்யோசனையோடு, இந்த பணத்தையெல்லாம் விரயம் செய்யாமல் பெண்களுக்கு நல்ல கல்வி கொடுத்தால் ரொம்பவும் நல்லது. பிற்பாடு பெண்கள் புத்திசாலித்தனமாகவும் கற்பிற்சிறந்த கன்னிகளாகவும் லக்ஷ்மீகடாக்ஷத்தோடும் விளங்குவார்கள். பெண்களுக்கு கல்வி பயில்விக்காமல் இருப்போமென்றாலோ பெண்களுக்குக் கஷ்டம். தாய்தந்தையர்க்கும் கஷ்டம். பெண்கள் மனம் சம்மதியாமல் இருக்கும் போது மணம் செய்து விட்டு பிறகு அவர்கள் அன்னிய புருஷரை நாடுவது இழிவேதவிர, கல்யாணத்தின் போதே அவர்கள் இஷ்டப்பட்ட புருஷனுக்கு மணம் செய்து கொடுப்பதே மேல். வின்ஸர் கோமகன் ஒரு பெண்ணுக்காகப் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தையே துறந்தார் என்பதை நாம் எல்லோரும் கவனிக்கத்தக்கது. ஆகையால் பெண் என்றால் தெருவில் கிடைக்கிற வஸ்து வல்ல. பெண் என்றால் கண்ணிற்கும், பொன்னிற்கும் ஒப்பிடலாம். நமது தாய் லக்ஷ்மி சரஸ்வதிபோலும் நாம் சுயராஜ்யத்தோடும் வாழ்வோமாக. ஆகையால் பெண்





களை ஹிம்ஸித்து இழிவாகப் பேசக்கூடாது. கிரகலக்ஷ்மி என்ற பெயர் பெண்களுக்குதான் தகும்.

ப்ரம்மா உலகத்தில் முதலில் காமதேனு என்ற தேவதையை உண்டாக்கி அதிலிருந்து உலகம் பரவியது என்பது தெரிந்த விஷயமே. ஆகையால் உலகத்தில் எந்த விஷயத்திற்கும் பெண்கள் தான் தேவை என்று விளங்குகிறது. பெண்களை ஆடவர்கள் எவ்வளவு கொண்டாடுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு மேன்மை அடைவார்கள். அப்படிப்பட்ட பெண்களை லக்ஷ்மீபோல் மதித்து கௌரவப்படுத்தும்படியாக மிகவும் வணக்கமாய் கேட்டுக்கொள்கிறேன். ஆகையால் ஹிந்து சமூகத்தில் இந்த் அட்டூழியமெல்லாம் நடக்காமலும், தற்கொலை, விபசாரம், பால்யவிதவை, வாழாமல் இருப்பது முதலியவைகளை தடுப்பதற்கு கூடுமானவரையில் ஸகோதர ஸகோதரிகள் பிரயாசைப்படவேணும். தம்பதிகள் மனம் ஒத்து வாழ்ந்தாலே சகலஐஸ்வர்யமும் உண்டாகும். மனமொத்த தம்பதிகளே மகிழ்ச்சியுடன் வாழ்வீராக! மனம் அற்ற வாழ்வே துன்பவாழ்வு. மனம் ஒத்த வாழ்வே இன்பவாழ்வு.

## அழகுத் தெய்வம்.

கார்ப்புயலை வெட்டுகின்ற கம்பிமின்னல் போலே
கவலையிரு ளோட்டியென்னைக் கண்பார்த்து நின்றாள்!
யாரென்றே யதிசயித்தேன்! அழகுமணித் தெய்வம்!
அன்னைசக்தி வாழ்கவென்றே பொன்னடியிற் பணிந்தேன்!

அன்புசொல்லித் தழுவியெனக் கானந்தந் தந்தாள்!
ஆர்வமுள்ள குழந்தையென மார்பகத்தில் உண்டேன்!
என்புருக நைந்துருகி என்மகனே யென்றார்
இன்பநகை புரிந்ததுவும் எங்கெங்கும் இருந்தாள்!

காலைமலர்த் திருமுகத்தில் கருணையமு தீந்தாள்.
கத்துகுயி லோசையிலே பத்தியங்கள் படித்தாள்!
சோலைமலர்ப் பொலிவினிலே சொக்குநகை புரிந்தாள்!
சுரும்புகளின் பாட்டினிலே சுருதியெனக் கீந்தாள்.

# பெண்களுக்குத் தேகப் பயிற்சி

ஸ்ரீமதி சந்திராதேவி

பெண்களின் தேகப் பயிற்சிக்குரிய நான்கு அப்பியாசங்கள் கீழே குறிப்பிட்டிருக்கின்றன. வயதில் யௌவன மாதர்களாக இல்லாவிட்டாலும், மனதில் யௌவன உணர்ச்சிகளையுடைய பெண்கள் தங்கள் தேகத்தை அழகாக வைத்துக் கொள்ள விரும்பினால் இந்த அப்பியாசங்களைச் செய்யலாம்.

1. மிகவும் பலமான தேகாப்பியாசம் நெடுங்காலமாக விட்டுப் போனதால் உரத்துப்போன தசைகளைத் தளரச் செய்வதற்கு இந்த அப்பியாசம் நல்லது. கால்களை ஒன்றோடொன்று சேர்த்து வைத்துக்கொண்டு இடுப்பில் கையை வைத்து நிற்கவும். முழங்கால்களை முன்புறமாக வளைத்து இரு கைகளையும் தரையைத் தொடுவதுபோல கீழே நீட்டவும். பிறகு நிமிர்ந்து நிற்கவும். பிறகு முழங்கால்களை முன்புறமாக வளைத்து இரு கைகளையும் தரையைத் தொடுவது போல கீழே நீட்டவும். பிறகு நிமிர்ந்து நிற்கவும். மறுபடியும் முழங்கால்களை முன்னைவிட அதிகமாக வளைத்துக் கைகளைத் தரைக்கு இன்னும் கிட்டமாகக் கொண்டுவரவும். மறுபடியும் நின்று மேலே கூறியபடி கால்களை வளைத்துக் கைகளை வளைத்துக் கைகளைக் கீழே இறக்கவும். கைவிரல் நுனிகள் தரையைத் தொடும் வரையில் இந்த அப்பியாசத்தைச் செய்யவும்.

2. கால் பாதங்களைச் சற்று விரித்து நிற்கவும். இரு தோள்களையும் பின்புறமாக வளைத்துக்கொண்டு அசையாமல் நிமிர்ந்து நிற்கவும். ஒன்று என்று சொல்லிக்கொண்டு இரு கைகளையும் இடுப்பில் வைக்கவும். இரண்டு என்று சொன்னதும் முழங்கால்களை வளைக்காமல் நேராக வைத்துக்கொண்டு முன்பக்கமாகக் குனியவும். குனியும்போது கைகளைக் கீழே இறக்கி விரல் நுனிகளை விரிந்த கால்களுக்கு இடையே கொண்டுபோய் குதிங்கால்களைத் தொட முயற்சிசெய்யவும். மூன்று என்று சொன்னதும் நிமிர்ந்து நிற்கவும். நான்கு என்று சொல்லிக் கொண்டு கைகளை இடுப்பில் வைக்கவும். அடுத்தமுறை வளையும்பொழுது விரல் நுனிகளால் குதிகாலின் வெளிப்பாகங்களைத் தொடவும். இதை ஆறு தடவை செய்ததும் இளைப்பாறுக.

3. கால்களில் கவசமின்றி இடது கையால் ஒரு நாற்காலியின் பின்பாகத்தைப் பிடித்துக்கொண்டு நிமிர்ந்து நிற்கவும். வலது காலின் விரல்களை நீட்டி அக்காலை இடது காலுக்குச் சற்று முன்பாக நீட்டவும். அதேமாதிரி அக்காலைப் பின்புறமாகவும் நீட்டவும். பிறகு முன் பக்கமாக முன்னைவிட அதிகமாக நீட்டவும். அதுபோல பின் பக்கமாகவும் கொண்டு செல்லவும். இதைத் திரும்பத் திரும்பச் செய்க. ஒவ்வொரு முறையும் முன்னைவிட அதிகமாக நீட்டவும். ஆனால் மற்றக் காலை வளைக்கக்கூடாது. பிறகு வலதுகையால் நாற்காலியின் பின்பாகத்தைப் பிடித்துக்கொண்டு இடது காலால் மேற்கூறியமாதிரி செய்யவும்.

4. தரையில் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொள்க. இரு கைகளையும் மடக்கி கழுத்தின் பிணிக்கு ஆதாரமாக வைத்துக் கொள்ளவும். வலதுகாலை முன்புறமாக காட்டிக்கொண்டு இடது காலை வளைத்து உள்ளங்கால் தரையில் நன்றாகப் பதிந்து இருக்கும்படி வைத்துக்கொள்க. பிறகு வலது காலை வளைக்காமல் கூடிய அளவுக்கு மேலே உயர்த்தவும். இடது காலைத் தரையில் உறுதியாக வைத்துக்கொள்ளவும். இப்படி ஆறுமுறை செய்தபின், வலதுகாலை மடக்கி வைத்துக்கொண்டு இடதுகாலை உயர்த்தவும். இதையும் ஆறு தடவை செய்க.

# கும்பகோணம்

ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள்

காசியைவிட நூறு மடங்கு அதிகமான பலனைத் தருகிற கும்பகோணத்தின் மகாத்மியச் சுருக்கம்:—காசி க்ஷேத்திரத்திற்கு, சுற்றிலும் பஞ்சக்ரோச க்ஷேத்திரங்கள் இருப்பதுபோல் கும்பகோணத்தைச் சுற்றி, பஞ்சக்ரோச க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. யாத்ரீர்கள் அந்த பஞ்சக்ரோச க்ஷேத்ரங்களை யாத்திரை செய்யவேண்டுமென்று வாதிக்கப் பட்டிருக்கிறது. இதர க்ஷேத்ரங்களில் செய்த பாபம் புண்ய க்ஷேத்ரங்களுக்குச் சென்றால் அங்கு தொலைகிறதென்றும், புண்ய க்ஷேத்திரங்களில் செய்த பாபம் காசியில் தொலைகிறதென்றும், காசியில் செய்த பாபம் கும்பகோணத்தில் தொலைகிறதென்றும், கும்பகோணத்தில் செய்த பாபம், கும்பகோணத்திலேயே தொலைகிறதென்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. "அன்யக்ஷேத்ரே கிருதம் பாபம் புண்யக்ஷேத்ரே விநச்யதி; புண்யக்ஷேத்ரே கிருதம் பாபம் வாரணஸ்யாம் விநச்யதி; வாரணஸ்யாம் கிருதம் பாபம் கும்பகோணே விநச்யதி! கும்பகோணே கிருதம் பாபம் கும்பகோணே விநச்யதி," என்பது பிரஸித்தமான பிரமாணம்.

இந்த க்ஷேத்திரத்திலுள்ள மகாமக ஸரோவரம் என்னும் கன்யா தீர்த்தத்தின் சுற்றிலும் நவக்யா தீர்த்தம், இந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம், யமதீர்த்தம், நிர்ருதி தீர்த்தம், வருணை தீர்த்தம், வாயு தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், குபேர தீர்த்தம், ஈசான தீர்த்தம் முதலான மகா தீர்த்தங்களிருப்பதுடன், மத்தியில் 66 கோடி தீர்த்தம் இருப்பதாய் சொல்லப்படுகிறது. கங்கை, யமுனை, நர்மதை, ஸரஸ்வதி, கோதாவரி, காவேரி, கன்யாபயோஷ்ணீ, ஸரயூ, இந்த 9 மகாநதிகள் தங்களிடம் பாபிகள் ஸ்நானம் செய்து விட்டுப் போயிருந்ததற்காக, இங்குள்ள கன்யா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பாபங்களைப் போக்கிக் கொள்ளுகின்றன. இவர்களின் கோயில்களிருக்கின்றன. பன்னிரெண்டு வருஷத்திற்கொரு முறை இங்கு மகாமகமென்று கொண்டாடப்படுகிறது. அச்சமயம் இந்த நதிகள் பிரத்யக்ஷமாய் இங்கு வருவதாயும், சதுர்முகன் இங்குள்ள எல்லா விஷ்ணு மூர்த்திகளுக்கும், சிவ மூர்த்திகளுக்கும், உற்சவம் நடத்துவதாயும் புராணங்கள் அறிவிக்கின்றன. குரு ஸிம்ஹ ராசியில் இருக்கும்போது, சூரியன் கும்ப ராசியில் வரும் கும்பமாஸத்தில், பௌர்ணிமை, மகா நக்ஷத்திரத்தில், விருஷப லக்னத்தில் கங்காநதிகள் இங்கு வருகின்றன. அச்சமயம் மகா மகஸ்நானம் மகா பலனைத் தரக்கூடியது.

சதுர்முகனின் ஒருநாள் முடிந்துப்ரளய மேற்படுமுன், சதுர்முகன் நாராயணரிடம் சென்று தன்னிடம் தந்திருந்த சிருஷ்டி பீஜத்தை அந்த ப்ராயத்தில் எப்படி சம்ரக்ஷிப்பதென்று தேவர்களுடன் பிரார்த்திக்க, பகவான் அமிருதத்தை தெளித்து, மண்ணால் ஓர் கும்பத்தைச் செய்து, அதன் நடுவில் சிருஷ்டி பீஜத்தை வைத்து, சகல வேதங்கள், சாஸ்திரங்கள், இதிஹாஸங்

கள், புராணங்கள், ஸ்மிருதிகள் முதலிய வைகளையும், அமிருதத்தையும் அதில் நிரப்பி, அந்த கும்பத்தை மூடி, அதன் மீது தர்பகூர்சம் வைத்து, ஸூதாகல வஸ்திரம், பிரம்ம ஸூத்ரம், முதலியவைகளால் அதை அலங்கரித்து மேருபர்வதத்தின் சிகரத்தின் மீதுள்ள சதுர்முகன் வீட்டு அங்கணத்தில், தர்பமயமான சிம்மாட்டின் மீது வைத்துவிடும்படி ஆக்ஞாபித்தார். சதுர்முகன் அவ்வாறே செய்ய பிரளயோதகம் உலகத்தை வியாபிக்க, அந்த உதகத்தில் அந்த அமிருதகடம் மேரு பர்வதத்திலிருந்து மிதந்துகொண்டு வந்து கும்பகோணத்திற்குப் பக்கத்தில் உள்ள ஸாக்ஷிபுரம் என்னும் (திருப்பிரம்பியம்) சமீபத்தில் மிதந்து வரும்பொழுது அதன் மீதுள்ள கூர்சம் விழுந்து போனதாயும், அந்த உதகத்தில் பிராதுர்பவித்த சப்த கன்னிகைகள் அந்த அமிருத கடகத்தை சம்ரக்ஷித்து வந்ததாயும், பிறகு அந்த கும்பம் முன்னே மிதந்து போகும்பொழுது கிராத ரூபியாய் பரமசிவன் பல வேடர்களுடன் வந்து அந்த கும்பத்தை அநேக பாணங்களைப் போட்டு சேதிக்கப் பார்த்தும் அதை சேதிக்க முடியாமல் போக மகா வீரியங்கொண்டு திவ்யமான ஓர் பாணத்தால் சேதித்தாரென்றும், அந்த கும்பத்தின் கோணப்ரதேசம் உடைந்து உள்ளிருந்த அம்ருதம் பஞ்சக்ரோச தூரம் பெருகியதென்றும், பிறகு அந்த கிராத ரூபி பகவான் மணலையும் மண்ணையும் சேர்த்து ஓர் அழகான லிங்கம் செய்து அதை பூஜித்து வந்து அதில் தானே பிரவேசித்தார் என்றும், அவர்தான் ஆதி கும்பேசுவரர் எனப் பெயர் கொண்டவராய் கும்பகோணமென்ற இந்த க்ஷேத்திரத்திற்கு பெயரளிக்க காரணமானார் என்றும் சொல்லப்படுகிறது. இங்கு மகா மகஸ்நானம் வெகு விசேஷம். மகாமக ஸ்நானத்துக்காக வெளியூர்களில் இருந்து கணக்கற்ற ஜனங்கள் கூடுவார்கள்.

**மகாமகஸ்நானம்:**—குரு சிம்ஹ ராசியில் இருக்கும்பொழுது, சூரியன் கும்பத்திற்கு வந்த சமயம் பௌர்ணமி மகா நக்ஷத்திரங் கூடிய சுபதினத்தில் மகாமகமாகும். இம்மகாமகத்திற்கு ஒரு வருஷத்திற்கு முந்தியே காசி முதலான ஸமஸ்த க்ஷேத்திரங்களில் உள்ள தீர்த்த தேவதைகள் எல்லாம் இங்கு மகாமக நீராடும் பொருட்டு வந்து விடுவதால் அவ்வருடத்தில் எந்த தீர்த்த யாத்திரையும் நிஷ்பலமென்று புராணம் கூறுகிறது. மகாமகஸ்நானம் செய்யப்படும் இந்த சமயம் கன்யா தீர்த்தம் என்றும், மகாதீர்த்தமென்றும் பாபாபநோதன தீர்த்தம் என்றும், ஸூதாதீர்த்தம் என்றும், பஹூதீர்த்தம் என்றும் பலவாறு புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் அஷ்டதிக்கு பாலர்களும், கங்காநதி ஒன்பது புண்ய நதிகளும், சதுர்முகனும் தங்கள், தங்கள் பெயரில் தனித்தனி தீர்த்தங்களை நிர்மாணம் செய்திருக்கின்றனர். இதைத்தவிர நடுவில் திரிபுவனங்களிலுள்ள 66 கோடி தீர்த்தங்கள் இருக்கின்றனவாம். கங்கையில் நூறு வருஷம் திரிகாலம் (மூன்று வேளை), ஸ்நானம் செய்தபலன் மகாமக ஸ்நானத்தால் கிடைக்கிறது. 101 குலத்தார்களும் சத்கதி அடைகின்றனர். மகாமக தினத்தன்று கங்காதி மகாநதிகள் பொங்கி வருவதை பலர் இன்றைக்கும் காண்கின்றனர். பால்கிக தேசத்து ராஜனான ஹேமபாஹூ என்பவன் அவனுடைய பாரியாளான சுலோசனைக்குப் பிடித்திருந்த வேதாளபாதை நீங்க அவளுடன் கங்கையில் ஸங்கல்ப பூர்வமாய் ஸ்நானம் செய்ய மூழ்கியவுடன் பூமிக்குள்ளே யிருந்த கங்கை மகாமக ஸரோவரத்திற்கு அன்று வந்த வேகத்தில் இவ்விருவர்களும், பிரவாகத்தில் இழுக்கப்பட்டுப் போய் மகாமக ஸரோவரத்திற்குள் வந்து அதனின்றும் அவர்கள் வெளிக் கிளம்பினார்கள். இதைக் கண்டு கும்பகோணத்திலுள்ளோர் பரம ஆச்சர்ய மடைந்தார்கள். காசியிலுள்ளோர் அவ்விருவர்களும் மூழ்கி இறந்து போனார்களென்று மிக்க வருந்த கார்கிய முனிவர் ஞான திருஷ்டியால் இதன் உண்மையைச் சொல்லி ஸமாதானம் செய்தார். வேதாள பாதையினின்றும் சுலோசனை சொஸ்தமாகி தர்மபாஹூ வென்ற வீரியவானான புத்திரனைப் பெற்றிருக்கிறாள். இவ்வாறு மகாமகஸ்நானம் செய்வது எல்லா அபீஷ்டங்களையும் தருகிறது.

## கோயில்கள்

**ஸ்ரீ சாரங்கபாணியின் வரலாறு:**—கௌதமருடைய பாதப் பிரஹாரத்தை ஏற்றுக்கொண்டு, தன்னை அலக்ஷியம் செய்ததாய் லீலார்த்தமாய் மகாலட்சுமி அனந்த சயனத்தில் ஸ்ரீபத்பநாபனுடன் சண்டையிட்டு கொல்லாபுரம் ஓடிப்போக ஸ்ரீநாராயணன் வைகுண்டத்திலிருந்து வெங்கடாசலம் வந்து நீலாதேவியின் அம்சமான பத்மாவதியை விவாகம் செய்துகொண்டார். தக்ஷிண தேசத்து ஜனங்களை உத்தரிப்பதற்காக நாரதர் கொல்லாபுரம்போய் இளையாளான பத்மாவதியை மணந்து ஆனந்தமாய் திருப்பதி மலையில் இருக்கப்போவதாய் அறிவிக்க, மகாலட்சுமி, கோபங்கொண்டு ஹம்ஸாரூடராய் புறப்படவும், நாரதர் வெங்கடேசரிடம் ஓடிவந்து, மகாலட்சுமி, கோபத்துடன் வருவதாய் அறிவிக்கவும், ஸ்ரீவெங்கடேசன் திருப்பதிமலையின் அடியோரத்தில் காட்டின் நடுவில் ஓர் தனி இடத்தில் பத்மாவதியை கோயில்கட்டி பந்தோபஸ்து செய்துவிட்டு மலையிலிருந்து ஓர் அம்சத்துடன் இந்த கும்பகோண க்ஷேத்திரத்திற்கு ஓடிவந்து, ஓர் பெரிய குகையில் அநேக ஆயிரம் வருடம் பதுங்கினார். வெங்கடேசன் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவிலில், பாதாள வெங்கடரமணனென இன்னமும் சேவைசாதித்து வருகிறார். மகாலட்சுமி பின்னே ஓடிவரவும், கும்பகோணத்து எல்லைக்குள் வந்தவுடன், அவளுடைய கோபம்மாறி ஸௌம்யபாவமேற்பட்டு, பகவத் தரிசனமேற்பட இங்கே தவத்திலிருந்தாள். பொன்மயமான தாமரைகளுள்ள ஹேம புஷ்கரணியை மனதால் நிர்மாணம் செய்தாள். ஸ்ரீஹரியை காலாலுதைத்தானே என்று பிருகுமுனி பச்சாத்தாப மடைந்து தவம்புரிந்து ஸ்ரீராமபக்தனான குகனாகவும், பிறகு, மகாலட்சுமி பக்தனான கரவீரராஜனாயும் பிறந்து, பிறகு மேருமலை சமீபத்தில் பதினாலாயிரம் சிஷ்யர்களைக் கொண்ட ஹேமரிஷியாயும் பிறந்தார். ஸ்ரீஹரியை மாப்பிள்ளையாகவும் மகாலட்சுமியைப் பெண்ணாகவும் பெற்று ஸாயுஜ்ய முக்தியையடைய வேண்டுமென்று பத்தாயிரம் வருடம் அவர் தவம்செய்ய, பகவான் இந்த கும்பகோண க்ஷேத்திரத்திற்குச் சென்றால் அவருடைய அபீஷ்டம் பூர்த்தியாகுமென்று அறிவித்தார். அதன்படி ஹேமரிஷி இங்கு வந்து ஹேமாப்ஜ சரசதீரத்தில் தவம் செய்திருந்த மகா

லட்சுமியை தன் புத்திரியாக்கிக்கொண்டு அவளுக்கு கோமளவல்லி என நாமகரணமிட்டு பகவத் தரிசனமுண்டாக அவளுடன் ஆயிரம் வருடம் கடுந்தவம்புரிய, வெங்கடரமணன் சாரங்கபாணியாய் ஸோமச்சந்திரமென்ற விமானத்திலேறிக் கொண்டு தரிசனம் கொடுத்து மகாலட்சுமியை முன்போல் மார்பில் சேர்த்துக் கொண்டார். ஸ்ரீசாரங்கபாணியை எவ்வளவு நேரம் பார்த்தாலும் திருப்தி ஏற்படுவதில்லையாதலால் இவர் ஆராவமுதர் என்று சொல்லப்படுகிறார். இவரைப் போன்ற லாவண்ய மூர்த்தியை இந்த பரதநாட்டில் எங்கும் காணவில்லை என்று பல பெரியார் சொல்லியுள்ளார்கள்.

மற்றும் இங்கு ஸ்ரீசக்ரபாணிஸ்வாமி, ஸ்ரீமூவராஹர், முதலிய கோயில்களிருக்கின்றன.

கும்பகோணத்தைச் சுற்றிலும் அமிருதப் பிரவாகம் பெருகிய பஞ்சக்ரோச க்ஷேத்திரங்களிருக்கின்றன. அதாவது 1. மத்யார்ஜுனம் (திருவிடைமருதூர்) 2. சம்பகாரண்யம் (திருநாகேசுவரம்) 3. ருத்ராக்ஷாரண்யம் (தாராசுரம்) 4. குஹாசலம் (ஸ்வாமிமலை) 5. பாடலீவனம் (கருப்பூர்).

---

காந்தா:—அடியே சாந்தா; ஏண்டி அலறி அடிச்சுண்டு ஓடறே! சேத்தை நின்னு என்னடி?

சாந்தா:—ஒன்றுமில்லேடி. எங்காத்துக்காரர் இன்னைக்கி சம உரிமை சங்கத்தில் "ஸ்திரீகள் அடிமைகளல்ல" என்ற விஷயத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்யப் போயிருக்கிறார். வரும்போது ரொம்பப் பசியாய் வருவார். அதற்குள் சமையல் செய்து வைக்காவிட்டால் என்பாடு அதோ கதிதான்.

* * * *

சுந்தரம்:—அடே கிருஷ்ணா என் மனைவி "புடவையில்லை, ரவிக்கை இல்லை, நகைநட்டு இல்லை" என்று அடிக்கடி கண்ணீர் விடுகிறாள். அதைத் தடுக்க ஒருவழி சொல்லேன்.

கிருஷ்ணன்:—இதானடா பிரமாதம். ஒன்னோடகாலணாவுக்கு ஒரு புதுக் கைகுட்டை வாங்கி அவள் அழும்போது எல்லாம் கண்ணைத் துடைத்துவிட வேண்டியது தானே!



# மங்கோலியா

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

மங்கோலியா தேசம் சீனாவுக்கு மேல்புறமுள்ள ஒரு சிறிய நாடு. இதன் விஸ்தீரணம் சுமார் 1,368,000 சதுர மைல்கள். சுமார் இருபத்தாறு லட்சம் ஜனத்தொகை. இந்த நாடு வெளி மங்கோலியா (Outer Mongolia) அல்லது வட மங்கோலியா என்றும உள் மங்கோலியா அல்லது தென் மங்கோலியா (Inner Mongolia or Southern Mongolia) என்றும் இருபிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு எல்லைகளாக வடக்கே சைபீரியாவும், தெற்கே சீனாவும், திபேத்தும், கிழக்கே மஞ்சூரியாவும் இருக்கின்றன. இத்தேசம் ஒரு காலத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்றிருந்தது. மங்கோலியர்கள் தங்கக் கூட்டத்தினரின் (Golden Horde) வம்சத்தினர். பதின்மூன்றாவது நூற்றாண்டிலும், பதினான்காவது நூற்றாண்டிலும் இவர்கள் ஆதிக்கம் ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் வெகுதூரம் பரவியிருந்தது. செங்கிஸ்கான் என்ற மங்கோலிய வீரன் சீனாவைக்கூடத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தான். மங்கோலிய அரசர்களுள் செங்கிஸ்கானின் பெயரே உலகப் பிரசித்திபெற்றது. இவன் தன் வெற்றிக்கொடியை பல தேசங்களில் நாட்டினான். அப்படி பல தேசங்களுக்கு அதிபதியாக இருந்த மங்கோலியா கடைசியில் சீன சக்ரவர்த்திகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. சீனாவில் சக்கிராதிபத்தியம் ஒழிக்கப்பட்டு குடியரசு ஸ்தாபனம் செய்யப்பட்டவுடனே மங்கோலியர்கள் தங்கள் சுதந்திரத்தை அடைய முயற்சி செய்தார்கள். சீனக் குடியரசின் ஆதிக்கத்தை தாங்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். சீனக் குடியரசுக்கும், மங்கோலிய அரசாங்கத்துக்கும் யுத்தம் நடைபெற்றது. யுத்தத்தினால் பெரிதும் துன்புற்றவர்கள் சீனாவுக்குச் சமீபத்திலுள்ள உள் மங்கோலியர்களே. ஆனால் அவர்கள் தங்கள் சுதந்திரத்துக்காக சீனத்துருப்புகளை எதிர்த்து வெகுவீரத்துடன் சண்டை செய்தார்கள். பயன் என்ன? கடைசியில் சமரஸம் பேசப்பட்டு அதன் பலனாய் தென் மங்கோலியா சீனக் குடியரசு சர்க்காருக்கு அளிக்கப்பட்டது. தங்கள் நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடிய தென் மங்கோலியர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டனர். அவர்களது தலைமை சர்க்காரே அவர்களை நசுக்கி சீன ஆதிக்கத்தை நிலைநாட்ட உதவி அளித்தனர். ஆனால் இன்றும் பூரணமாக சீன ஆதிக்கம் அங்கு ஏற்பட்டு விட்டதாகச் சொல்ல முடியாது. உள்நாட்டுப் புரட்சிகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. தென் மங்கோலியா பேரளவுக்கு சீனக்குடியரசில் இருப்பதாகச் சொல்லலாம்.

## ஹூடுக்டு

வட மங்கோலியாவின் அரசியல் விவகாரங்களும் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. வெளிக்கு பரம்பரை மங்கோலிய மன்னனாகிய 'ஹூடுக்டு' (Hutuktu) ஆள்வதாக இருக்கிறது. ஆனால் வடமங்கோலியா பூராவும் சோவியத் ஆதிக்கம்

/ua116 21/ 837 23-1-12

பரவிவிட்டது. உண்மையில் சர்க்கார் அவர்களது எண்ணத்துக்குத் தக்கபடி நடந்து கொள்ளுகிறார்கள்.

ஹூடுக்டு என்ற தலைவன் புத்தரின் நேர் பிரதிநிதி, அதாவது அவரது மறு அவதாரம் என்று கருதப்படுகிறான். மங்




மங்கோலிய ராஜகன்னிகை.

தங்கள் தலை அங்கியில் ராஜகன்னிகைகள் முத்து ஆரங்கள், மாணிக்கம் முதலியவைகளை அமைத்திருக்கிறார்கள்.

கோலியர்கள் மதப்பற்றுள்ளவர்கள். அது மட்டுமின்றி பலவித மூட நம்பிக்கைகள் உள்ளவர்கள். ஆகவேதான் அவர்களின் அரசன் தெய்வத்தின் பிரதிநிதியென்று சொல்லப்படுகிறது. ஹூடுக்டுவுக்குக் கீழே அந்தந்த சிறு சிறு பிரதேசங்களுக்கு 'இளவரசர்கள்' என்ற தலைவர்களிருக்கிறார்கள். இவர்கள் ஹூடுக்டுவுக்குக் கீழ்படிந்து நடக்கவேண்டும்.

## மக்கள்

மங்கோலியர்களில் பல வகுப்பினர் இருக்கின்றனர். அதில் டவுரியன்கள் (Daurians), கால்கர்கள் (Khalkas), துங்கேரியர் (Dyungarians) முதலியோர் முக்கியஸ்தர்கள். வெளி மங்கோலியாவிலுள்ள பெரும்பான்மையோர் வேட்டையாடுபவர்களாயும் ஆடு மாடுகள், குதிரைகள், ஒட்டகம், ரேண்டியர் மான் முதலிய மந்தைகளை வைத்தும் ஜீவனம் நடத்துகிறார்கள். ஆல்டாய் மலையடிவாரங்களிலும் இதர புல்தரைகள் மிகுந்த இடங்களிலும் தங்கள் மிருகங்களை மேய்ச்சலுக்காக விட்டு வரச்சென்று விடுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் நாடோடி வாழ்க்கையே நடத்தி வருகிறார்கள். அநேகர் விவசாயத் தொழிலும் கற்றுக்கொண்டு அதில் ஈடுபட்டு ஜீவனம் செய்கிறார்கள். இவர்கள் ஆடையாபரணங்கள் வெகு நூதனமாக இருக்கின்றன. கம்பளித் துணிகள் தான் அதிகமாகச் செய்து கொள்ளுகிறார்கள். இவர்கள் அதிக பருமனையும், நீண்டதுமான பூட்சுகளைப் போட்டுக் கொள்ளுவதால் நடக்க இஷ்டப்படுவதில்லை. குதிரை சவாரி, ஒட்டக சவாரிதான் போவார்கள். வீடுகள் அதிகமாக இருக்கவில்லை. ஒரு விதக் குடிசைகளிலேயே இவர்கள் வசிக்கிறார்கள். விருந்தினர்களை வரவேற்றுத் தங்களாலானவரை உபசரிப்பது இவர்களுடைய குணம். எந்த அதிதி வந்தாலும் ஒரு நாளாவது அவர்களுக்கு இடம் கொடுத்து உணவு அளிக்க வேண்டும்.





அதற்குமேல் கிரஹஸ்தர் விரும்பினால் தான் அதிதிகள் அங்கு தங்கலாம். தவிர அந்தந்த தாலுகாக்கள் ஒரு சிற்றரசன் ஆதிக்கத்தில் அல்லது அங்குள்ள மடாலயங்கள் ஆதிக்கத்திலிருந்து வரும். மடாலயங்களை நிர்வஹிக்கவேண்டிய கடமை அதைச் சுற்றியுள்ள ஜனங்களின் பொறுப்பாகும். தவிரவும், அவர்களின் சம்பிரதாயப்படி ஒரு குடும்பத்தில் மூத்த மகன் மட்டும் தான் விவாஹம் செய்துகொண்டு குடும்ப சொத்துக்கு வாரிசாக இருந்து கிரஹஸ்தனாக இருக்கலாம். மற்ற பிள்ளைகள் எல்லோரும் சன்யாசம் பெற்றுக்கொண்டு மடாலயங்களில் வசிக்கவேண்டும். இவர்களின் மதம் புத்தமதம். இவர்கள் சம்பிரதாயப்படி குடும்ப வாழ்க்கையில் இறங்கக் கூடாது. ஆனால் இப்பொழுது இவர்கள், விவாஹம் செய்துகொள்ளாவிட்டாலும், ஏதாவது ஒரு பெண்ணுடன் சேர்ந்து வாழ்க்கை நடத்திக்கொண்டு தங்கள் மதசம்பந்தமான சேவைகளையும் செய்து வருகிறார்கள். இதன் தாத்பர்யம் தங்கள் தேசம் செழிப்பானதல்ல; பிரஜாபிவிருத்தி அதிகமானால் காப்பாற்ற முடியாது என்ற எண்ணமாகக்கூட இருக்கலாம். விவசாய பூமி அதிகம் இல்லை. கோபிப்பாலைவனமும், ஆர்டோப் பாலைவனமும் பெரும்பாலான பாகத்தை அடைத்துக் கொண்டிருக்கின்றன. இவர்கள் தங்கள் நாட்டில் ஏதேஷ்டமாகக் கிடைக்கும் உயர் ஜாதிக் குதிரைகளை பிறதேசத்தாருக்கு விற்பனை செய்கிறார்கள். பால், தயிர், வெண்ணை அதிகமாகக் கிடைப்பதால் அவை சம்பந்தமான பதார்த்தங்களிலும் வியாபாரம் நடைபெறுகின்றன.

## முக்கிய பட்டணங்கள்

உள் மங்கோலியாவில் முக்கிய பட்டணம் டோலன் அல்லது லாமாமியாவோ (Dolon or Lama Miao) என்பது. இங்கு பிரபல புத்த ஆலயங்கள் பல இருக்கின்றன. இங்கு ஒவ்வொரு வருஷம் வசந்தகாலத்தில் "பேய்க்கூத்து" (Devil Dance) என்று ஒரு விழா நடை



நாகரீக மங்கோலிய ஸ்திரீ.

கன்னத்தில் இரு புள்ளிகளை அந்தஸ்துமிகுந்த ஸ்திரீகள் வைத்துக் கொள்ளுகிறார்கள்.

பெறும். அச்சமயத்தில் ஒரு பெரிய சந்தையும் அந்நகரில் கூடும். இந்த சந்தை நடக்கும் மூன்று தினங்களிலும் பலவித வைபவங்களும், கேளிக்கைகளும், கூத்துகளும், குதிரைப் பந்தயங்களும் நடைபெறுகின்றன. இதர முக்கிய நகரங்கள்

நிங்ஸியாபு (Ningsiafu), யுலின்பு (Yulinfu), போரல்கஸ்ஸு (Boralgassu). வெளி மங்கோலியாவில் முக்கிய நகரங்கள் ஊர்கா (Urga), கியாக்தா (Kiakta), காரகோரம், யுலியாசுதாய், கோப்டு முதலியன. ஊர்கா பட்டணமே தலை நகரம். அதில்தான் ஹூடுக்டு வசிக்கிறார். இவர்களின் அந்தஸ்து அவரவர்கள் எவ்வளவு கால்நடைகள் வைத்திருக்கிறார்கள் என்பதை



மங்கோலிய ஸ்திரீகளின் விசித்திர உடைகள்.

ஒட்டி நிர்ணயிக்கப்படுகிறது. இந்த தேசம் இன்னும் தற்கால போக்குவரவு சாதனங்களை அடையவில்லை. இதன் இயற்கை அமைப்பு ரயில்பாதை முதலியன போடுவதற்கு இசைந்ததாகவில்லை. கால்கான் (Kalgan) என்ற ஊரிலிருந்து ஊர்காவுக்கு (சுமார் 800 மைல்கள்) மோட்டார் பஸ் போக்குவரத்து சிலகாலமாய் ஏற்பட்டிருக்கிறது. குதிரை, ஒட்டகம் முதலியவைகளே தகுந்த சவாரி சாதனங்களாக இருக்கின்றன.

## ஸ்திரீகள்

மாதர்களின் வாழ்க்கை கடினமானதே. அவர்கள் கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள். அவர்கள் பால் கறந்து வெண்ணெ எடுத்தும், பால் கட்டிகள் செய்தும் தங்கள் கணவர்களிடம் கொடுத்து வியாபாரத்துக்கு அனுப்புகிறார்கள். ஆடுமாடுகளை கவனிக்க வேண்டியது அவர்களது வேலை. தவிர கம்பளங்கள் நெய்வதற்கும் தங்கள் புருஷர்களுக்கு உதவி செய்கிறார்கள். குடும்பத்துக்கு வேண்டிய உடைகளை அவர்களே தயார் செய்கிறார்கள். பூட்ஸ், குல்லாய், தோல், கம்பளி, பஞ்சு ஆடைகள், ஆண் பெண் இருபாலார்க்கு வேண்டியவைகளும் ஸ்திரீகளாலேயே தயார் செய்யப்படுகின்றன. அவர்களின் கைசட்டைகள் வெகு நீளமாகவும் நுனியில் குஞ்சமாகவும் கையைப் பூராவும் மறைத்திருக்கின்றன. புருஷர்கள் தங்களுக்கு மிஞ்சின பணத்தை மனைவிமார்களுக்கு வெள்ளி தங்க ஆபரணங்கள் செய்து ஆடையாபரணங்கள் வாங்குவதிலேயே செலவு செய்கின்றனர். தங்கள் மனைவிமார்மீது மங்கோலியர் அதிகமாக அன்பும் விசுவாசமுமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஸ்திரீகளின் ஆடைகளும், புருஷர்கள் ஆடைகளைப்போலவே வெகு விசித்திரமாக இருக்கின்றன. தங்கள் ஆடைகளை பலவித வர்ணங்களில் தைத்துக்கொள்வதில் அவர்களுக்கு அதிக ஆசை. முக்கியமாக மங்கல் சிகப்பு, மஞ்சள், ஊதாநிறத் துணிமணிகள்மீது மங்கோலிய மாதருக்கு அதிகப் பிரியம். மணமான பெண்கள் தங்





கள் தலையில் இரு கொம்புகளுள்ள ஒருவித கிரீடம் அணிந்து கொள்ளுகிறார்கள். அதில் தங்கம், வெள்ளி, பவழம் முத்து முதலியவற்றால் செய்யப்பட்ட பலவித ஆபரணங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த தலைமுடியைக்கொண்டு அவ்வீட்டுக்காரன் பணக்காரன், அல்லது ஏழையென்று அறிந்து கொள்ளலாம். அந்த இரண்டு கொம்பு போன்றதில் ஸ்திரீகள் தலைகள் பின்னி இருசடைகளாகச் செய்து நுழைத்து விடுகிறார்கள். மிகுந்த நாகரீகமடைந்த ஸ்திரீகள் அந்த சடைகள் கொம்புக்கு வெளியே தெரியாதபடி வெள்ளி வேலைப்பாடு செய்த கவசங்கள் போட்டு வருகிறார்கள். ஸ்திரீகள் நல்ல தைர்யசாலிகள். ஆண்களைவிட சாமர்த்தியமாக குதிரைகளின் மேலும், ஒட்டகங்களின் மேலும் சவாரி செய்வார்கள். அவர்கள் எப்பொழுதும் குதூஹலமாய், கவலைபற்று கள்ளங் கபடமற்றவர்களாய் இருக்கிறார்கள். சூது வாது தெரியாமல் இதரர்களுடன் அந்நியோன்யமாய் பழகுவார்கள். புருஷர்கள் இவர்கள் மீது அன்பாக இருந்தாலும் ஸ்திரீகள் ஆடவர்களுக்கு அடிமைகள் என்பதை உணரும்படி செய்யப்பட்டிருக்கிறது. முன்பின் தெரியாத ஆண்மகனாய் இருந்தாலும்கூட யாதொரு காரணத்துக்கும் அவனை அடித்து விடக்கூடாது; திட்டவும் கூடாது. இந்த விதிகளை மீறுபவர்கள் சவுக்கடி தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள். பொதுவாக ஸ்திரீகள் நல்ல திடகாத்திரமுள்ளவர்களாயும் கூடியமட்டும் பார்வைக்கு அழகாகவும் இருக்கிறார்கள். தங்கள் கஷ்டங்களை சற்றும் பொருட்படுத்தாது அவர்கள் எப்பொழுதும் முகமலர்ச்சியுடனும், குதூஹலத்துடனும் தங்கள் காரியாதிகளைச் செய்து வருவதைக் கண்ட இதர தேசத்தினர் அவர்களின் பொறுமையை மெச்சுகின்றனர்.

## சிறை தண்டனை

ஸ்திரீகள் குற்றம் செய்தாலே சவுக்கடி கொடுக்கும் மங்கோலியர் குற்றவாளிகளை நடத்தும் முறை வெகு கொடூரமானது. மங்கோலியாவின் தலை நகரமாகிய ஊர்காவிலிருக்கும் சிறைக் கூடத்தைப் போன்ற அவ்வளவு கொடூரமானது உலகத்தில் வேறு எங்கும் காணமுடியாது. (அந்தமானில் அல்லலுற்ற அரசியல் கைதிகள்கூட இதை எதிர்த்துச் சொல்ல முடியாது.) ஒவ்வொரு கைதியும் நிற்கவும், உட்காரவும், சரியாகப் படுக்கவும் முடியாத ஒரு பெட்டியில் போடப்படுகிறான். ஒரு சிறு துவாரத்தின் மூலம் தான் உணவு கொடுக்கப்படும். இந்தப் பெட்டிகளும் ஒன்றன்மேலொன்றாக அடுக்கப்பட்டிருக்கும். அந்தப் பெட்டிகள் இருக்கும் அறைகளில் ஜன்னல்கள் கூட இருக்கமாட்டா. இப்பேர்ப்பட்ட சிறைவாசத்திலிருந்து தண்டனை காலம் முடிந்து வெளிவரும் கைதிகள் வெகு துர்லபம். பெரிய குற்றங்கள் செய்தவர்கள் பலவழிகளில் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். நீதி அவ்வளவு ஒழுங்காக வழங்கப்படுவதாகச் சொல்ல முடியாது. இதைக்கேட்டு அரசியல் கைதிகள் சற்று மனச்சமாதானம் அடைவார்களா? பிரிட்டிஷ் சர்க்கார் எவ்வளவோ 'புண்யவான்களி'ல்லையா!

**சமையல்**

# ஜவ்வரிசி இட்டிலியும், அவல் ஹல்வாவும்

"ஸரோஜா"

போன மாதம் எங்களூரில் அரியக்குடி ராமானுஜய்யங்கார் பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. அவருடன்கூட சௌடய்யா பிடில் என்றதும் ஜனங்கள் இரட்டிப்பாக ராமமந்திரத்தில் நிறைந்து விட்டனர். மாலை 5½ மணிக்கு பாட்டு ஆரம்பமென்றால் 4 மணிக்கே ராமமந்திரம் சென்றுகூட, உட்கார இடமின்றி தவித்துவிட்டோம். நானும் என் தங்கையும் வீட்டைவிட்டு 3½ மணிக்கே கிளம்பி விட்டோம். ராமமந்திரத்திற்கு போகும் வழியிலேயே என் சிநேகிதி அம்புஜத்தின் வீடு இருந்ததால், அவளையும் கூட அழைத்து செல்லலாமென்று அவள் வீட்டில் நுழைந்தோம்.

அவள் இன்னும் தலைகூடப் பின்னிக் கொள்ளாமல், காரியமாக விருப்பதைக் கண்டு, நான் "நீ எப்பொழுதும் இப்படித் தான் என்று தெரிந்துதான் அரைமணி முந்தியே நான் வீட்டைவிட்டுக் கிளம்பினேன். ராமமந்திரத்திற்கு வருகிறாயா இல்லையோ?" என்றேன்.

அம்புஜம் பாய்விரித்துக் கொண்டே "இதோ ஐந்து நிமிஷத்தில் தயாராகிவிடுகிறேன். சற்று உட்காருங்கள். வெய்யிலில் வந்திருக்கிறேளே. மிந்தாம் நாள் என் நாத்தனாரும், நாத்தனார் அகமுடையானும் வந்தார்கள். அவர்கள் இப்பொழுது 3 மணி வண்டிக்குத் தான் ஊருக்கு புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களுக்கு விருந்துபோட்டு, காப்பி, டிபன் செய்து கொடுத்து ரயிலுக் கனுப்பிவிட்டு இப்பொழுதுதான் தலை பின்னிக்கொள்ளலாம் என்று வந்தேன்" என்று சொல்லிக் கொண்டே சமயலறைக்குள் சென்று இரண்டு தட்டுகளில் ஏதோ பலகாரமும் இரண்டு க்ளாஸ் டம்ப்ளர்களில் பானமும் கொண்டுவந்து எங்கள் முன்னால் வைத்து விட்டு, தானும் தலை பின்னிக் கொள்ள உட்கார்ந்தாள்.

தட்டில் இருந்த இட்டலியை கொஞ்சம் விண்டு வாயில் போட்டுக் கொண்டே "இதென்னடி இது! ஜவ்வரிசியாட்டமா இருக்கே. இப்பொழுதுதான் வீட்டில் டிபன் காபி எல்லாம் முடித்துக்கொண்டு வந்தோம். அதற்குமேல் நீ வேறு தின்ன கொண்டுவந்து வைத்துவிட்டாயேடீ" என்றேன்.

அம்புஜம் "என்ன பிரமாதம். இரவு சாப்பாட்டைக் கொஞ்சம் குறைத்து விட்டால் ஆச்சு. இட்டலி எப்படி இருக்கிறது?" என்றாள்.

நான் "நன்றாகத்தானிருக்கிறது. இதைத் தயாரிக்கும் விதத்தை கொஞ்சம் சொல் பார்ப்போம்" என்றேன்.

அம்புஜம் "இது தயாரிப்பது வெகு சுலபம்; உடம்புக்கும் ரொம்ப நல்லது. ஜவ்வரிசியை முதலில் நெய்விட்டு சிகப்பாக வருத்து, தயிரில் போடவேண்டும். பிறகு தயிரில் பச்சை மிளகாய், கொத்தமலித்தழை எல்லாம் அரிந்துபோட்டு, உப்பு சேர்த்து கடுகு தாளித்து, இட்டலியாக வார்த்து, வேட்டில் வேகவைத்து எடுத்து விடுவது. இவ்வளவுதான். செலவும் மட்டு. உங்காத்தில் இன்றைக்கென்னடீ டிபன் ஸரோஜா?" என்றாள்.

அதற்குள் என் தங்கை அனசூயா "அவல் ஹல்வாவாமே, அதைப் பண்ணி இருந்தாள். ருசியாகத்தானிருந்தது. நான் இதற்கு முந்தி அதைச் சாப்பிட்டதே இல்லை" என்று முந்திக்கொண்டு பதில் சொன்னாள்.

அம்புஜம் "ஸரோஜா, அதை எவ்விதம் செய்வது? கொஞ்சம் சொல்லடீ. அன்றைக்கு ஜானகி வீட்டில் செய்திருந்தாள். எப்படிச் செய்வதென்று கேட்டேன். 'அதாண்டீ அவலை பாலில் போட்டு வேக வச்சு, குங்குமப்பூ, சக்கரை ஏலப்பொடி எல்லாம் சேர்த்து, கட்டியானதும் தட்டில் கொட்டி கிளறி விட்டாலாச்சுது,' என்றாள். வீட்டில் வந்து அவ்விதமே செய்து பார்த்தேன். மதமதவென்று நன்றாகவே இருக்கவில்லை" என்றாள்.

நான் "ஜானகிக்கு எப்பொழுதும் கொஞ்சம் ஜம்பம்தான், செய்வதைச் செய்யும் விதத்தில் சொல்லி விட்டாலென்ன? அவலை முதலில் நெய்யில் சேரை, சேரையாகப் போட்டு நன்றாக பொரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். பொரித்த அவலை உரலில் கொட்டி ஒன்றிரண்டாக உடைத்துக் கொள்ளவேண்டும். அப்புறம் அடுப்பில் குங்குமப்பூவும், ருசிக்கு வேண்டிய அஸ்கா சர்க்கரையும் கலந்த பாலை அடி கெட்டியான பாத்திரத்தில் வைத்து நன்றாக காய்ச்ச வேண்டும். காய்ந்த பாலில் அவல் பொடியையும், வருத்துத் துண்டு செய்த முந்திரிப் பருப்பையும், ஏலப்பொடியையும் கொட்டி கிளறி நல்ல நெய்யும் விட்டு சுருள சுருள கிளறித் தட்டில் கொட்டி கீறிவிட்டால் ஆச்சுது அவல் அல்வா! இந்தப் பிரமாதத்தை ஜானகி சொல்லிட்டா குறைஞ்சிடுமா?" என்று சொல்லி முடித்தேன்.

அதற்குள் அனசூயா டம்ப்ளரிலிருந்த பானகத்தை ருசி பார்த்துவிட்டு "இதென்ன அக்கா சிகப்பாக விருக்கே! டொமேடோ ஷர்பத்தா?" என்றாள்.

நான் "ஆமாண்டீ! இது செய்வது கூடவா உனக்குத் தெரியாது?"

அனசூயா "எவ்விதம் செய்வது கொஞ்சம் சொல்லேன்?" என்று ஆவலாய்க் கேட்டாள்.

நான் "நல்ல பழுத்த டொமேடோ பழங்களை நன்றாக அலம்பி, கரிவடி கட்டும் பாத்திரத்தின் மூலமாவது அல்லது Strainer மூலமாவது துண்டுகளாக நறுக்கிப்போட்டு நன்றாகக் கசக்கிப் பிழிந்து ரசத்தை வடிகட்டி கொள்ளவேண்டும். சதைபித்திலிருந்து ரசம் நன்றாக வந்து விடும்படி கொஞ்சம் கொஞ்சமாக ஜலம் விட்டு நன்றாக கசக்கி பிழிந்துவிட்டால் விதையும், தோலும் மட்டும் மேலே தங்கி விடும். இப்பொழுது நல்ல பெருத்த நான்கு டொமேடோ பழத்திற்கு ஒரு எலுமிச்சம்பழக் கணக்கில் அந்த ரசத்துடன் எலுமிச்சம்பழ ரசத்தையும் பிழிந்து சேர்த்து அஸ்கா சர்க்கரையும் சேர்த்து கலக்கி குடிக்கவேண்டும். இதில் ஐஸ்கொஞ்சம் சேர்த்துக்கொண்டு குடித்தால் வெய்யில் காலத்திற்கு முதல்தர பானமாக விருக்கும்" என்று வியாக்யானம் செய்தேன்.

நான் பேசி முடிக்குமுன் ஸ்டேண்டிலிருந்த கடியாரமுள் சரியாக நான்கு மணி காண்பித்துவிட்டது. அம்புஜமும் பறக்க பறக்க முகம் கழுவி நெற்றிக்கு பொட்டு இட்டுக்கொண்டு, புதிய புடவை உடுத்திக்கொண்டு வரவே, மூன்று பேருமாக ராமமந்திரத்திக்கு புறப்பட்டு விட்டோம்.

# வைத்தியப் பகுதி

ஸ்ரீமதி எஸ். கமலா

## தேகாரோக்கிய விதிகள்

வியாதிவராமல் தடுக்க சர்வ சாதாரணமான சில விதிகளை ஒவ்வொருவரும் அனுஷ்டித்து வந்தால் எவ்வளவோ ஜனங்கள் தாங்கள் படும் அவஸ்தைகளைத் தடுத்துக்கொள்ளலாம். முக்கியமாக சுவாசிக்கும் காற்று, அருந்தும் உணவு, குடிக்கும் தண்ணீர் முதலியவற்றில் ஜாக்கிரதையாக நடந்துகொண்டால் பலவிதமான நோய்கள் ஜனங்களிடம் நெருங்கவே நெருங்கமாட்டா. நான் இப்பொழுது சொல்லக்கூடிய விஷயங்கள் சர்வ சாதாரணமானவைகள். ஆனால் அவைகளை பெரும்பான்மையானவர்கள் ' தெரிந்தும் அலட்சியம் செய்கிறார்கள். பின்னர் அதன் பலனாக கடுமையான பல வியாதிகள் உண்டாய் படாதபாடும், பணச்செலவும் ஆகிறது. ஆகையால் ஒவ்வொரு ஸ்திரீயும் கீழ்கண்ட விதிகளை அனுசரித்து நடந்தால் குடும்பத்தில் தேகாரோக்கியம் நிலைத்திருக்கும்; "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றபடி சுக வாழ்வும் சுபிக்ஷமும் இல்லங்களில் குடிகொண்டிருக்கும். இவ் விதிகளைக் கடைப்பிடிப்பது பிரமாதமான காரியமல்ல. மனம் வேண்டும். அவ்வளவுதான்.

### தூயகாற்று

தேகாரோக்யத்துக்கு உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு தூயகாற்றும் அத்தியாவசியமானது. ஆகையால் எல்லோரும் எவ்வளவு அதிகமான நேரம் வெளியிடங்களில் இருக்கமுடியுமோ அவ்வளவு இருக்கவேண்டும். தனி அறைகளில் அடைந்து கிடப்பது வெகு கெடுதல். வீடுகளிலுள்ள ஜன்னல் கதவுகளை திறந்தே வைக்கவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு தூயகாற்று வீட்டுக்குள் வருகிறதோ அவ்வளவுக்கும் நம் உடம்பு வியாதியின்றியிருக்க ஹேதுவாகிறது. நல்ல காற்று கிடைக்கும்படி ஜன்னல்களில்லாத வீடுகளில் வசிப்போர் க்ஷய ரோகம் முதலிய சுவாசாசய நோய்களால் பிடிக்கப்படுவார்கள். வராந்தாக்களிலும், வெளியிடங்களிலும் தூங்குவதே மேல். தூங்கும்பொழுது குப்புறபடுக்கக்கூடாது. மூஞ்சியை மூடிக்கொண்டும் தூங்கக்கூடாது. இப்படிச் செய்தால் நல்ல காற்று சுவாசிப்பதற்கு இடைஞ்சலாக இருக்கும். மழைகாலத்தில்கூட ரூமுக்குள் தூங்கும்போது ஜன்னல்களை சாத்திவைக்கக் கூடாது. எப்பொழுதும் நாசித் துவாரங்களாலேயே சுவாசிக்கவேண்டும். வாயினால் மூச்சையுள்ளே யிழுத்து வெளியிட்டால் இருமல், ஜல தோஷம் முதலியன உண்டாகும். தொண்டையில் சதைவளரும். இரவும் பகலும் சுத்தமான ஆகாயத்தில் வசிப்பவர்களுக்கு வைத்தியர் உதவியும் வேண்டாம்;



டானிக்குகளும் வேண்டாம்; மருந்துகளும் தேவையில்லை.

### சுத்த ஜலம்

காலரா முதலிய குடல் கோளாறுகளால் வருஷாவருஷம் ஆயிரக்கணக்கான மக்கள் நம் தேசத்தில் மடிகிறார்கள். இந்த வியாதிகள் வருவதற்கு முக்கிய காரணம் அசுத்தத்தண்ணீரை உபயோகப்படுத்துவதே. இந்த அநியாய மரணங்களைத் தடுப்பது வெகு சுலபமாயிருந்தபோதிலும் நம் ஜனங்களின் அறியாமையினால் இக் கொடிய நோய்கள் நம் மக்களை யமனுக்கு பலியிடுகின்றன. நம்முடைய ஜனங்கள் தண்ணீர் ஸ்தலங்களை அசுத்தப்படுத்தக் கூடாது. மலஜலபாதைகள் குளம், ஆறு, ஏரிகள் பக்கத்தில் செய்துவிட்டு அங்கு கால் கழுவிவிட்டு, ஆடு மாடுகளையும் அவற்றில் ஸ்நாநம் செய்வித்து தாங்களும் அதே குளத்தில் குடி தண்ணீர் எடுத்தும் குளிக்கவும் செய்கிறார்கள். இந்த துர்பழக்கங்கள் குடி தண்ணீரையும், குளிதண்ணீரையும் மிகவும் அசுத்தப்படுத்துகின்றன. இந்த மாதிரியான வேலைகளை ஜலக்கட்டங்களில் செய்யக்கூடாது என்பதற்காகத்தான் நம் முன்னோர்கள் சாஸ்திரங்களில் ஜலம் தெய்வீகமானது, அதை அசுத்தம் செய்யக்கூடாது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஜலதாரைகளை அசுத்தப்படுத்துவது மஹாபாபம்; பொதுஜன விரோதமான காரியம். கிணறுகளும் பக்கத்திலுள்ள தூசி தும்புகள் விழாதபடி அமைக்கப்படவேண்டும். இப்பேர்பட்ட இடங்களிலுள்ள தண்ணீரை உபயோகப் படுத்துவதால்தான் காலரா முதலிய நோய்கள் உண்டாகின்றன.

தவிர ஜலம் அருந்துவதற்கு முன் தண்ணீரை நன்றாகக் காய்ச்சிவிடவேண்டும். காய்ச்சுவதால் அவற்றிலுள்ள கிருமிகள் மடிந்துபோகின்றன. ஜலம்வைக்கும் பாத்திரங்களை சுத்தமாக வைக்கவேண்டும். தூசி தும்புகள் விழாதபடி பாத்திரங்களை மூடிவைக்கவேண்டும். வெந்நீர் உபயோகப்படுத்த விரும்பாதவர் காய்ச்சி குளிர வைத்த ஜலத்தை உபயோகிக்கலாம்.

### திடமான உணவு

நல்ல திடகாத்திர தேகாரோக்கியத்துக்கு புஷ்டியான ஆகாரம் அவசியம். ருசிகரமானதும், சத்துள்ளதுமான ஆகாரம் சைவ உணவிலும் உள்ளன; மாமிச சம்பந்தமான ஆகாரத்திலும் இருக்கிறது. ஆகையால் சைவ உணவு அருந்துவோரும் திடகாத்திரராயும், பலிஷ்டர்களாயும் இருக்க முடியாது என்று நினைப்பது தப்பு. சாதாரணமாக மரக்கறி பதார்த்தங்கள் மட்டும் உபயோகிப்பவர்கள் தினசரி ஆகாரத்தில் அவசியமாயிருக்கவேண்டிய சத்துப்பொருள்களை அடைவதற்காக போதியஅளவு பால் அருந்தவேண்டும். எண்ணெ பதார்த்தங்களை விட வெண்ணெ அல்லது நெய் சேர்ந்த பதார்த்தங்களைச் சேர்த்து வரவேண்டும். மில்லில் அரைத்த அரிசியை உபயோகப் படுத்துவதைவிட கைக்குத்தரிசியை உபயோகப்படுத்துவது ரொம்பவும் நல்லது. மில்லில் அரைக்கப்பட்ட அரிசி சத்துப்போனது (Milled rice is killed rice). கஞ்சி வடித்துவிடாமல் பொங்கி சாப்பிடுவது சிறந்தது. காய்கறிகள் அதிகமாக உபயோகிக்கவேண்டும். பச்சைக் காய்கறிகள் அதிகம் சேர்த்துக் கொண்டால்தான் நல்லது. பழங்களும்

ஆகாராதிகளுடன் தினம் சேர்த்துவர வேண்டும். தினசரி ஒரு ஆப்பிள் அருந்தினால் டாக்டரே வேண்டியதில்லை என்று ஒரு பழமொழியும் நம்மிடை வழங்கி வருகிறது (An Apple a day keeps the doctor away).

மசாலா, காரம், புளிப்பு சேர்ந்த ஆகார வகைகளும் அதிகமாகச் சேர்க்கக் கூடாது. உணவுகள் சரியானபடி சமையல் செய்யப்பட வேண்டும். அரைகுறையாய் வெந்த பதார்த்தங்களை அருந்தினால் சரியாக ஜீரணமாகாது. தினசரி ஒரே மாதிரியான ஆகாரத்தையே துயர்ந்து சாப்பிடுவதும் நல்லதல்ல.

சாப்பிடுவதற்கு ஒரு முறைவேண்டும். கண்டாகண்ட நேரங்களில் கண்டவைகளை எல்லாம் திங்கக்கூடாது. குறிப்பாக பசியில்லாதபோது 'கடனைக் கழித்து விடுவோம்' என்றும் 'உட்கார்ந்தாவது எழுந்திருந்துவிடுவோம்' என்றாவது சாப்பிடுவது அஜீரணத்துக்குக் காரணமாகி பின்னடி பல தொந்தரவுகளை இழுத்துவிடும். பசியில்லாவிட்டால் சாப்பிடாமல் இருந்துவிடுவதே உத்தமம். ஆகையால்தான் நம் பெரியோர்கள் 'லங்கனம் பரம ஔஷதம்' என்று கூறி இருக்கிறார்கள். வயறு மந்தமாயிருக்கும் போது எந்தக் காரணத்தாலும் உணவு உட்கொள்ளக் கூடாது. குறிப்பிட்ட காலத்தில்தான் சாப்பிட வேண்டும். உணவு சாப்பிட உட்காருமுன் கால்கைகளை சுத்திசெய்து கொண்டு வாயைக் கழுவிக் கொள்ள வேண்டும். சாப்பிடும்போதும் அள்ளிக் கொட்டி முழுங்கக்கூடாது. நன்றாய் மென்று தின்ன வேண்டும். சாப்பாட்டிற்கு அப்புறமும் வாயை நன்றாய் சுத்தி செய்து கொள்ள வேண்டும். அளவுக்கு மிஞ்சி அமிருதமானாலும் அருந்தக்கூடாது.

மேற்கூறிய பொது விதிகளை ஆகார, ஆகாய, ஜல விஷயங்களில் அனுசரித்து நித்தியப்படி நன்றாகப் பல் துலக்கி, ஸ்நானம்செய்து சுத்தமான ஆடைகள் அணிபவர்களைக் கண்டால் வியாதி ஓடிப்போய் விடும். இந்த விதிகள் கஷ்டமானவைகளா? பின்னால் படப்போகும் கஷ்டங்களை நினைத்துப் பார்த்தால் கஷ்டமில்லை.

———:O:———

மனைவி:—நம்முடைய குழந்தைக்கு இப்படிப்பட்ட துஷ்டத்தனங்கள் எங்கிருந்து வந்தன? என்னிடமிருந்து வந்திருக்கமாட்டா.

புருஷன்:—வாஸ்தவம். உன்னுடைய துஷ்டத்தனத்தில் ஏதாவது கொஞ்சம் குறைந்திருந்தால் அல்லவா அப்படி நினைக்கலாம்.


*　　*　　*　　*

பிதா:—நான் குழந்தையாயிருக்கும்போது பொய் சொன்னதே கிடையாது.

குழந்தை:—ஆனால், அப்பா நீ பொய் சொல்லத் தொடங்கியது எப்போது.

# ஸ்ரீமதி சரஸ்வதிபாய்

"கண்ணன்"



ஸ்ரீமதி ஸி. சரஸ்வதிபாய்

சங்கீத உல்கில் ஒரு ஜகஜ்ஜோதியாய் பிரகாசிக்கிறார் ஸ்ரீமதி சரஸ்வதிபாய். தென்னிந்திய சங்கீதரசிகர்கள் யாரும் சரஸ்வதிபாயின் பெயரை அறியாமலிருக்கமாட்டார்கள். அவரது இனிய கானம் அவர்களது செவியில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். தமிழ்நாட்டில் ஹரிகதா காலக்ஷேபம் செய்ய முன்வந்த முதல் ஸ்திரீ ஸ்ரீமதி சரஸ்வதிபாய் அவர்களே. இன்று தைர்யமாக பஹிரங்க மேடைகளிலும், சபைகளிலும் உயர்குல ஸ்திரீகள் முதல் சங்கீதத்தொழில் வனிதையர் ஈராக ஸ்திரீ புருஷர்கள் நிறைந்த சபைகளில் கதா காலக்ஷேபங்கள் செய்து மக்களை இன்புறச்செய்ய வழிகாட்டியாயிருந்தவர் ஸரஸ்வதிபாய்.

## பெற்றோர்

சரஸ்வதிபாய் பிறந்த இடம் குத்தி (Gooty) ஆந்திரதேசத்தில் ஜனித்தபோதிலும் இவரது பெற்றோர்கள் கன்னட பிராமணர்களாயிருந்தார்கள். இவரது தாயின் பெயர் ஸ்ரீமதி பாகீரதி அம்மாள். பாகீரதி அம்மையார் சிறந்த தெய்வபக்தியும், நல்லொழுக்கமும் உடையவர். சரஸ்வதியின் தந்தையின் பெயர் திரு. ராமா ராவ். இவரும் தர்மசீலர். இருவருக்கும் தவப்புதல்வியாய் சரஸ்வதி 1893ம் வருஷம் குத்தியில் பிறந்தார். பெற்றோர்கள் சிறுமியை வெகு அன்புடனும் ஆர்வத்துடனுமே போற்றிவளர்த்து வந்தார்கள். குழந்தையின் போக்குப்படி விட்டு அவளது இயற்கையான சுபாவ குணங்களைத் தேர்ச்சிசெய்து கொள்ள வேண்டுமென்பதே பாகீரதி அம்மாளின் விருப்பம். அதுவே சரியென்று ராமாராவும் கருதினார்.

## பல பாஷா பாண்டித்யம்

சரஸ்வதிபாய் தன் இளவயதிலேயே பல பர்ஷைகளில் நல்ல தேர்ச்சி அடைந்திருந்தார். இயற்கையிலேயே சிறுமி ஸரஸ்வதி மஹா புத்திசாலி; நுண்ணறிவு படைத்தவள். அதற்கேற்றாப்போல் சமய சந்தர்ப்பங்களும் கூடினால் கேட்கவும் வேண்டுமோ? இவரது மாதுர்பாஷை கன்னடமானதால் கன்னட பாஷையை நன்கு கற்றுக்கொண்டார். தெலுங்குக்கு அந்நாட்களில் ஒரு தனி கௌரவம் அளிக்கப்பட்டதால் அதைக் கற்றுக்கொண்டார். தான் வளர்ந்த இடம் தமிழ்பூமியாகையால் தமிழையும் அறிந்துகொண்டார். தனது 9 வது வயதிலேயே இவருக்கு தமிழ், தெலுங்கு, கன்னடம் மூன்று பாஷைகளில் பரிச்சய மேற்பட்டிருந்தது. அதற்கேற்றாப்போல் அவ்வருஷம் பாகீரதி அம்மாளும், ராமாராவும் தங்கள் புத்திரியுடன் சென்னைக்கு வந்து திருவல்லிக்கேணியில் குடியிருக்க ஆரம்பித்தனர். அவர்களிருந்த இடத்தில் மஹாராஷ்டிரர்கள் அதிகமாக இருந்ததால் குழந்தை சரஸ்வதி வெகு எளிதில் மராட்டி பாஷையையும் கற்றுக்கொண்டார். இப்படியாக சகல பாஷைகளிலும் தாய் பர்ஷையைப் போல் பேசப் படிக்க தெரிந்துகொண்டார். இவருக்கு சமஸ்கிருதத்திலும் தேர்ச்சியுண்டு. கிருஸ்தவ கல்லூரியில் சமஸ்கிருத பண்டிதராயிருந்த திருவாதி கிருஷ்ணாச்சாரியார் சரஸ்வதியின் புத்தி தீட்சண்யத்தைக் கண்டு மெச்சி அவ

ளுக்கு சமஸ்கிருதம் சொல்லிக் கொடுத்தார். இந்த பாஷையிலும் சரஸ்வதி நல்ல பாண்டித்யம் அடைந்துள்ளார். இன்று அவர் சங்கீதமாரியைப் பொழிந்து பலவித பாஷைகளிலும், பேசிப் பாடும்போது அவர் அர்த்தம் உணர்ந்தே பேசிப் பாடுவதால் கேட்போர்மனம் குளிருகிறது.

## சங்கீதப் பயிற்சி

பெண் குழந்தைகளுக்கு விவாஹத்துக்கு முன் சங்கீதம் கற்பித்து வைக்கும் வழக்கப்படி சரஸ்வதிக்கும் சங்கீதம் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஆனால் குழந்தையின் இயற்கை சங்கீத அறிவு வெகு உயர்ந்ததாக இருந்தது. சங்கீத உபாத்தியாயர்கள் அவளது பெரும் ஞானத்தைக்கண்டு ஆச்சர்ய முற்றனர். சங்கீதத்தின் சகல அம்சங்களையும் குரு உபதேசிக்குமுன்னரே எளிதில் கிரஹிக்கும் தன்மை அவரிடத்திலிருந்தது. அவரது வயதுக்கு அவர் அச்சமயம் காட்டிய தேர்ச்சி வெகு அதிசயமே.

ஒரு சமயம் சிறந்த ஹிந்துஸ்தானி சங்கீதவித்வானாகிய ஜனாப் யாகுப் அலி இவரின் பயிற்சியைக் கண்டும், சாரீரத்தின் உன்னதத் தன்மையைக்கண்டும் ஹிந்துஸ்தானி சங்கீதத்துக் கேற்றது என்று கருதி தானே அந்த சங்கீதத்தில் ஸரஸ்வதிக்கும் பயிற்சி அளிக்க முன்வந்து சொல்லிவைத்தார். இப்படியே இவரது திறமையைப் பற்றி பொது ஜனங்களிடையும் பரவியது. அவர் பாடக் கேட்ட சகலரும் அவரது திறமையை வியந்து பேசினர். தனது 15வது வயதில் அவர் பாகவத யோக்கியதை பெற்றார்.

அச்சமயம் சென்னையில் ஹைகோர்ட் நீதிபதியாக இருந்த சங்கரன் நாயர் (சர்) உயர்ந்த சீர்திருத்த வாதியாகவும், ஸ்திரீகளின் முன்னேற்றத்தில் தீவிர நாட்டமுள்ளவராயும் இருந்தார். ஸரஸ்வதியின் சங்கீத விற்பன்னத்தைக் கேள்விப் பட்டு தனது இல்லத்தில் ஒரு கச்சேரி நடத்த 1907-ம் வருஷம் ஏற்பாடு செய்தார். இது அவரது வாழ்க்கையில் ஒரு முக்கிய சம்பவம். "பிராமண ஸ்திரீ பகிரங்கமாக ஹரிகதா காலக்ஷேபம் செய்வதா" என்று வைதீகக் கும்பல்கள் கூக்குரலிட்டன. வித்வான் கோஷ்டியினர் அந்தக் கச்சேரிக்குவர மறுத்தனர். அது மட்டுமா! பக்கவாத்தியக்காரர்கள் யாரும் செல்லக்கூடாது என்று கட்டுப் படுத்தினார்கள். ஆனால் இதற்கெல்லாம் நாயரும் சளைத்தவரல்ல; சரஸ்வதியும் கலங்கினவளல்ல. எப்படியோ சகலமும் சேகரிக்கப்பட்டு கச்சேரியும் நடை பெற்றது. கச்சேரியைக் கேட்ட யாவரும் பரவசமடைந்தனர். மெள்ள மெள்ள எதிர்ப்பு ஒழிந்தது. யார் அவரை ஆதியில் தூற்றினார்களோ அவர்களும் போற்றினார்கள், போற்றி வருகிறார்கள். ஆனால் ஸ்ரீமதி சரஸ்வதிபாய்க்கு அவர்கள்மேல் கோபமோ குரோதமோ சற்றுமில்லை.

## மணவாழ்க்கை

ஸ்ரீமதி சரஸ்வதி, ஸி. ராகவேந்திர ராவ் என்ற எழில் மிகு வாலிபரை மணந்தார். அவரும் நல்ல படித்தவர். ஆனால் இருவரது தாம்பத்ய வாழ்க்கையும் சுகமானதாக இல்லை. திரு. ராவ் தன் மனைவியை ஒரு தெய்வீக அம்சமென்று கருதி விட்டார். தனது இல்லாள் என்ற





மனப்பான்மை அவர் மனதை விட்டு அகன்று விட்டது. அப்படியிருக்க குடும்ப சுகம் எப்படி சரஸ்வதிபாய்க்கு ஏற்படும்? அதுவும் சரஸ்வதியின் வாழ்க்கை தூயமானது, மாசற்றது. ஹிந்து ஸ்திரீகளின் உன்னத லட்சியங்களைக் கடைப்பிடித்து நடப்பவர். 'வைதீகப் பிச்சு'வல்ல, ஆனால் தலை கால் தெரியாத 'நாகரீக' மாதும் அல்ல. பாரதஸ்திரீ தர்மத்தைக் கைப்பிடித்தே ஒழுகிவருகிறார். இப்பொழுதும் சங்கீதத்தை தனக்கு ஒரு ஜீவனோபாயமாக மதிக்கவில்லை. தேவதாபக்தியை அபிவிருத்தி செய்யும் ஒரு சாதனமாகவே பாவித்து வருகிறார். தனது ஓய்வுநேரங்களை சத்கால க்ஷேபத்தில் வித்வத்கோஷ்டிகளுடன் செலவழித்து வருகிறார்.

## பிரசித்தம்

சர். சங்கரன் நாயரின் இல்லத்தில் கச்சேரி நடந்ததற்குப் பிறகு இவர் வேறு சில இடங்களிலும் காலட்சேபம் செய்தார். இவரது புகழ் தென்னாட்டிலிருந்து வடநாட்டுக்கும் பரவியது. இவரது சங்கீதத்தின் உயர்வை அங்கீகரிக்க வடநாட்டாரும் முன் வந்தார்கள். பம்பாய் நகரத்தில் 1916ம் வருஷம் கந்தர்வ மஹாவித்யாலயத்தின் சார்பாக அந்த சபையின் பிரதம ஆசிரியராயிருந்த விஷ்ணு திகம்பர் குலஸ்கர் சரஸ்வதிபாய்க்கு 'காயனபடு' என்ற பட்டத்தை தந்தார். மறுபடியும் 1920-ம் வருஷம் பூனா நகரில் ஒரு கச்சேரி நடந்தது. அச்சமயம் பாரதமாதாவின் தவப்புதல்வர்களில் தலை சிறந்தவரும், இந்தியாவின் புனருத்தாரணத்துக்கு அடிகோலியவருமாகிய லோகமான்ய பால கங்காதர திலகர் சரஸ்வதிக்கு 'கீர்த்தன படு' என்ற உயரியபட்டத்தை அளித்தார். சிறந்த தேசபக்தரும், தலைவரும், அறிவாளியுமான திலகரின் ஆசீர்வாதத்தையும், அனுக்கிரஹத்தையும் பெறும் பாக்கியம் ஸ்ரீமதி சரஸ்வதி பாய்க்கு ஏற்பட்டது தெய்வத்தின் திருவுளமே.

இவ்விதம் வடநாடு, தென்நாடு எங்கும் இவரது பாண்டித்யமும், கீர்த்தியும் பரவிற்று. பல மஹாராஜாக்களும், ஜமீந்தார்களும், பிரபுக்களும் இவரது சங்கீதத்தின் மகிமையை மெச்சி இவருக்குக் கங்கணங்களும், தோடாக்களும், தங்கப்பதக்கங்களும் ஏதேஷ்டமாகக் கொடுத்துப் பாராட்டினார்கள். தன் இளவயதில் ஏற்பட்ட கீர்த்தியுடன் இன்றும் உயர்ந்த ஸ்தானத்திலேயே சரஸ்வதிபாய் இருந்து வருகிறார்.

இவரது அழியாப்புகழுக்குக் காரணம் இவர் சங்கீத சாஸ்திரத்தை நன்கு கற்று உணர்ந்து, தான் சொல்லும் விஷயங்களை மனமாற அனுபவித்துச் சொல்வதே. எல்லா பவங்களையும் அனுபவித்து சபையோரும் ரஸிக்கும்படி பாடிப் பேசுகிறார். இவரது சாரீரமும் கணீரென்றும், இனிமையாகவும், சுத்தமாகவும் இருக்கிறது. நவரஸங்களையும், வெகு திறமையாகவும், அழகாகவும் எடுத்துக் காட்டுவார். ஏதோ ஒரு சில கதைகளைத்தான் சிறப்பாகச் செய்ய முடியும், மற்றவைகளைக் கையாள முடியாதென்பது கிடையாது. இன்றும் சரஸ்வதிபாய் கச்சேரி என்றால் வெகு கூட்டம்தான். எவ்வளவு கூட்டமாய் இருந்த போதிலும் சபையில் நிச்சப்தமாய் இருக்கும். எல்லோரும் கவனமாய்க் கேட்பார்கள்.

இவ்வளவு பிரசித்தி பெற்ற சங்கீதரத்னம் இன்னும் பல வருஷங்கள் பாரத ஜோதியாய்ப் பிரகாசித்து பக்தகோடிகளையும், சங்கீதப் பிரியர்களையும் பரவசப் படுத்த வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கிறேன். ஸ்ரீமதி சரஸ்வதிபாய் பல்லாண்டு வாழ பராசக்தி அருள்புரிவாளாக.

# மாலதி :: :: மாதவன்

ஸ்ரீமதி எம். ஸி. சிங்காரம்மாள்

மாலதி அதிக விசனமாகக் காணப்பட்டாள். ஏன்? அவள் புருஷனான மாதவன் நடத்தையே அதற்குக் காரணம். பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்த அவ்வனிதை பெரிய பிரபுவான தினகரன் மகனை மணந்தும் இவ் விதம் துக்கிக்க காரணம் என்ன?

மாதவன் சிறியவனாக இருக்கும்போதே, மாலதி அவனுக்கு வாழ்க்கைப் பட்டாள். மாலதியின் தந்தை விநாயகர், தினகருடைய அத்யந்த நண்பராவர். ஆகையினால் அவர்கள் தங்கள் நட்பை இன்னும் விருத்தி செய்ய வேண்டுமென்று எண்ணினர்.

கலியாணம் செய்து, மாலதி பருவமடைந்து புருஷன் வீட்டுக்கு வந்த சில வருஷங்களுக்குள் தினகரரும், விநாயகரும் இவ்வுலகை நீத்தனர். மாதவன் சிறிய குழந்தையாயிருக்கும் போதே அவன் தாயார் பரகதியடைந்து விட்டதால், மாதவனை ஏன் என்று கேட்போரே கிடையாது போயிற்று.

எப்பொழுது கையில் பணம் சேர்ந்ததோ, அப்பொழுதே துஷ்ட ஸ்நேகிதர்கள் சேர்ந்தார்கள். அவர்களால் குடியும், வேசி நட்பும், இவனுக்கு கிடைத்தலாபம்.

தந்தையால் சேர்த்து வைத்த பணம் கொஞ்சம் கொஞ்சமாக குறையவாரம்பித்தது. 'குந்தித்தின்றால் மலையும் தரையாகும்' என்கிறபடி பணமில்லாத போது மாலதி நகைகள் ஒவ்வொன்றாக மார்வாடியின் வீடு சென்றன. சந்தோஷம் குடிகொண்டிருந்த வீட்டில் துக்கம் குடிகொள்ளவாரம்பித்தது.


திக்கற்ற மாலதி என்ன செய்வாள். மாதவன் தினந்தோறும் இரவு அதிக நேரம் கழித்து குடி வெறியோடு வீட்டுக்கு வந்து சேருவான். வந்தவுடன் மாலதிதான் அவனுக்குக் குறிப்பு. அவளை அடிப்பதும், உதைப்பதும், இன்னும் இரக்கமற்ற காரியங்களையும் செய்வான்.

அவன் சிநேகிதர்கள் அவள் இறந்தால் அவள் சொத்தும் அவனுக்கே சேருமென்று சொல்லியிருந்ததால் அதற்காக அவளை இன்னும் அதிகமாக இம்சிக்கவாரம்பித்தான். தவிர அவன் எண்ணம், அவளைப்படுத்தும் இம்சையை அவள் பொறுக்க முடியாமல் வீட்டை விட்டோ, அல்லது, கிணற்றிலோ, குட்டையிலோ, விழுந்து தன் பிராணனை விட்டு விட்டால் அவள் சொத்தும் தனக்கு சேருமென்பதே?

ஒரு நாள் மாதவன் அவளுக்குக் கத்தியைக் காண்பித்து, குத்திவிடுவேன் என்று பயப்படுத்தி அவளிடம் தனக்குப்பிறகு தன் சொத்து பூராவும் தன் பர்த்தாவுக்கே சேர வேண்டுமென்று உயிலும் எழுதி வாங்கிக் கொண்டான்.

அவள் உயிருக்குப் பயந்தவளல்ல. அக்குடி வெறியில் தன்னைக் குத்திக் கொன்று விட்டால் பிறகு தன் பர்த்தா தூக்கு மேடையில் நிற்க நேரிடுமே எனப் பயந்தாள்.

கடவுள் அக்கிரமங்களை எவ்வளவு பொறுப்பார். மாலதியின் கருணை பொழியும் ஸ்தோத்திரங்களும், நாமார்ச்சனையும் அவரது செவியில் விழாமலில்லை. இருந்தாலும் பூர்வ ஜன்ம வினைப்பயன் அனுபவித்துத் தானே ஆக வேண்டும்.



திருப்பதி வெங்கடாசலபதி கோவில் புஷ்கரணி.

Photo by Messrs G. K Vale & Co.



செம்படவன்



மாலதியிடம் அன்பான ஒரு வேலைக்காரி இருந்தாள். அவள் பெயர் விலோசனா. அவள் ஏழையாயினும் அழகில் சிறந்தவள். மேன்மையான குணம் வாய்ந்தவள். அவளையுங்கூட மாதவன் தன்னுடைய துர் இச்சைக்கு இணங்கும்படி நிர்பந்தப் படுத்தினான். ஆனால் அவள் புருஷனான புருஷோத்தமன் மேன்மையான குணம் படைத்தவன். விலோசனாவை அந்த வீட்டில் ஒரு கணமும் விட்டிருக்கமாட்டான். விலோசனா தன் அன்பான சகோதரியைப் போல் பாவிக்கும் மாலதியை விட்டு வந்து விட்டால் திக்கற்ற மாலதியின் கஷ்டங்கள் இன்னுமதிகரிக்கும். மாலதி உயிர் விட்டுவிடுவாளோ வென்றும் பயந்தாள். இக்காரணங்களால் புருஷோத்தமன் விலோசனாவின் இஷ்டப்படி விட்டு அவள் கேட்டுக் கொண்டபடி மாதவன் பேரிலும் ஒரு கண் வைத்தான்.

மாதவனை எப்படியாவது இக்கெட்ட வழியிலிருந்து அகற்றி நல்வழிக்குக் கொண்டு வருவது என்று எண்ணினான். அது எப்படி ?

ஒரு நாள் மாதவனுக்கு வரும் அநேக கடிதங்களில், ஒன்று அவன் அதிகம் கவனிக்க வேண்டியதாயிருந்தது. அதில் என்ன எழுதியிருந்ததென்றால்.

அன்புள்ள ஐயா,

தாங்கள் வீட்டில் எப்பொழுதும் தங்காமலும், இரவு வீட்டிற்கு அதிக நேரம் கழித்து வருவதனாலும் வீட்டில் நடப்பதொன்றும் உங்களுக்குத் தெரிவதில்லை. உங்கள் மனைவிக்கு ஒரு கள்ளக் காதலன் இருக்கிறான். நீங்கள் இன்று இரவு பத்து மணிக்கே வீடு திரும்பினால் இருவரையும் பிடித்து விடலாம். ஆனால் ஒன்று. இக்கடிதம் வந்ததாக வெளியில் காண்பித்துக்கொண்டால், பிரபு குலத்தில் சேர்ந்த உங்களுக்கு அவமானம் ஏற்படும். அவர்களும் எச்சரிக்கை யடைய நேரிடும். இதை மறக்காதீர்கள். தங்கள் மேன்மையைக் கோரும்,

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள,
தீனபந்து.

மாதவன் பல்லை நறநற வென்று கடித்தான். தான் கண்ட பெண்களிடம் சென்று நேசம் பாராட்டுவது தப்பு என்று தோன்றவில்லை. தன் மனைவி, தன்னால் பலவாறு இம்சிக்கப் பட்ட மனைவி, வேறு அன்னியக் கள்ளக் காதலனோடு இருந்தால் அது அவனுக்குப் பொறுக்குமா ? பெண்கள், அவர்கள் புருஷர்கள் எவ்வளவு இம்சித்தாலும், அவனையே தெய்வமாக நினைத்து அவர்கள் செய்யும் கொடுமைகளை யெல்லாம் சஹித்துக்கொண்டிருக்கவேண்டும். தவிர அவர்கள் புருஷர்கள் தன் சொந்த மனைவியை புறக்கணித்து, அயல் பெண்களனேகரிடம் சென்றாலும் குற்றமில்லை. இதுதான் தர்மசாஸ்திரம் போலும்!

மாதவனுக்கு அன்று கிளப்பிலும், வேசி வீடுகளிலும், சந்தோஷமாய் முன்போல் இருக்க முடியவில்லை. அவன் மனதில் பொறாமைப் பேய் குடிகொண்டது. அதிகமாக அவனால் குடிக்கவும் முடியவில்லை.

தன் மனைவியின் கள்ளக் காதலனைக் கண்டு பிடிக்க வெண்ணி இரவு ஒன்பது மணிக்கே வீட்டை அடைந்தான். என்ன ஆச்சரியம்! வீடு காலியாயிருந்தது. ஒருவரையும் காணவில்லை. மிச்சமிருந்த நகைகள், ரொக்கப் பணம், ஒன்றும் இல்லை. ஓட்டாண்டியாக நின்றான். தான் அவளிடமிருந்து பயமுறுத்தி பிடுங்கிக்கொண்ட உயிலாவது இருக்கிறதா? என்று பார்த்தான். ஆனால் அதுவும் காணவில்லை.

மாலதி தன்னை வைத்து விட்டது அப்பொழுது தான் அவனுக்கு மனதில் முன் போல் தைத்தது. தன்னால் இம்சிக்கப்பட்ட

அவள் வேறுயாருடனோ ஓடிவிட்டாள் என்று எண்ணி எரிச்சல் கொண்டான். தனக்குக் கடிதம் எழுதியவன் கொஞ்சநாள் முன்பாகவே இவ்விஷயத்தைத் தெரிவித்திருந்தால், தான் ஜாக்கிரதையாக இருந்திருக்கலாமே, என்று எண்ணினான். எப்படியாவது மாலதியைக் கண்டுப் பிடிப்பது என்று தீர்மானித்தான்.

கையில் பணமில்லாமல் என்ன செய்வது? தன்னை அட்டைபோல் சூழ்ந்திருந்த நண்பர்களனைவரும் நீங்கினார்கள். அவர்கள் இவனைக் கண்டாலே தங்கள் முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொள்வார்கள். ஏன்? இவனிடம் பணமில்லையென்று கண்டு கொண்டதே. பிரிய வசனங்கள் பேசி மகிழ்வித்த வேசிகளும் புறக்கணித்தனர். ஒருவராவது இவனுடன் பேசி ஒத்தாசை செய்ய முன் வரவில்லை. ஒரு வேளைச் சோற்றுக்கும் திண்டாடினான்.

இப்பொழுதுதான் தன் அக்கிரமங்கள் ஒவ்வொன்றாக அவன் கண்ணின் முன் தோன்ற வாரம்பித்தன. விளையாட்டுப் பருவமுதல் விளையாடிக்கொண்டிருந்த மாலதிக்குச் செய்த கொடுமைகள் அவன் மனதைக் கூறிய முட்களால் தைத்ததுபோல் தைத்தன. தான் அவளைப்படுத்திய ஒவ்வொரு காட்சியும் அவன் அகக்கண்ணில் தோன்றின.

மாலதியின் இருப்பிடத்தை எவ்விதமாவது கண்டறிந்து, அவள் பாதத்தில் விழுந்து அவளுக்குத் தான் செய்த கொடுமைகளை யெல்லாம் மன்னிக்கும்படி வேண்டி பிறகு தன் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தன்னால் மாலதிக்கு இனி சுகம் கெடக்கூடாது என்றும் எண்ணினான்.

மாலதியைக்கண்டு பிடிக்க மாதவன் இரவும், பகலும் அலைந்து கொண்டிருந்தான்.

இவன் தூங்கும் சமயத்தில் இவன் கையில் நான்கு அணா, எட்டு அணா, இருக்கக் காண்பான். தன்னிடம் அந்த அணாக்கள் எப்படி வந்தன என்பதை அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை. கடவுள் தான் யாரையோ கொண்டு தான் ஜீவித்திருக்க அப்படி சேர்ப்பிக்கிறார் என்று எண்ணினான். ஏனென்றால் அவனுக்குப் பிச்சை எடுக்கத் தெரியாது. அதனால் அப்பணத்தைக் கொண்டு ஜீவிக்கலானான். கடவுளை மனமார வாழ்த்தலானான். தான் சாவதற்கு முன் எவ்விதமாவது மாலதியைக்கண்டு மன்னிப்புகேட்டு சாவது என்று உறுதிகொண்டான்.

இவ்விதமாக ஒருமாதம் கழிந்த பிறகு, ஒரு நாள், அவன் சட்டைப் பையில் ஒரு கடிதமும், ஒரு ரூபாயு மிருக்கக் கண்டான். அக்கடிதத்தை மிகவும் ஆவலாகப் படித்தான். அதில் பின் வருமாறு வரைந்திருந்தது.

பிரியமுள்ள ஐயா—

நான் தான், உங்களுக்கு இதற்குமுன் கடிதம் எழுதியது. நான் எழுதியதை எப்படியோ தெரிந்துகொண்டு அவர்கள் திடீரென்று மாயமாய் சென்று விட்டார்கள். அவர்கள் இருப்பிடத்தை நானும் உங்களைப் போலேவே தேடினேன். கண்டு பிடித்து விட்டேன்.

நான் உங்கள் தகப்பனாரிடமிருந்து முன்னுக்கு வந்ததால், எனக்கு உங்களிடம் உண்மையான விசுவாஸம் ஏற்பட்டு விட்டது. ஆனால் நீங்கள் பணச்செறுக்கால், அதிக சௌந்தர்யவதியான மாலதியைக் கவனிக்காமல், கெட்ட சிநேகிதர்களுடன் சேர்ந்து, வேசி நட்புக் கொண்டு பணத்தை அழித்ததால் இக்கதிக்காளானீர். உங்கள் அன்புள்ள சிநேகிதர்களும், அன்புள்ள வேசிகளும் இப்பொழுது எங்கு சென்றனர்? இப்பொழுது நான்தான் உங்களுக்கு 4 அணா, 8 அணா உங்களுக்கும் தெரியாமல் கொடுத்து வருகிறேன். நேரில் என்னை உங்களுக்கு காண்பித்துக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. ஏனென்றால் நீங்கள் துஷ்





டர், வேசிபிரியர், குடியர், காலணா சம்பாதிக்க வக்கில்லாதவர். இருந்தாலும் மாலதியைப் பார்க்க விரும்புவீரென்று எண்ணுகிறேன். ஆனால் அவளுக்கு ஒரு தீங்கும் செய்யாமலிருக்க வேண்டும். இப்பொழுதாவது உங்களுக்கு புத்தி வந்திருக்குமென்று நம்புகிறேன். இன்று இரவு ஏழு மணிக்கு மேலைத் தெருவு 17-வது நம்பர் வீட்டுக்கு வந்தால் அங்கு மாலதியையும், அவள் காதலனையும் காண்பீர்கள். அவர்களுக்கு ஏதாவது கெடுதல் செய்ய நினைத்தாலும், என்னால் தண்டிக்கப் படுவீர்கள். நானும் உங்களை அவ்விடத்தில் காண்பேன். நீங்கள் வருவது அவளுக்குத் தெரியக்கூடாது. ஏனென்றால் நீங்கள் இன்னும் வேசி வீட்டிலிருப்பதாகவே அவள் நினைத்து இருக்கிறாள். இனியாவது அவள் சுகத்தைக் கெடுக்காதீர்கள் உண்மையாக அவள் பேரில் உங்களுக்கு அன்பிருக்கும் பட்சத்தில்.

இப்படிக்கு

தங்கள் அன்புள்ள,

தீனபந்து.

இக்கடிதத்தைக் கண்டவுடன், மாதவனுக்கு சந்தோஷம் ஒரு பக்கமும் துக்கம் ஒரு பக்கமும் ஒருங்கே சேர்ந்தது. தீனபந்து யார் என்று அவனுக்குத் தெரியவில்லை. "என் மனைவியான மாலதி அன்னிய புருஷனுடன் இருப்பதை நான் காண்பதா? ஆம், ஆம். நான் வேசியிடம் செல்லும் போதெல்லாம் அவள் வேண்டாம், வேண்டாம் என்று கெஞ்சித் தடுத்த போதெல்லாம் அவளுக்கு எவ்வளவு உதை, அடி கொடுத்து என்ன ஹிம்சைகள் செய்தேன். இரும்புக் கம்பியினாலும் சூடிட்டேன். எனக்காக எவ்வளவு காலம் இவ்வித ஹிம்சைகளை பொறுத்தாள்! என் நடத்தையினால் தான் நான் இக்கதிக்கு வந்தது. ஹா! நான் மாத்திரம் வேசி நட்பும், சண்டாள ஸ்நேகிதர்கள் நட்பும், குடிப்பதும் செய்யாத பட்சத்தில் என் கண்ணிருமணிகளை யொத்த மாலதியுடன் எவ்வளவு உல்லாசமாக வாழ்ந்திருப்பேன்! மாலதியை கடைசியாகப் பார்த்து விட்டு, அவள் சந்தோஷமாக இருக்கும்போதே என் ஆயுளை முடிக்கிறேன். என்னை மன்னிக்கும்படி ஒரு கடிதமும் எழுதிவிடுகிறேன்.

... ... ...

"என் மாலதியுடன் இருந்த அந்த காதலன் யார்? மிகவும் அழகாக இருந்தானே! அவனை எங்கேயோ பார்த்தாப் போலிருக்கிறதே! கவனம் வரவில்லையே! ஆம், ஆம், இப்பொழுது கவனத்திற்கு வந்தது. மாலதியின் வேலைக்காரி, விலோசனை போலிருந்தான். ஒருக்கால் விலோசனாவின் சகோதரனாக இருக்கலாமா? மாலதி மிகுந்த கட்டழகி. விலோசனாவை விட மாலதியே அழகு. இவள் அழகுக்கு முன் வேசியின் அழகு எம்மாத்திரம். இதுகாறும் தெரியாமல் நரகத்திற் காளாக்கும் அப்படுகுழியில் மூழ்கிக் கிடந்தேனே. நான் பரம சண்டாளன். பரம துஷ்டன்.

கடவுள் என் பாவச் செய்கைக்குத் தகுந்த பலனைத்தான் அளித்தார். அந்த தீனபந்து என்பவன் எங்கே? அவ்விடத்தில் அவனைக் காணவில்லை? மாலதி ஏனோ ஒரு மாதிரி இருந்தாள். தீனபந்து சொல்லியது போல் அவள் முகத்தில் சந்தோஷம் காணவில்லையே? என் கடிதம் இதற்குள் போய்ச் சேர்ந்திருக்கும். பக்தவத்ஸலா! பரந்தாமா! என்னை மன்னிப்பாய். நான் இப்பூமிக்கு பாரமாக இனி ஒரு கணமும் இருக்கவேண்டாம். ஏ! மாலதீ!"

... ... ...

"என்ன? நான் காண்பது கனவா? நான் எப்படி இங்கு வந்தேன்? சமுத்திரத்தில் அல்லவோ விழுந்தேன். யார் பக்கத்தில் நிற்பது? மாலதியா? ஹா! மாலதி. என்னை ஏன் இங்கு கொண்டு வந்தாய். நீ உன்—சௌக்கியமாயிருக்காமல், என்னை யார் இங்கே கொண்டு

வந்தது. விலோசனுவும், புருஷோத்தமனுமா எதிரில் நிற்பவர்கள்? உன் அன்பைக் கொள்ளைகொண்டு சென்ற புருஷன் எங்கே? மாலதி! என்னை விட்டு விடு. நான் உன் புருஷனுக விருக்க யோக்யதை யற்றவன். வேண்டும் எனக்கு தண்டனை. நான் காண்பது கனவா? நனவா? அல்லது மாயமோ! எமதர்மராஜ பட்டணமோ! அல்லது மாயாபுரியோ'' என்று மாதவன் சொன்னுன்.

மாலதி ''நாதா! நீங்கள் பார்ப்பது எல்லாம் உண்மையே! பதிவிரதைகளுக்குத் தங்கள் புருஷர்களைவிட வேறு தெய்வ முண்டோ. தங்களை நல்ல வழிக்குத் திருப்பவே நாங்கள் இந்த நாடகத்தைப் பலநாள் நடித்தோம். புருஷோத்தமனே தீனபந்துவாக உங்களுக்குக் கடிதம் எழுதி, தினந்தோறும் உங்களுக்குப் பணம் கொடுத்து உதவி வந்தது. விலோசனுவான இவ்வழகு மிகுந்த பெண்மணிதான் நீங்கள் வந்த சமயத்தில் என் கள்ளக் காதலனுக நடித்தவள். உங்களுக்கு புத்திவர வேண்டுமென்றே ஒரு மாதம் உங்களை கஷ்டப் படுத்தியது. அதற்காக தாங்கள் மன்னித்து விடுங்கள். தெய்வமும் என்னை மன்னிக்கட்டும்.

தங்களால் வெறுக்கப்பட்ட நான் என் உயிரையாவது விடுவேனே யொழிய, என் மானத்தை, உயிரினுமறிய பொருளாய்க் காப்பாற்றி வருகிறேன். நம் தர்ம சாஸ்திரத்தில் பெண்கள் கெட்டு விடாமலிருக்கும்படி சொல்லி, பதிவிரதையாக விருக்கும்படி கூறியிருக்கிறது. புருஷர்களுக்கு இவ்வித கட்டாயத்தைக் காணேம். ஒரு பெண் தன் பர்த்தாவிடம் விசுவாஸமும், ப்ரீதியும், பக்தியும் வைத்து இருக்கிறுப்போல், புருஷனும் அவன் மனைவியிடம் அன்பு வைக்கும் பட்சத்தில் அந்த தாம்பத்தியம் சுவர்க்க வாசிகளின் சுகத்துக்கும் மிஞ்சியதே யாகும். ஆனல் ஐயோ! அப்படியில்லையே? புருஷனே கதியென்றெண்ணி, தன் தாய், தந்தை, சகோதர, சகோதரிகளையெல்லாம் விட்டுப் பிரிந்து தன் பர்த்தாவையடைந்தால் அவர்களுக்குப் புருஷனிடம் கிடைக்கும் வெகுமதி (சுகம்) என்ன! அநேகமாக உதையும் அடியும், இன்னும் அநேக ஹிம்சைகளுந்தான்.

நற்குலத்திலுதித்த பெண்மணிகளாயின் அவர்கள் தங்கள் பதிவிருதா தர்மத்தைக் காப்பாற்ற எவ்வித கொடுமைகளையும் மிகப் பொறுமையுடன் சஹித்துக்கொள்வார். ஆனல் சிலர் இவ்வித ஹிம்சைகளை சஹிக்க முடியாமல், யாருடனுவது ஓடிவிட்டாலும் சரி, தாயார் வீட்டில் போய்ச் சேர்ந்தாலும் சரி, அவர்களுக்குக் கெட்டப் பெயரே! பெண் ஜன்மம் எடுப்பதே பாவம். மாமியார் வீடு மேன்மையாக (குணங்களில்) கிடைத்தால் பிழைக்கலாம். அவள் மிகுந்த புண்யசாலியே! பெண்களுக்கு மறுமணமுண்டோ? புருஷர்களுக்கு எத்தனை மணம் வேண்டுமானுலும் செய்யலாம். அதைப் பற்றி கேழ்க்க வேண்டியதே யில்லை.

நான் தங்களை ஒரு மாதகாலமாய் கஷ்டப் படுத்தியதிற்கு தாங்கள் எனக்குத் தகுந்த தண்டனை விதியுங்கள்.

என்னை மன்னித்து இனி மேலாவது மிச்சமிருக்கும் பணத்தை வைத்துக்கொண்டு சந்தோஷமாயிருங்கள்.

உங்களுக்கு வேசி நட்பும், துஷ்ட சிநேகிதர்களும், கடவுளால் அனுப்பபட்ட சோதனையே! இனிமேலாவது க்ஷேமமாய் இருப்பீர்களென்று நம்புகிறேன்'' என்று தலை வணக்கத்தோடு மொழிந்தாள்.

மாதவன்: (கண்ணீர் பெருகியவாறு தழதழத்த குரலுடன்) மாலதீ! உன்னை நானு மன்னிப்பது? இப்படிப்பட்ட மாணிக்கத்தை மனைவியாய் அடைந்தும், பாவி உன்னைப் பலவாறு ஹிம்சித்தேன். என் பூர்வஜன்ம புண்ணியத்தால் உன்னை யடையப்பெற்றேன். தவிர உன்னுலேயே இன் நல்வழிக்குத் திரும்பினேன்.





என் ஜன்மம் சாபல்யமாயிற்று. இதற்கு நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? சமுத்திரத்தில் விழுந்த என்னைக் காப்பாற்றினுயே! எனக்கு உயிர்தந்துதவிய கற்பரசியல்லவா நீ? ஹே! மாலதீ! உன்னை எவ்விதம் கொண்டாடுவது என்று எனக்குப் புலப்படவில்லை. (புருஷோத்தமனையும், விலோசனுவையும் பார்த்து) உங்கள் நன்றியறிதலை ஏழேழு ஜன்மத்துக்கும் மறக்கமாட்டேன். இனி நீங்கள் என் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள். இது உண்மையான வார்த்தை.

மாலதீ! நீ என்னை ஒரு மாதம் படுத்திய கஷ்டத்திற்கு பதில் வெகுமதி இந்தா வாங்கிக்கொள். விலோசனு, புருஷோத்தமா? கண்ணை சற்று மூடிக் கொள்ளுங்கள். (முத்தம் கொடுக்கிற சத்தம் கேட்கிறது.)

... ... ...

மாலதிக்கு அடுத்த வருடத்தில் சுவர்ண விக்கிரஹம் போல் (கடவுளருளால்) ஒரு பிள்ளைக் குழந்தையும், அதற்கடுத்த வருஷத்தில் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. அவைகளுக்கு, தங்கள் சந்தோஷத்திற்கு காரணமாயிருந்த புருஷோத்தமன், விலோசனுவின் பெயரிட்டழைத்தனர்.

விலோசனுவுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு தீனபந்து என்று பெயர் வைக்கும்படி மாதவன் வற்புறுத்தியதால் அப்பெயரே சூட்டப்பட்டது.

தற்சமயம் அன்னுன்கு பெயர்களும், நம் தாய்நாட்டிற்காக உழைத்து வருகிறுர்கள்.

மாதவன், எங்காவது சகோதரிகளை யொத்த பெண்கள் தங்கள் கணவனுல் இவ்விதம் துன்பப்படுத்தப்பட்டால் அவர்கள் புருஷர்களுக்குத்தன் கதையைக் கூறி அவர்களை நல்வழிப் படுத்தி அப்பெண்களின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வான்.

மாதவன், ஒருநாள் ஒரு பிரசங்கத்தில் பின் வருமாறு பேசினுன்.

சகோதர, சகோதரிகளே!

உங்கள் மனைவிகளை அன்போடும், தெய்வத் தன்மை பொருந்திய வாத்ஸல்யத்தோடும் நடத்துங்கள். உங்கள் அன்பான சகோதரியைப் போலவும் பாவியுங்கள். உங்கள் மனைவிமார்கள் உங்களுக்காக தங்கள் தேகத்தை சமர்ப்பித்து உங்களையே சரணமென்றடைந்து, தாய் தந்தை, சகோதர சகோதரிகள் உற்றுர் அனைவரையுந்துறந்து அப்பொழுது புதிதாக மணந்த புருஷனை தெய்வமாக பாவித்து வருகிறுர்களே! அவர்களை மேன்மையாக நடத்துங்கள். உங்கள் ஆசையைத் தீர்க்கும் கருவி யென்று எண்ணுதீர்கள். வீட்டில் லட்சணமான மனைவியிருக்க, அவளைப் புறக்கணித்து, அல்ப சுகமானதும், அபவித்திரமானதும், நெடுங்காலம் வாழும், ஆயுளை வெகு சீக்கிரத்தில் அழிக்கக் கூடியதும், இவ்வுலகில் பலவித ரோயால் துன்புற்று இம்சைப்படுவதும், பெரும் தனக் குவியலை, இருந்த இடம் தெரியாமல் கொள்ளையடிப்பதுமான வேசி நட்பை நாடாதீர்கள். வேசி மக்களின் நேசத்தால் உங்கள் மனைவி, மக்களை பரிதவிக்க விட்டு மரண மடையாதீர்கள். நல்வழியில் சென்று நன்மார்க்கத்தை அடைந்து வாழுங்கள்.

சுபகோஷம்!

# செய்தித்திரட்டு

## ஸ்திரீகள் மஹாநாடுகள்

அகில இந்திய ஸ்திரீகள் சம்மேளனத்தின் பல கிளைகளின் வருஷாந்திரக் கூட்டங்கள் நவம்பர் மாதம் முதலிருவாரங்களிலும் பல இடங்களில் கூடி ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்கான பல தீர்மானங்களை நிறைவேற்றின. அதன் சுருக்கம் வருமாறு:—

1. சென்னை ஸ்திரீகள் சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டம் ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதியின் அக்கிராசனத்தின் கீழ் நவம்பர்மீ 3௳ கூடியது. பிரபலஸ்திரீகள் அதில் கலந்து கொண்டனர்.

2. திருவனந்தபுரம் கிளையின் கூட்டம் நடைபெற்றது. நவம்பர்மீ 3௳ ஸ்ரீமதி ஸி. பி. ஸ்க்ரைன் தலைமை வகித்தார். ஸ்ரீமதி ஆர். கிருஷ்ணபிள்ளை வரவேற்புப்பிரசங்கம் செய்தார்.

3. ஆக்ராத்தொகுதியின் மாதர் கூட்டம் நவம்பர்மீ 5௳ ஆக்ராவில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், ஐக்கிய மாகாண கல்வி மந்திரியின் தலைமையில் கூடியது. நூற்றுக்கணக்கான மாதர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

4. அனந்தபூர் ஜில்லா மாதர்களின் தொகுதி மஹாநாடு நவம்பர்மீ 6௳ ஸ்ரீமதி கே. கோட்டி ரெட்டியின் தலைமையில் அனந்தபூரில் கூடியது. ஏராளமான ஸ்திரீகள் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமதி வி. வி. கிரி மகாநாட்டைத் திறந்து வைத்தார். ஸ்ரீமதி ஸி. சத்யநாராயணா சௌதரி வரவேற்பு பிரசங்கம் செய்தார்.

5. கொச்சிசமஸ்தான ஸ்திரீகள் மஹாநாடு நவம்பர்மீ 6௳ ஸ்ரீமதி ஸி. மங்கள தேவியின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. ஸ்ரீமதி ஏ. வேலாயுதமேனன் வரவேற்பு சங்கத் தலைவராயிருந்தார்.

6. கீழகோதாவரி ஜில்லா ஸ்திரீகள் மஹாநாடு நவம்பர்மீ 7௳ ராஜமஹேந்திரபுரத்தில் உபயபாஷா பிரவீண ஸ்ரீமதி எம். வி. தாயாரம்மாள் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சுமார் 400 ஸ்திரீகள் ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் கூடி இருந்தனர். உபயபாஷாபிரவீண ஸ்ரீமதி யு. லக்ஷ்மி காந்தம்மா வரவேற்பு பிரசங்கம் செய்தார். ஸ்ரீமதி எம். புஷ்கரம்மா திறப்புவிழா நடத்திவைத்தார்.

7. தார்வாரில் கர்னாடக மாதர்கள் மஹாநாடு நவம்பர்மீ 8௳ ஸ்ரீமதி கமலம்மாள் எச். தாசப்பாவின் தலைமையில் கூடியது. நடவடிக்கைகளில் ஸ்திரீகள் காட்டிய உற்சாகமும் ஊக்கமும் போற்றத்தக்கது.

8. அகில இந்தியா மாதர் மஹாசபையின் கராச்சிக் கிளையின் வருஷாந்திர விழா நவம்பர் மாதம் 8ந்தேதி கராச்சி நகரில் ஸ்ரீமதி ஹரதேவிபாயின் தலைமையில் கூடியது.

9. பெஜவாடாவில் நவம்பர் 8ந்தேதி கிருஷ்ணா ஜில்லாக் கிளைச் சபையின் மகாநாடு இந்திய ஸ்திரீகள் சங்க கட்டிடத்தில் ஸ்ரீமதி கந்தம் அம்மண்ணராஜா, எம். எல். ஏ.யின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது.

10. காக்கிநாடா தாலுக்கா ஸ்திரீகள் வருஷாந்திர மஹாநாடு அவ்வூரில் நவம்பர் மாதம் 9ந்தேதி ஸ்ரீமதி வி. என். குடுவா அவர்களின் தலைமையில் கூடியது.

11. கல்கத்தா நகர ஸ்திரீகள் சபையின் வருஷாந்திரவிழா நவம்பர் 9௳ ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவின் தலைமையில் கூடியது.

12. ஆந்திரதேச மாதர் மஹாசபையின் பத்தாம் ஆண்டு விழாக்கூட்டம் சித்தூரில் ஸ்ரீமதி எஸ். பி. சாவித்திரி அம்மாளின் தலைமையில் கூடியது. பல பிரபல மாதர் தலைவர்கள் கூட்டத்துக்கு விஜயஞ் செய்திருந்தனர்.

13. மத்திய பஞ்சாப் கிளையின் கூட்டம் நவம்பர் மாதம் 13ந்தேதி லாகூரில் ஸ்ரீமதி எல். ஆர். ஸட்ஷியின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது.

வேறு பல பாகங்களிலும் அவ்வக்கிளைகள் கூடி, டிசம்பர் மாதம் கூடப்போகும் அகில இந்திய மாதர் மஹாநாட்டுக்குப் பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

... ... ...

## ஆரஞ்சுப் பழம்

அகில இந்திய விவசாய ஆராய்ச்சி சபையார் (Imperial Council of Agricultural Research) நாகபுரி ஆரஞ்சுப் பழங்களைக் கெட்டுப்போகாமலும், அழுகி விடாமலும் வைத்திருக்க எக்ஸ்ரேயை உபயோகப்படுத்தினால் அவைகள் இரண்டு மாதங்களுக்குமேல் இருக்கும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். பழங்களை 40, 45 டிகிரிக் குட்பட்ட சீதோஷ்ண ஸ்திதியில் வைத்திருந்தால் 70 நாட்கள் வரை அழுகாமலிருக்கும்.

... ... ...

## சீனப் பெண்கள் விலை பத்து பவுன்

பிரிட்டிஷ் மலேயாவில் சீன மங்கையர்களைச் சிலர் பத்துப் பவுன் வீதம் விற்று வருகிறார்களாம். இந்தப் "பெண் வியாபாரத்தை"த்தடுக்க சர்க்கார், தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். ஒருவனுக்கு ஒன்பது மாத கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சுமப்பித்தர்களான சில பணக்காரர்கள் 100 பவுன் கொடுத்துக்கூட இப்பெண்களை வாங்கிக் கொள்கிறார்கள்.

... ... ...

## மறுபடியும் கோஷா

மத்திய ஆசியாவில் சோவியத்து ரஷியாவின் ஆதிகத்திலிருக்கும் டாஜிகிஸ்டான் மாகாணத்தில் புருஷர்கள் தங்கள் மனைவிகளை பொதுவுடைமைக்கொள்கைக்கு விரோதமாக மறுபடி கோஷா அனுஷ்டிக்கும்படி வற்புறுத்தித் துன்புறுத்துகிறார்களாம். இங்கு ஆப்கானியர் அதிகமாம். அதன் பிரதமந்திரியும் அப்துல்லா ரகிம் பேவ் என்ற மகமதியர். பெண்பாவம் பொல்லாதது.

... ... ...

## விதவா விவாஹத்துக்கு பண உதவி

பரிட்கோட் சமஸ்தானதிபதி விதவா விவாஹம் நல்லதென்றும், விதவா விவாஹம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு சர்க்கார் ஐம்பது ரூபாய் நன்கொடை அளிப்பார்கள் என்றும் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

## ஒரே தடவையில் ஆறு கன்றுகள்

வர்ஜீனியா மாகாணத்தில் க்ளாக்ஸ்பர்க் என்ற கிராமத்தில் ஒரு விவசாயியின் பசு ஒரே இரவில் நல்ல வளர்ச்சியுடைய ஆறு கன்றுகளை ஈன்றது. அவைகள் பூரண வளர்ச்சி பெற்றவைகளாக இருக்கின்றன. 6 கன்றுகள் ஒரே சமயத்தில் ஈன்ற பசு இது ஒன்றுதான்.

... ... ...

## வண்ணாத்திப்பூச்சி பந்தயம்

லண்டனில் தற்சமயம் உயர் குலப் பெண்கள் "வண்ணாத்திப் பூச்சி பந்தயம்" வைத்து விளையாடுகிறார்கள். தங்கள் முழங்காலுக்கு மேலே பட்டுப்போன்ற கருப்பு வண்ணாத்திப் பூச்சியை கட்டிவிடுகிறார்கள். தாங்கள் வெளியில் இவ்வளவு தூரம் செல்வதற்குள் இத்தனை ஆண்கள், இத்தனை பெண்கள் அதைப்பற்றிக் கேட்பார்கள் என்பதே பந்தயப் பிரச்சினை.

... ... ...

## தாயைவிட குழந்தை ஒரு 'கிளாஸ்' மேல்

மிஸஸ் மார்கி சாகிலியனி என்ற 28 வயது மாதும், அவளது குழந்தை மேபெல்லும் படிக்கிறார்கள். ஆறுவயது மேபெல் இரண்டாம் வகுப்பு. மார்கி இப்பொழுதுதான் முதல் வகுப்பில் சேர்ந்திருக்கிறாள்.

## 42 நாள் பனிக்கட்டி சமாதி

லீடன் யுனிவர்ஸிடியைச் சேர்ந்த புரொபஸர் பீடர் டிலேர்பல் என்பவர் மனிதரின் தேகத்தில் புத்துயிரும், புதிய சக்தியும் உண்டாக்க "பனிக்கட்டி சமாதி" நல்லது என்று கண்டுபிடித்திருக்கிறார். இப்படி பனிக்கட்டி சமாதியில் ஒரு ஜீவனை வைப்பதற்குள் அதற்கு பல வித ஔஷத இஞ்செக்ஷன் செய்கிறார். சமீபத்தில் மிஸ் அன்னாப்ரூக் என்ற மங்கை இந்த பரீட்சையினாலும், சிகிச்சையினாலும் தன் உடல் நலம்பெற்றாள். அந்த சிகிச்சை பெறுமுன் அவள் பலஹீனமாக நடக்கக்கூட சக்தியற்றிருந்தாள். அதற்கு பின் நல்ல திடதேகாரோக்கியத்துடன் விளங்குகிறாள். 10 வருஷங்கள்கூட உயிர் போகாமல் இந்த சிகிச்சையை ஜீவன்களுக்குக் கொடுக்கலாம் என்று லேம்பல் சொல்லுகிறார்.

... ... ...

## பத்து வருஷ தூக்கம்

மஸ்ஸசூஸெட்சைச் சேர்ந்த ஹெலன் புச்யனான் என்ற இருபத்தாறு வயது மங்கை அவள் பதினாறு வயதாயிருக்கும் போது ஒரு பஸ்ஸால் மோதப்பட்டுக் காயமடைந்தாள். அதுமுதல் அவள் பிரக்ஞை அற்றவளாய் 'தூக்கத்திலேயே' ஆழ்ந்துகிடக்கிறாள்.





## கல் மழை

ஐக்கிய மாகாணத்தில் இடாவா ஜில்லாவில் சில கிராமங்களில் ஒரு நூதன சம்பவம் சமீபத்தில் நடைபெற்றது. திடீரென்று ஒருநாள் மத்தியானம் ஆகாயத்தில் இடி இடிப்பதுபோன்ற முழக்கங்கள் உண்டாயின. மிகுந்த பிரகாசமுள்ள ஒரு நக்ஷத்திரம்போன்ற வஸ்து ஆகாயத்தில் வெகு துரிதமாகச் சென்றது. ஒரு கிராமத்தில் கல்மழை அச்சமயத்தில் பெய்தது.

... ... ...

## திருடர்கள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

போலந்தில் வார்ஸா நகரில் திருடர்கள் கூட்டுறவு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் 3000 பாலிஸிதார்கள் இருக்கிறார்கள். ஒழுங்காக பிரீமியம் கட்டி வருகிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டால் கம்பெனியார் வழக்கை நடத்துவார்கள். தண்டிக்கப்பட்டால் அந்த பாலிஸிதார்களுக்குக் கம்பெனி சிறையில் தனி சௌகரியங்கள் செய்து கொடுக்கின்றது.

... ... ...

## நாகக்கொடை

நோவகாலிக்குச் சமீபத்திலுள்ள ஹஜிர்பரத்தில் ரேவதிகாந்த சர்மாவின் 4 மாதக் குழந்தையின் தலைக்குமேல் ஒரு பெரிய நாகம் தன் படத்தை விரித்துக் குடையாகப் பிடித்துக் கொண்டிருப்பதை அவர் மனைவி சில தினங்கள் கண்டாள். அந் நாகம் குழந்தை யருகில் யாரும் இல்லாத சமயமே வருகிறது. ஒருநாள் அந்த நாகத்தைக் கொன்றுவிட்டனர். குழந்தையும், அதன் தாயும் நந்தன்பூருக்குச் சென்றார்கள். அங்கும் அக்குழந்தைக்கு ஹஜிர்பரத்தில் நடந்ததேபோல் ஒரு நாகம் குடை பிடிக்கிறது. ஆதிசேஷன் நாராயண அம்சத்தைக் காப்பாற்றுகின்றான் போலும்!

... ... ...

## 10 வயது பயில்வான்

ஷாஜஹாபாத்தைச் சேர்ந்த போலா நாத் ஷர்மா என்ற யுவன் ஆச்சர்யப்படக்கூடிய பலாட்டிகனாக இருக்கிறான். அவன் சமீபத்தில் மூல்டான் டெபுடி கமிஷனர் முன் தன் திறமையைக் காண்பித்தான். உலோகத் தகடுகளை கையாலேயே முறித்து விடுகிறான். நல்ல வலுவுள்ள இரும்புக் கம்பியை வளைத்து விடுகிறான்; கண்ணாடித் துண்டுகள் மேல் சயனிக்கிறான்; இருபது மணங்கு எடை கருங்கல்லை தன் மார்பில் வைத்து உடைத்துக் கொள்ளுகிறான். கலியுக அபிமன்பு போலும்!

... ... ...

## ஒரு அவுன்ஸ் எடை மோட்டார்

ஒரு இத்தாலிய வாலிபன் ஒரு மின்சார மோட்டார் செய்திருக்கிறான். அது ஒரு விரலில் நிறுத்தக் கூடியது. அதில் 45 உலோக பாகங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு அவுன்ஸ் எடைக்கும் கொஞ்சமாகவே இருக்கிறது. ஆனால் அதன் வேகம் மிகக் குறைவு.

... ... ...

## பிறப்பிலேயே 15 பவுண்டு குழந்தை

போலந்தில் ஸ்டோடோலி என்ற கிராமத்தில் ஒரு குடியான மாது இரண்டரை அடி உயரமும், 15 பவுண்டு எடையும் உள்ள ஒரு குழந்தையைப் பெற்றாள். இக் குழந்தை சௌக்கியமாக இருக்கிறது. உலகத்திலேயே பிறந்தபொழுது இவ்வளவு பருமனும் உயரமும் உள்ள பிள்ளை இதுவரையில் பிறந்தது கிடையாது.

# *** கதம்பம் ***

## உள்ளம் உருகி 'உயிர் நீத்தாள்'

மிஸஸ் கோடார்ட் என்றமாது மின்சார ரயில்பாதையில் விழுந்து உயிர் துறந்தாள். அதற்குக் காரணம், அவள் தன் கணவனை விட்டுப்பிரிந்து 15 நாட்கள்வரை தனது பால்யகால சிநேகிதனுடன் வாழ்ந்து, திரும்பியும் தன் கணவனிடம் வந்தாள். புருஷன் அவளை மன்னித்துவிட்டான். ஆனால் அவள் மனச்சாட்சி அவளை அருத்துக்கொண்டே இருந்தது. தன் தாய் வீட்டுக்குச் சென்று ஒரு தடவை விஷமுண்டு தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தாள். பின்னர் ரயிலில் விழுந்து உயிர் துறந்தாள். மனச்சாட்சியின் சக்தி எவ்வளவு!

... ... ...

## புதல்வியைக் 'கொன்ற' தாய்

லண்டனில் எப்படி ஒரு தாய் அளவிடா அன்பு காரணமாய் தன் புத்திரியைக் கொன்றாள் என்ற விஷயம் வெளிவந்தது. மிஸஸ் அல்டாவால்ஷ் என்ற ஸ்திரீக்கு வயது எழுபது ஆய்விட்டது. அவளுக்கு நாற்பத்தோறு வயதுடைய கெர்ட்ரூட் அலிஸ் ஹாக் என்ற வியாதியஸ்த பெண் இருந்தாள். அவளுக்கு இருபது வயதிலேயே ஒருவித நோய் உண்டாகி சில மாதங்களாய் படுத்த படுக்கையிலேயே இருந்தாள். வால்ஷ் தன் புத்திரியை வெகு அன்புடனும் ஆதரவுடனும் போற்றி கவனித்து வந்தாள். ஆனால் வயதின் தள்ளாமையால் இனி தன்னால் தன் குமாரியை பாதுகாக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது. உடனே தன்னையும், தன் புதல்வியையும் க்ஷவரக் கத்தியினால் கொன்று கொண்டு மாண்டாள். தாயின் அன்பு விபரீதமாயிற்று!

... ... ...

## 17 வயது மங்கைக்கு 150,000 பவுன் விலை

டெவிக் நெஸிம் பாஷா என்பவர் மும்முறை எகிப்து பிரதம மந்திரியா இருந்தவர். வயது இப்பொழுது 64. வியன்னாவைச் சேர்ந்த மரியா என்ற 17 வயது மங்கையை மணக்க விரும்பினார். அதற்கு அவளும் இசைந்தாள். ஆனால் நெஸிம் பாஷாவின் 150,000 பவுன் பெறுமான சொத்துக்கள் அவர் மரணத்துக்குப்பின் மரியாவுக்கும் அவளது குழந்தைகளுக்கும் போய்ச் சேரவேண்டியது என்ற நிபந்தனை யேற்பட்டிருக்கிறது. "கிடக்கிற தெல்லாம் கிடக்கட்டும் கிழவனைத் தூக்கி மணையில்வை" என்ற பழமொழி ஞாபகம் வருகிறதா?

... ... ...

## பெண் விமானியின் தீரம்

நியூஜிலந்திய பெண் விமானியான மிஸ் ஜீன்பேட்டன் ஆஸ்திரேலியா—இங்கிலாந்து விமானப் பாய்ச்சலில் ஒரு புதிய ரிகார்டை ஏற்படுத்தி இருக்கிறாள். ஆஸ்திரேலியாவிலிருந்து இங்கிலாந்துக்கு 5 நாள், 18 மணி, 16 நிமிடங்களில் போய் சேர்ந்தார். இதற்குமுன் பிராட் பெண்ட் என்ற ஆஸ்திரேலிய விமானி 6 நாள், 8 மணி, 25 நிமிடங்களில் இதே பிரயாணத்தைச்செய்து முடித்தார். ஆணுக்குப் பெண் சளைத்தவளா?



## அமெரிக்க ஸ்திரீ தாதாக்கள்

மிஸஸ் அன்னா ஓர்ஸஸ்டரும், அவரது புதல்வி மிஸ் ஹெலன்ரூபனும் ராமகிருஷ்ண மிஷனுக்கு 7 லட்சம் ரூபாய் நன்கொடை யளித்திருக்கிறார்கள். இவர்கள் அமெரிக்காவிலுள்ள ரோட் தீவைச் சேர்ந்தவர்கள். அங்கு இராமகிருஷ்ண மடத்துக்கு எவ்வளவோ இவர்கள் உதவி யளித்துள்ளார்கள். இந்த நன்கொடை மடத்தின் தலைமை ஸ்தானமாகிய பேலூரில் ஓர் ஆலயம் கட்ட உபயோகப் படுத்தப்படும்.

... ... ...

## குருடர்களுக்கு நாய் தோழர்கள்

10,000 அல்சேஷியன் நாய்கள் குருடர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும்படி பயிற்சியளிக்கப்பட்டு ஜெர்மெனியிலுள்ள குருடர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாய்கள் குருடர்களை வெகு ஜாக்கிரதையாய் எப்பேர்பட்ட போக்குவரத்து நெருக்கடியான ரோடுகளிலும் அழைத்துச் செல்லுகின்றன. ரோடு விதிகளை அனுசரித்து நடக்கின்றன. இவற்றின் விலை ஒன்றுக்கு சுமார் 75 பவுன்கள் ஆகிறது.

... ... ...

## குருடர்களே சாமர்த்தியசாலிகள்!

சாதாரணமாகக் கண் தெரிந்தவர்களை விட குருடர்களே திறமையுடன் செய்யும் ஒரு வேலையிருக்கிறது. அது ரேடியோ ரிஸீவர்களை ஒழுங்குபடுத்திக் கோர்க்கும் தொழிலாகும். நியூயார்க்கில் ஒரு தொழிற்சாலையில் இந்த வேலைக்கு குருடர்களே நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஸ்பரிசத்தினாலேயே வேலை செய்ய ஆரம்பித்து வெகு துரிதமாக வேலைசெய்ய வெகு சீக்கிரம் கற்றுக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களை வேலை வாங்குபவன் குருடனல்ல.

... ... ...

## காதலர்களின் மரண ஒப்பந்தம்

புதுச்சேரிக்குச் சமீபத்திலுள்ள உப்ளம் என்ற ஊரில் விவாஹமாகாத ஒரு இளைஞனும், ஒரு யுவதியும் மரண ஒப்பந்தம் செய்துகொண்டு தற்கொலை செய்துகொண்டுவிட்டார்களாம். 26 வயதுடைய நடராஜன் என்ற யுவனுக்கும் 17 வயதுடைய இளம் யுவதி கிருஷ்ணவேணிக்கும் நீண்ட காலமாகக் காதலேற்பட்டு புருஷன் மனைவிபோல இருந்து வந்தனர். இரண்டுபேரும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள். பையனின் பெற்றோர்கள் கிருஷ்ணவேணியைச் சட்டப்படி விவாஹம் செய்துகொள்ள அனுமதிக்கவில்லை. நவம்பர் மாதம் 10ந் தேதி இருகாதலரும் பெண் வீட்டுக் கொல்லைக் கிணற்றில் சவமாய் மிதந்து கிடந்தனர். பெற்றோருக்கு புத்தி தோன்றுமா?

... ... ...

## சிறிய காமிரா

இங்கிலாந்தில் ஒரு சிகரட்டுப்பெட்டி அளவும், 8 அவுன்ஸ் எடைக்கும் குறைந்த காமிரா (போட்டோ பிடிக்கும் கருவி) கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதில் 1 அங்குல அகலம், $1\frac{1}{2}$ அங்குல உயரம் உள்ள படங்கள் பிடிக்கலாம். பிலிம்களும், ப்ளேட்களும் உபயோகப் படுத்தலாம்.

# சினிமா செய்திகள்

## தேச பக்தி

ஏ. எல். ஆர். எம். கம்பெனியார் "தேசபக்தி" என்ற படத்தைப் பிடிக்கப் போகிறார்கள். காளி என். ரத்தினம், ஸ்ரீமதி ஏ. கே. ராஜலக்ஷ்மி முதலியவர்கள் இதில் நடிப்பார்கள்.

## ராதா-கிருஷ்ணா

லக்ஷ்மி ஸினிடோன் கம்பெனியார் "ராதா-கிருஷ்ணா" என்ற படத்தைத் தமிழில் எடுக்கப் போவதாயும், அதில் திருவனந்தபுரத்தைச் சார்ந்த உயர் குடும்ப மங்கை ஸ்ரீமதி பானுமதி பிரதம நடிகையாக நடிக்கப் போவதாயும் சொல்லப்படுகிறது.

## ஏகநாதர்

சென்னை யுனைட்டெட் ஆர்ட்டிஸ்ட் கார்போரேஷன் தங்கள் 'ஸேவா சதனத்'தை விரைவாகத் தயாரிக்கிறார்கள். 'ஏகநாதர்' என்ற படமும் தயாரிக்கப்படும். மிஸ். எஸ். டி. சுப்புலக்ஷ்மி இதில் நடிப்பார்.

## பக்த மீரா

சிந்தாமணி பிக்சர்ஸ் லிமிடெட் 'பக்த மீரா' என்ற படத்தை சிறந்த முறையில் நல்ல உயர்தரநடிகர் நடிகைகளைக்கொண்டு தயாரிக்கப்போகிறார்கள். வசந்தாதேவி, ஜெயலக்ஷ்மி முதலியவர்களும், Y. H. ராவ், பி ஏ; ஏ. ஏ. சோமயாஜுலு, பி ஏ., முதலியவர்களும் நடிக்கிறார்கள். 'சிந்தாமணியை' டைரக்ட் செய்து கீர்த்திபெற்ற திரு. ஒய். வி. ராவ் படத்தை டைரக்ட் செய்வார்.

## பூகைலாஸ்

சுந்தரம் சவுண்டு ஸ்டூடியோ கம்பெனியார் 'பூகைலாஸ்' என்ற புராணக் கதையை தமிழ் படமாகத் தயாரிக்கிறார்கள். இதில் பரத நாட்டியத்தில் கீர்த்தி பெற்ற ஹம்ஸதமயந்தி நடிக்கப் போவதாகத் தெரிகிறது.

## விஷ்ணு லீலா

சென்னை ஆர்ஸ் டாக்கீஸ் "விஷ்ணு லீலா" என்ற படத்தைப் பிடிக்க ஏற்பாடு செய்துள்ளார்கள். ஸ்ரீமதி தேவசேனா பிரதம நடிகையாக ஆக்ட் செய்வார். ராஜாசாண்டோ டைரக்டர்.

## கள்வனின் காதலி

பரமேஸ்வர் சவுண்டு பிக்சர்ஸார் 'கல்கி' எழுதிய 'கள்வனின் காதலி' என்ற கதையை படம் பிடிக்கிறார்கள். எல்லிஸ் ஆர். டங்கன் இப்படத்தை டைரக்ட் செய்கிறார்.

## ஜெயபாரதி

மைசூர் போட்டோபோன் ஸ்டூடியோஸார் சமூக நடிகர்களைக்கொண்டு தேசீய படமாகிய 'ஜெயபாரதியை' தயாரித்து வருகிறார்கள். படம் சகல அம்சங்களிலும் சிறந்து விளங்கும் என்று சொல்லப்படுகிறது.

## ஸ்ரீராமானுஜா

எஸ்ஸெல் பிலிம் கம்பெனியாரின் "ஸ்ரீ ராமானுஜா" படம் பிடிக்க ஆரம்பித்தாய் விட்டது. தேசத் தொண்டர்கள் பலர் இதில் நடிக்கிறார்களாம்.

# ஆசிரியர் குறிப்புகள்

## ஸ்திரீகளுக்கு வைத்திய உதவி

நம் நாட்டில் வைத்திய உதவி தேவையான ஸ்திரீகள் எண்ணிலர். பிரசவம், கர்ப்பகாலத்திய வைத்திய சிகிச்சை முதலியன தேவையானவர்களுக் கெல்லாம் கிடைக்கும்படி செய்யவேண்டியது எந்த நாகரிக அரசாங்கத்தின் கடமை என்று கருதப்படும் இக்காலத்தில் சிந்து மாகாண சர்க்கார் செய்யமுன் வந்திருக்கும் ஒரு வழி மிகவும் புகழத்தக்கது. பொதுவாக நம் ஸ்திரீகள் லஜ்ஜை மிகுந்தவர்கள். சாதாரணமாகவே ஆடவர்களுடன் பேச நாணப்படுவார்கள். அப்படியிருக்க வைத்தியர்களிடம் தங்களை பரீட்சைக்கு உட்படுத்திக்கொள்ள மிகவும் நாணப்படுகிறார்கள். இந்த வெட்கத்தினாலேயே பல ஸ்திரீகள் வைத்திய சிகிச்சை பெற முன்வராதபடி தங்களுக்குள்ளேயே கஷ்டப்படுகிறார்கள். ஆடவ டாக்டர்களிடம் தங்களுடைய நோய்கள் சம்பந்தமான மர்மங்களைச் சொல்லிக்கொள்ள படித்த மாதர்களே சங்கோசப்படுகிறார்கள். எனவே பெரும்பான்மையான படிக்காத ஸ்திரீகள் சங்கோசப்படுவதில் ஆச்சர்யமில்லை. இந்த நிலைமையை உத்தேசித்து சிந்து சர்க்கார் எல்லா ஜில்லா ஆஸ்பத்திரிகளிலும் ஸ்திரீ டாக்டர்களை நியமித்து ஸ்திரீ வியாதியஸ்தர்களுக்கு சிகிச்சைசெய்ய ஏற்பாடு செய்துள்ளார்கள். இது பல மாகாண சர்க்கார்களும் பின்பற்றக்கூடிய வழியென்று நாம் கூறுகிறோம்.

நம் மாகாண சர்க்காரும் தற்சமயம் சுகாதாரத்திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ சட்டம் செய்யவும் போகிறார்கள். அதில் முனிஸிபாலிடிகளும், இதர ஸ்தல ஸ்தாபனங்களும் தங்கள் ஆஸ்பத்திரிகளில் ஸ்திரீகளுக்கு சிகிச்சை செய்ய பிரத்தியேகமாக ஸ்திரீ டாக்டர்களை நியமனம் செய்யவேண்டும் என்று ஒரு விதி ஏற்படுத்தினால் மிகவும் நன்மையாக இருக்கும். நம் மாகாணம் சம்பந்தப்பட்டமட்டில் போதிய எண்ணிக்கை யோக்யதாம்சம்பெற்ற ஸ்திரீ டாக்டர்கள் அகப்படுவார்களோ என்ற கவலை வேண்டியதில்லை. வருஷா வருஷம் தகுந்த நம்பர் பெண்கள் எம். பி. பி. எஸ்., எல். ஸி. பி. எஸ்., முதலிய பரீட்சைகளில் தேறி வருகின்றனர். அநேகருக்குத் தகுந்த உத்தியோகம் கிடைக்கவில்லை. இவர்கள் ஜீவனோபாயத்திற்காக இதர மாகாணங்களுக்கோ, சுதேச சமஸ்தானங்களுக்கோ செல்லாமல் நம் மக்களுக்கே சேவை செய்யுமாறு செய்தால் நலம். அவர்களின் சேவை நம் மாகாணத்துக்கே அத்தியாவசியமாயிருக்கும்பொழுது ஏன் அவர்கள் வேறு இடங்களுக்குப் போகும்படி விடவேண்டும்? தற்சமயம் சுகாதார மந்திரியாக இருக்கும் டாக்டர் ராஜன் இதுபற்றி தன் கவனத்தைச் செலுத்துமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம். இதனால் ஒருபக்கம் மாதர்கள் இலகுவாக வைத்திய உதவிபெற வழிசெய்வது மன்னியில் வேலையில்லாமல் திண்டாடும் வைத்தியப் பட்டம் பெற்ற சகோதரிகளின் வாழ்க்கைப் பிரச்சினையும் தீர்ந்துவிடும். நமது ஸ்திரீ சட்டசபை அங்கத்தினர்களும் இது விஷயத்தை சர்க்காரிடம் வற்புறுத்த வேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## திரு. வார்க்கியின் வரட்டு வாதம்

மஹாத்மா காந்தியடிகளின் வார்தா கல்வித்திட்டத்தில் எலிமெண்டரி கல்வி போதிக்க ஸ்திரீ உபாத்தியாயினிகளே தகுந்தவர்கள் என்றும் சிறு குழந்தைகளின் இயற்கையை நன்கு உணர்ந்து அவற்றுக்கு அன்பாக அறிவு புகட்ட உகந்தவர்கள் மங்கையர்களே என்றும்

கருதப்பட்டிருக்கிறது. ஆனால் சில நாட்களுக்குமுன் கல்வி மந்திரியின் பார்லிமெண்டு காரியதரிசியான திரு. வி. ஜே. வார்க்கி அத்திட்டத்தைப் பற்றிப் பேசும்போது சில விசித்திரமொழிகள் சொல்லியிருக்கிறார். "எலிமெண்டரி பாடசாலையில் பையன்களுக்கும் ஸ்திரீ உபாத்தியாயினிகளே கல்வி போதிக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. நம்முடைய நோக்கம் சிறுவர்களையும் பேடிகளாக்க வேண்டுமென்பதானால் ஸ்திரீ உபாத்தியாயினிகள் அதைச் செவ்வனே செய்துவிடுவார்கள். ஆனால் தங்கள் குழந்தைகளை வீரம் மிக்கவர்களாயும், ஆண்மையுள்ளவர்களாகவும் ஆக்கவேண்டுமானால் அதற்கு உபாத்தியாயர்களே உகந்தவர்கள். எனது குமாரனை ஸ்திரீ உபாத்தியாயினிகளால் கல்வி போதிக்கப்படும் ஒரு கான்வென்ட் பள்ளிக்கூடத்தில் விட்டிருந்ததால் அவன் தன் ஆண்மை பூராவும் இழந்துவிட்டான். ஆகையால் அவனை இப்பொழுது ஆடவ உபாத்தியாயர்களிடம் ஒப்படைத்திருக்கிறேன். ஸ்திரீகளிடம் பயிற்சிபெற ஆண்குழந்தைகளைவிட்டால் அவர்கள் சன்யாசிகளாவார்கள்; அல்லது பெண்தன்மையானவர்களாவார்கள். அஹிம்சா போராட்டத்துக்குக்கூட ஆண்மைவேண்டும். நம் சிறுவர்களிடம் கொஞ்சம் நஞ்சமுள்ள ஆண்மையும் மறைந்துபோகும் அவர்களை உபாத்தியாயினிகளின் வசம் ஒப்புவித்தால்" என்று திரு வார்க்கி சொல்லியிருக்கிறார்.

திரு. வார்க்கி சிறந்த சரித்திராசிரியர் என்றும் அறிவாளி என்றும் நாம் கருதிவந்திருக்கிறோம். சரித்திரத்திலே உலகப் பிரசித்தி பெற்ற வீரரமணிகள், தன்னிகரற்ற அற்புதச் செயல்களைச் செய்து ஆடவ உலகமே ஆச்சரியப்படும்படி செய்த நாரீ ரத்தினங்கள், எத்தனையோ தோன்றி இன்னும் ஜகஜ்ஜோதியாய் பிரகாசிக்கின்றனர் என்பதை ஆசிரியர் வார்க்கி அறியாரா? ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய், ஜோன் ஆப் ஆர்க் முதலிய பெண்கள் பேடிகளா? இன்னும் சரித்திரப் பிரசித்தி பெற்ற வீரர்களும், சூரர்களும், சிறந்த அரசியல் தலைவர்களும் தங்கள் மேன்மைக்குக் காரணம் தங்களின் தாய்மார்கள் தங்களுக்கு பால்யத்தில் அளித்து வந்த பயிற்சியே என்று கூறியிருப்பதை திரு. வார்க்கி மறந்துவிட்டாரா? நெப்போலியன், ஹிட்லர், முசோலினி, கெமால்பாஷா, அஹிம்சா போராட்டத்தின் தலைவர் மஹாத்மா காந்தி முதலியோர் பஹிரங்கமாக தங்கள் சிறப்புக்குக் காரணம் தங்கள் தாய்மார்களே என்று கூறியிருப்பது யாவரும் அறிந்த விஷயமாயிற்றே. இவர்கள் பேடிகளா?

உண்மை இவ்வாறிருக்க திரு. வார்க்கி ஒரேயடியாக உபாத்தியாயினிகளிடம் குழந்தைகள் கல்வி பயின்றால் பேடிகளாகிவிடும் என்று கூற முன் வந்தது ஆதாரமற்ற வரட்டுவாதமே யாகும். இன்னும் சற்று ஆராய்வோமானால் ஆண்களைவிட சத்யாக்ரகப் போரில் பெண்களே அதிக வீரம் காட்டினார்களென்றும் சொல்லுவோம். இன்று ஸ்பெயினிலும், சீனாவிலும் ஸ்திரீகள் தங்கள் தேசத்துக்காக முனைந்து ஆயுதந்தாங்கியும் போராடவில்லையா? இந்திய மங்கையர்கள் தங்கள் புதல்வர்களை பேடிகளாக்கிவிடுவார்கள் என்று சொல்ல திரு. வார்க்கிக்கு எப்படி மனம் துணிந்ததோ? அவரது வார்த்தைகள் ஸ்திரீ சமூகத்துக்கே ஒரு அவமானம் விளைப்பதாகும். எனவே நமது சட்ட சபையில் ஸ்திரீகளின் பிரதிநிதிகளாக வீற்றிருக்கும் சகோதரிகள் தங்கள் தோழர் திரு. வார்க்கி இப்படி பஹிரங்கமாக தங்கள் சமூகத்தையே குறைவாகப் பேசியிருப்பதைக்கண்டு வாளா இருப்பது நமக்குப் பெரிதும் ஆச்சர்யத்தை விளைக்கிறது. அவர்கள் இனியாகிலும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்களென்று நாம் எதிர் பார்க்கிறோம்.



# பஞ்சாங்கம்

| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1937௵ டிசம்பர்௴ ஈசுவர௵ கார்த்திகை - மார்கழி. திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| 1 | 16 | புத | சசி 49-15, விசா 43-39, ரா 26-43, சிவராத்திரி. |
| 2 | 17 | வியா | ● 55-52, அநு 51-17, கோடிகானகன்னிதான தாத |
| 3 | 18 | வெ | பிர 60-0, கேட் 59-9, தி 7-7. [தேசிகன். |
| 4 | 19 | சனி | பிர 2-42, மூல 60-0, 21-43, மூர்க்கர். |
| 5 | 20 | ஞாய | துவி 9-23, மூல 6-52, தி 2-21, ரா 5-38. |
| 6 | கார்த்திகை 21 | திங் | திரி 15-38, பூரா 14-13, ரா 8-18, சதுர்த்தி திதி. |
| 7 | 22 | செவ் | சது 21-14, உரா 20-56, ரா 3-45, அதிதி |
| 8 | 23 | புத | பஞ் 25-48, ஸ்ரீ 26-42, ரா 9-18, பஞ்சமி, நாகபூஜா. |
| 9 | 24 | வியா | ஷஷ் 29-1, அவி 31-7, ரா 21-51, மஹாஷஷ்டி. |
| 10 | 25 | வெ | ஸப் 30-35, சத 33-57, ரா 24-10, மித்ர ஸப்தமி. |
| 11 | 26 | சனி | அஷ் 30-22, பூட் 35-4. [புரம் கடைஞாயிறு. |
| 12 | 27 | ஞாய | நவ 28-17, உட் 34-26, சே 2-49, நவமிதிதி, விறிஞ்சி |
| 13 | 28 | திங் | தச 24-19, ரே 31-53, தி 3-10, ஸத்தியநிதி, திருக்கழுக்குன்றம் 1008 சங்கு அபிஷேகம். |
| டிசம்பர் 14 | 29 | செவ் | ஏகா 18-35, அசு 27-46, தி 18-27, ரா 21-25. |
| 15 | 1 | புத | துவா 11-25, பர 22-8, ரா 20-43, சாபரவி 9-51. |
| 16 | 2 | வியா | திர 3-7, உப 51-2, * 15-29, ரா 22-33, அவமா. |
| 17 | 3 | வெ | ○ 44-47, ரோ 8-12, தி 20-27, சிதம்பர தீர்த்தம். |
| 18 | 4 | சனி | பிர 35-26, மிரு 0-40, உப 52-40, தி 19-6. |
| 19 | 5 | ஞாய | துவி 26-30, புந 46-38, ரு 19-59, ஆருத்ரா தரிசனம். |
| 20 | 6 | திங் | திரி 18-39, பூச 40-56, தி 4-44, திதிதுவயம், கரிநாள். |
| 21 | 7 | செவ் | சது 12-4, ஆபி 36-42, தி 10-41, பஞ்சமிதிதி. |
| 22 | மார்கழி 8 | புத | பஞ் 7-10, மக 34-14, தி 15-28, ரா 26-1. |
| 23 | 9 | வியா | ஷஷ் 4-7, பூர 33-46, ரா 24-11. |
| 24 | 10 | வெ | ஸப் 3-10, உத் 35-24, இயற்பகை, காலபைரவாஷ்டமி. |
| 25 | 11 | சனி | அஷ் 4-20, ஹஸ் 38-59, சே 1-40, கரிநாள். |
| 26 | 12 | ஞாய | நவ 7-23- சித் 44-16, தி 0-45. |
| 27 | 13 | திங் | தச 12-5, ஸ்வா 50-51, சே 3-48, ஏகாதசி திதி. |
| 28 | 14 | செவ் | ஏகா 17-58, விசா 58-15, தி 6-35, அதிதி. |
| 29 | 15 | புத | துவா 24-37, அநு 60-0, தி 9-34, துவாதசி திதி. |
| 30 | 16 | வியா | திர 31-30, அநு 6-8, தி 22-0,பிரதோஷம். |
| 31 | 17 | வெ | சசி 38-18, கேட் 14-1, ரா 8-27. |

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரி௴ 1௳ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர்௴ 8௳ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்ப்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

Printed and Published by Dr. S. Seshagiri Rao, at the Lodhra Press, Royapettah, Madras.





போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

கேவலம் "கிரஹலக்ஷ்மி"

சகல வலிகளையும் போக்கும்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்,

பம்பாய், மதருஸ், கல்கத்தா.

சௌந்தரியத்திற்கு • •

ந் தி ரி ய த் தி ற் கு

**குந்தலகாந்தி தைலம்**


ஸ்திரீகளுக்கு மிகவும் விலையுள்ள ஆபரணங்களைக் காட்டிலும் மயிர் அதிசயமாக இருக்கிறது. இம்மயிர்கள் கறுத்த நிற முடையதாகி, நீண்டும் இருப்பது அபூர்வமாக இருக்கிறது. இத்தைலத்தை தினத்திற் கொருமுறை மயிர்களுக்குத் தடவி வாரிக்கொண்டு வந்தால் மயிர்கள் கறுத்து நீண்டும் வளர்ந்து பார்வைக்கு அழகு தரும். புட்டி 1-க்கு விலை அணா 12.

**கேஸரி போமேட்**

இதை தலை வாருவதற்கு முன் கொஞ்சம் கையிலெடுத்து தலையில் தடவி வாரிக்கொண்டால் மயிர் ரேகைகள் மினுமினுப்பாகவும், அழகாகவும், மிருதுவாகவும் இருக்கும். இது இந்துதேச பேர்போன அத்தர் சேர்த்து தயார் செய்யப்பட்டது. வாசனை யுள்ளதும், வாசனை யில்லாததுமாக இரண்டு விதங்களில் கிடைக்கும். புட்டி 1-க்கு விலை அணா 4.

**கேஸரி குடீரம், ராயப்பேட்டை, மதருஸ்**

159946



# டோங்ரேயின் பாலாமிருதம் என்றால் என்ன?

1. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளுக்கு மேன்மையான டானிக்.
2. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளின் கனச்சுருட்டையும், பலஹீனத்தையும் குணப்படுத்தும்.
3. டோங்ரேயின் பாலாமிருதம் எலும்பை வளர்க்கும் சக்தியைக் கொடுக்கிறது.
4. டோங்ரேயின் பாலாமிருதம் ஜீரணசக்திக்கு உதவுகிறது.
5. டோங்ரேயின் பாலாமிருதம் பலத்தைத் தந்து சுகத்தைக் கொடுக்கிறது.
6. டோங்ரேயின் பாலாமிருதம் அநேக நாட்களாய் கஷ்டப்படுத்தும் இருமலேயும் சாதா ஜுரத்தையும் போக்கும்.
7. டோங்ரேயின் பாலாமிருதம் தித்திப்பானதால் குழந்தைகளால் சந்தோஷத்துடன் சாப்பிடப்படுகிறது.
8. எவ்விதத்திலும் "டோங்ரேயின் பாலாமிருதமே" வளரும் குழந்தைகளுக்கு சரியானதாக யிருக்கிறது.

**எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்**



அநேக தங்கமெடல்கள் பரிசுபெற்ற பிரக்யாதியான

# கேஸரியின் பற்பசை

விலை டியூப் 1-க்கு அணா 8

REGD. No. M-3660 DECEMBER 1937


# QUEEN OF TONICS

ஸ்திரீகளுக்கு ஒரு வரப்பிரசாதம்




## லோத்ரா

கர்ப்பாசய ரோ[illegible] நிவாரணி.